
சும் படம்
·53 • 12 அணா
ஔவையார்
ஜெமினி தயாரிப்பு
கே.பி.சுந்தராம்பாள் நடித்தது

விரைவில் வருகிறது!

சுந்தரி பிக்சர்ஸ்

பெருமையுடன் அளிக்கும்
முதல் சமூகச் சித்திரம்...

வீர சுந்தரி

தமிழ்

கே.பி. ஜானகிராம்
கே.பி.ஜே. சுந்தராம்பாள்

கிருபாநிதி • ஸாயிராம் • அங்கமுத்து • டி.வி.சேதுராமன்
ஜி.என்.ராஜகோகிலம் • பேபி டி. ஆர். ராஜகுமாரி • குமாரி என்.ராஜம்
ஸ்டண்ட் சோமு & பார்ட்டி மற்றும் பலர் நடிப்பது

டைரக்ஷன்: விஸ்வநாத் எம். ஜிங்காடே
தயாரிப்பு: கே.பி.ஜானகிராம் * ஸ்டுடியோ: ஸ்டார் கம்பைன்ஸ்

PSR

ஸ்ரீ சுந்தரி பிக்சர்ஸ் 5-A ஸ்டேஷன் ரோட் கோடம்பாக்கம் • சென்னை 24

நடேஷ் ஆர்ட் பிக்சர்ஸ்
N.A.P
அன்பு
ப்ரொட்யூஸர் & டைரக்டர்
M.நடேசன்
நடிகர்கள்:
T.R.ராஜகுமாரி · T.S.பாலையா
லலிதா · K.ராமசாமி
பத்மினி · K.தங்கவேலு
S.பத்மா · D.துரைசாமி
ருஷ்யேந்திரமணி · மஹாலிங்கம்
K.S.ஆதிலக்ஷ்மி · ஷண்முகம்
T.S.ஜெயா · சுந்தரேசன்
சிவாஜி கணேசன்
ஜூலை 24உ முதல் தமிழ்நாடெங்கும்
வசனம் விந்தன்
சங்கீதம் T.R.பாப்பா
ஸ்டுடியோ: நியூடோன் & சிடாடல்

ஆவணக்காப்ப
89676
ன்னை-600 008.

ஜூலை
31ல்
முதல்
ஜூபிடர்
இன்ஸ்பெக்டர்
JUPITER PICTURES CIRCUIT
டைரக்ஷன்
ஸ்டுடியோ
R. S. மணி .... நெப்ட்யூன்

தமிழ் நாட்டில் பல இடங்களில்
வெற்றிகரமாக நடைபெறுகிறது

படம் 11

காட்சி 12

பேசும் படம்

★ ஆகஸ்டு 1953 ★

1.	கார்ட்டூன்	... 6
2.	'பேசும் படம்' பேசுகிறது	... 7
3.	ஸ்டுடியோ விஜயம்	... 9
4.	இம்மாத நக்ஷத்திரம் – பண்டரிபாய்	... 15
5.	வைஜயந்திமாலா – மூவர்ணப் படம்	... 18
6.	பத்மினி – மூவர்ணப் படம்	... 19
7.	கிரிஜா – வாழ்க்கைச் சித்திரம்	... 20
8.	உலகம் – திரைக்கதை, வசனம்	... 28
9.	தென்னிந்திய நடிகர் சங்கம்	... 33
10.	ஆசை மகன் – இருவர்ணப்பட அநுபந்தம்	... 45
11.	நான் ரஸித்த காட்சி	... 53
12.	தபால் பெட்டி	.. 57
13.	கேள்வி பதில்	... 59
14.	சினிமா எதிர்நோக்கும் புரட்சிகள் —அலெக்ஸாண்டர் கோர்டா	... 70
15.	மின்மினி – திரைக்கதை, வசனம் (சென்ற இதழ் தொடர்ச்சி)	... 73
16.	அன்ப – இருவர்ணப் பட அநுபந்தம்	... 85
17.	பரோபகாரம் – இருவர்ணப்பட அநுபந்தம்	... 89
18.	செய்திச் சுருள்	... 93

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 188, Royapettah High Road, Madras - 14. (Phone: 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor: T. V. Ramanath. Sole Agents for Ceylon: Mohan & Co., Ltd., 66, First Cross Street, Colombo. Sole Agent for Malaya: P. Sivaguru, 27, Scott Road, Kuala Lumpur and 8, China Street, Penang.

Editorial & Publication Offices:

188, Royapettah High Road, Madras - 14

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

பட உலகில் மந்த நிலை

சரிகை:வேஷ்டிக்காரர்: உங்கள் தியேட்டரில் என்ன ஓட்டு கிறீர்கள்?

தியேட்டர் மானேஜர்: ஈ ஓட்டுகிறோம்!

ஒருவர்: தினசரி மூன்று சாட்சிகள் என்று போட்டிருக்கிறீர்களே?
மானேஜர்: ஆமாம்! நான் ஒரு சாட்சி; ஆபரேட்டர் ஒரு சாட்சி; படத்தின் பிரதிநிதி ஒரு சாட்சி, ஆக மூவர்தானே படத்தைப் பார்க்கிறோம்!

'பேசும் படம்' பேசுகிறது

பட உலகில் மந்த நிலை

சமீப மாதங்களில் எல்லா வியாபாரத் துறைகளிலும் மந்த நிலை அதிகரித்து வருகிறது. பணப் பெருக்கமோ, அல்லது மந்த நிலையோ எப்பொழுது ஏற்பட்டாலும் முதன் முதலில் சினிமாத் தொழிலைத்தான் பாதிக்கிறது. இரண்டாவது உலக மகாயுத்தம் முடிவடைந்த பின்னர் சினிமாத் தொழிலில் காணப்பட்ட பணப் பெருக்கமும் உற்சாகமும் வேறு எந்தத் தொழிலிலும் காணப்படவில்லை. அதே மந்தநிலை ஏற்பட்டபோது சினிமாத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டது.

சுதந்திர சர்க்கார் ஆட்சி பீடத்தில் அமர்ந்து நமது தேசத்தில் ஏற்பட்டுள்ள பல பிரச்னைகளை ஒன்றன் பின் ஒன்ருகக் கவனித்து வருகிருர்கள். இதற்கிடையில் இயற்கையன்னை நம்மீது சற்று கருணை காட்டி வருகிருள். நாடெங்கிலும் மழை பெய்து ஜனங்களுக்குச் சற்று ஆறுதல் ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலம் சுபீட்சமாக அமையுமென்று எல்லோரும் எதிர்பார்த்து வருகிருர்கள்.

இந்த நிலையில் சினிமாத் தொழிலிலும் சுபீட்சம் ஏற்படுமென்று எதிர்பார்க்க இடமிருக்கிறது. ஆயினும் சினிமா போன்ற கலைத்தொழில் இதர காரணங்களினுலும் வெகுவாகப் பாதிக்கப்படலாம் என்பதை தொழில் பிரமுகர்கள் கவனிக்க வேண்டும். ஆராய்ந்து பார்க்கும் ஆற்றல் படைத்த ஒவ்வொரு பட முதலாளியும் தற்போதைய மந்த நிலைக்குக் காரணம் என்ன என்பதைக் கண்டு பிடித்திருப்பார்கள். இதர தொழில்களில் காணப்படாத அளவுக்கு மந்த நிலை இக் கலைத்தொழிலில் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அறிந்திருப்பார்கள். பட முதலாளிகள் ஒன்றுகூடி விவாதித்த ஒவ்வொரு கூட்டத்திலும் முக்கிய காரணம் எது என்று விளக்கப்பட்டிருக்கிறது.

சாதாரணமாக ஒரு படத்தின் வெற்றிக்குக் காரணம் படக் கதையிலுள்ள ஜோடிப்பு. கதை ஜோடிப்பு புதுமையான முறையில், ஏற்கனவே வெளிவந்துள்ள படக் கதைகள் போலல்லாமல் புதுமை நிறைந்த முறையில் செய்யப்பட்டிருந்தால் படம் வெற்றி பெற்றிருக்கிறது என்பதையும் பட முதலாளிகள் கவனிக்க வேண்டும். இன்று நமது சினிமாத் தொழிலுக்கு இவ்வகை

யில் புத்துயிர் அளிக்கக் கூடியவர்கள் நமது கதாசிரியர்கள் தாம். புதியபுதிய கருத்துக்களை புதிய முறையில் தீட்டுவதற்கு கற்பனைசக்தி அவசியம். பத்திரிகைத் தொழிலும் பிரசுரத் தொழிலும் கதாசிரியர்களை சன்மானிப்பது போல் பல மடங்கு சினிமாத் தொழில் அவர்களை ஆதரிக்கிறது. அப்படி யிருந்தும் கதாசிரியர்களின் சிந்தனை சக்தி குறைந்து வருகிறதென்றால் அதற்குக் காரணம் புதிய கதாசிரியர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு போதுமான ஆதரவு அளிக்காததுதான். சமூகக் கதைகள் என்று கூறப்படும் ஒரே மாதிரியான குடும்ப விவகாரக் கதைகளையே திரும்பத் திரும்பப் பார்த்து ரஸிகர்கள் அலுத்து விட்டார்கள். இதற்கு முற்றுப் புள்ளி வைக்காவிடில் மந்த நிலையைப் போக்க முடியவே முடியாது. அந்நிய நாட்டு இலக்கியங்களும் நம்மைக் கைவிட்டு விட்டன. இதற்கு முன்பே அத்தைப் பாட்டிக் கதைகளின் சகாப்தம் முடிவடைந்து விட்டது. தற்போதைய தேவை வந்து போன கருத்துக்கள் அல்ல; புதுமை நிறைந்த முன்னேற்றக் கருத்துக்கள்.

சிறந்த எழுத்தாளர்களும் நல்ல பட முதலாளிகளும் ஒன்று சேர்ந்தார்களேயானால் தற்போதுள்ள மந்த நிலையைச் சமாளிப்பது வெகு சுலபம். இவ்விரு தரத்தினரும் சற்று சிந்திக்க வேண்டும்.

விற்பனையாகிறது !

பேசும் படம் மலர் 1953

விலை ரூ. 5

தபாலில் ரூ. 5/8

- ★ கண்ணைப்பறிக்கும் வர்ணப் படங்கள்.
- ★ நக்ஷத்திரங்களே எழுதியிருக்கும் அரிய கட்டுரைகள்
- ★ 1952 வருஷத்திய பட விமர்சனங்கள்
- ★ 'பேசும் படம்' கௌரவ ஜாபிதா
- ★ 1952 வருஷத்திய தினக்குறிப்பு
- ★ தொழில் நிபுணர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள்
- ★ ஏராளமான முழுப்பக்க இருவர்ணப் படங்கள்

இன்னும் பல அம்சங்கள்

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்

சென்னை - 14.

மனோஹராவின் 'மனோஹரா'வில் டைரக்டர் பிரசாத்துடன், பிரமாதமாக நடிக்கும் பிரதான நடிகர்களும் டெக்னீஷியன்களும் என் காமிரா விலே சிக்கினார்கள்.

ஸ்டுடியோ விஜயம்

நமது விசேஷ காமிரா நிபுணர் ஸ்டுடியோக்களைச் சுற்றி வருகிறார்

'யானைக்கும் அடி சறுக்கும்' என்பார்கள். ஒரு சிறிய வாழைப் பழத்தோல் மலைபோன்ற அந்த மிருகத்தை மண்ணில் சாய வைத்துவிடும். இதைப் போலவே சிறு காரணங்களால் பல பெரிய படப்பிடிப்புகள் தாமதப்படுகின்றன; தள்ளி வைக்கப்படுகின்றன.

ஜெமினியிலே ஔவையாருக்கென்று ஒரு பெரிய ராஜவீதி ஸெட் சுமார் எழுபதாயிரம் ரூபாய் செலவில் போடப்பட்டிருந்தது. சென்ற மாத மத்தியில் அந்த ஸெட்டில் படப்பிடிப்பு நடந்தது. ஔவையை சோழ மகாராஜன் வரவேற்கும் அந்தக் காட்சியில் சுமார் 1200 எக்ஸ்ட்ராக்கள் கலந்து கொண்டார்கள். ஏராளமான யானை, குதிரை முதலியவைகளும் இந்தக் காட்சியில் கலந்து கொண்டிருந்தன. இந்தக் காட்சியைச் சுடுவதற்காக கதிரவனின் கருணை வேண்டியிருந்தது. மேகக்



ரோஹிணியின் புரொடக்ஷன் நெ. 9–ல் புதுமுகம் ஜமுனாவை ஒய். ஆர். ஸ்வாமி டைரக்ட் செய்கிறார்.

கூட்டங்களின்றி சுமார் மூன்று மணி நேரம் சூரியன் தோன்றி, இந்தக் காட்சியைப் படமாக்க ஜெமினி பல நாட்கள் காத்திருக்க வேண்டியதாகி விட்டது. சூரியன் கூட இப்போதெல்லாம் சினிமாவுக்கு எதிராகக் கிளம்பி விட்டார் என்று ஹாஸ்யமாகக் குறிப்பிடலாமல்லவா?

'குடும்பம்' படத்தில் இரவல் குரல் கொடுக்கிறார் லீலா.

ஜமுனாவுக்கு புரொடக்ஷன் நெ. 9 நல்ல புகழ்தரும்.

• இதே போலத்தான் பெண் ஸெட்டிலும் இப்படி ஒரு சம்பவம் நடைபெற்றது. இங்கே ஒரு சிறிய செயற்கை 'பவுண்டன்' விஷமத்தனம் செய்து அன்றைய படப்பிடிப்பைத் தள்ளி வைத்துவிட்டது.

'அம்மா! நான் சாகத்தான் வேண்டுமா?' என்று (மனோஹராவில்) கண்ணாம்பாவிடம் கேட்கிருர் கணேசன்.

கண்மணியும், அவள் அத்தை மகன் சுந்தரும் காதலர்கள்; கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிருர்கள். ஆனால் கண்மணிக்கு சுந்தருக்குத் தெரியாமலேயே கல்யாணமாகி விடுகிறது. ஊரிலிருந்து திரும்பிய சுந்தர் இதைக் கேட்டு மனமொடிந்து போகிருன. விரக்தியுடன் திரும்ப நினைக்கும் வேதனை உள்ளம் கொண்ட அவனை கண்மணி தேற்றி தன் வீட்டில் தங்க வைக்கிருள். அன்றிரவு படுக்கையில் படுத்த சுந்த



'சொர்க்க வாசலை' காமிரா மூலம் பார்க்கிருர் டைரக்டர் காசிலிங்கம்.

ருக்கு நித்திரை பிடிப்பதில்லை. அதற்குப் பதில் கடந்த நாட்களின் சம்பவம் ஆனந்தக் கனவாக அவன் நினைவில் எதிரொலிக்கிறது. தண்ணீர் வாரியிறைக்கும் மலர்ப் பூங்காவில் மனம் நிறைந்த தன் காதலியுடன் அன்பை வாரிச் சொரிந்த இன்ப நினைவுகள் அவன் எண்ணத்திலே அலை மோதுகின்றன. இந்தக் கனவுக் காட்சியைச் சித்தரிக்கும் 'தோட்டக் காட்சி' தான் ஏவி. எம். மில் அன்று படமாக்கப்பட விருந்தது.

அஞ்சலிதேவி கண்மணியாக வந்து 'இலவுகாத்த கிளிபோல் ஆகாமல் வா வா!' என்ற பாட்டுக்கு ஏற்ற



'பெண்' விஷயமாகப் பேசுகிருர்கள் டைரக்டர் ராமனும் கதாசிரியர் 'ராவே'யும்.

படி ஒரு அற்புதமான நடனத்தை இங்கு ஆடுகிருராம்.

'பெண்' நக்ஷத்திர ஜாபிதாவில் வைஜயந்திமாலா, நாகய்யா, ஜெமினி கணேசன், பாலசந்தர் போன்ற நக்ஷத்திர நடிகர்கள் இருக்கிருர்கள்.

'மனோஹரா''வுக்காக நெப்டியூ.னில் போடப்பட்ட தர்பார்ஸெட்

''ஏம்மா! என்னை சாகத்தான் சொல்கிறாயா?'' என்று எந்த மகனாவது தன் தாயைப் பார்த்து பரிதாபமாகக் கேட்கும்போது, ''ஆம் நீ சாகத்தான் வேண்டும். அதுதான் என் கட்டளை'' என்று ஒரு தாய் கூறினால் தாய்மை என்ற பதத்திற்கே பொருள் தெரியாத பெண் அவள் என்று தீர்மானமாகிவிடும். ஆனால் மனோஹராவில் சித்தரிக்கப்பட்டிருக்கும் தாயின் பாத்திரம் கொடுமையின் உருவமாகத் தீட்டப்படவில்லை.

• மனோஹரனின் தந்தை புருஷோத்தமன் வேசிப் பித்தனாகி கட்டிய மனைவியையும் துடைத்தெறிந்துவிட்டு, துணையாக தன் அருகில் ஒரு வேசியை சிம்மாசனத்தில் உட்கார வைத்துக் கொண்டு நாடாள்வதை மனோஹரனால் சகிக்க முடிவதில்லை.



மனோஹரனை கிரேனின்மேல் உட்கார்ந்து படம் பிடிக்கிறார்கள் இவர்கள்.

• தாயைப் பார்த்து அப்பொழுது மனோஹரன் கேட்கிறான்: ''அம்மா ஒரு வார்த்தை சொல்லுங்கள். நான் இவர்களை வெட்டி வீழ்த்திவிடுகிறேன்''

ராணி பத்மாவதி பெண்மணிக்கான அடக்கத்தையும் பொறுமையையும் பிரதிபலிக்கும் வகையில் மனோஹரனின் கோரிக்கையை மறுத்து விடுகிறாள். அதற்கு பதில் தன் மகன் அரச தண்டனைக்குள்ளாவதையே விரும்புகிறாள். மனோஹரனுக்கு ஒன்றும் பிடிபடுவதில்லை. அம்மாவிடம் கேட்கிறான். ''அம்மா அப்படியானால் நான் சாகத்தான் வேண்டுமா?''

''ஆம், நீ சாகத்தான் வேண்டும்!''

''அம்மா''

''உன்னைப் பிரிவதற்கு நானே துணிந்து விட்ட போது?''

''அம்மா! அம்மா!''—கண்களில்

புரொடக்ஷன் நெ. 9-ல் ராமராவின் கோபத்தைத் தணிக்க முயலுபவர் சிவராம்.



'சொர்க்க வாச'லில பத்மினியும் டெக்னீஷியன்களும்

நீர் ஆராய்ப்பெருகி நிலை தவறி கீழே மூர்ச்சையாக விழுந்த மனோஹரனிடம் வருகிருள் ராணி.

மனோஹராவில் ராஜாவாக சதாசிவராவ் வருகிருர். ராணி பத்மாவதியாக கண்ணும்பாவும், வேசி வஸந்தசேனையாக ராஜகுமாரியும் நடிக்கிருர்கள். மனோஹரனாக சிவாஜி கணேசன் தோன்றுகிருர். நெப்டியூனில் தமிழ், தெலுங்கு, ஹிந்தி மூப்பாஷைகளிலும் தயாராகும் இப்படம் ஒரு மனோஹர் பில்ம்ஸ் தயாரிப்பாகும்.

(65-ம் பக்கம் பார்க்க)

புன்னகை பூக்கும் இந்தப் 'பெண்' அஞ்சலி தான்.

'சொர்க்க வாச'லுக்கு ஏணி வைப்பவர்கள்.



கீதா வாசனை பாக்குத்தூள்
GEETHA
REGD. SCENTED NUT POWDER

வாக்கில் உயர்ந்தது கீதை

பாக்கில் சிறந்தது கீதா

இயற்கை வாசனைத் திரவியங்கள் இலேசாகச் சேர்த்து இனிய மணம் குணம் ததும்ப தயாரிக்கப் படும்.

கீதா வாசனைப் பாக்குத்தூள்

எல்லோராலும் மகிழ்ச்சியுடன் கேட்டு வாங்கப்படும் இயல்புடையது. கண்ணியம் நிரம்பிய கனவான்கள் உணவிற்குப் பின் கீதாவையே உபயோகிக்கின்றார்கள். நீங்களும் வாங்கி அனுபவியுங்கள்.

தயாரிப்பவர்கள் :

வேல்ஸ் இண்டஸ்ட்ரீயல்ஸ்,

மதராஸ்—21.

அன்பர்களுக்கும்
ஆதரவாளர்களுக்கும்
எமது சுதந்திரதின வாழ்த்துக்கள்

ரூ. 5க்கு
15 ஜூவெல் கைக்கடிகாரம்

ரூ. 5-க்கு ஒரு பவுண்டன் பேனுவும், 15 ஜூவெல் கைக்கடிகாரமும் அடையலாம். அழகுக்கும், உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம்.

American Swiss Watch Supplier
Putli Ghar (P.P.M.) Amritsar.

அமெரிக்க விஞ்ஞானி சமீபத்தில் கண்டுபிடித்த ரேடியோ

மின்சாரமோ, பாட்டரியோ இன்றி, ஸ்பஷ்டமாக நீங்கள் செய்திகளையும் சங்கீதத்தையும் தெளிவாகக் கேட்கலாம். விலை நெ. 555 ரூ. 5. ஸ்பெஷல் நெ. 666 ரூ. 7/8. ஸ்பெஷல் டிலக்ஸ் நெ. 777 ரூ. 9/8. பாக்கிங் மற்றும் ரயில்வே கட்டணம் ரூ. 2/8 5 வருஷத்திற்குள் ஏதாவது பழுது ஏற்பட்டால் இலவசரிப்பேர் செய்ய உத்திரவாதம். உடனே எழுதவும்:

ஸோல் ஏஜண்ட்ஸ் :
AMERICAN RADIO STORE
Putli Ghar (P. P. M.) AMRITSAR

இம்மாத நக்ஷத்திரம்

'பூமாலை'

பண்டரிபாய்

புராணத்தில் கேட்டோம், அருணகிரிநாதனைத் திருத்திய அவன் சகோதரியைப் பற்றி. இன்று திரையில் கண்டோம் ஒரு ஆதர்சச் சகோதரி 'பூமாலை'யை. பெயருக்கேற்றபடி மென்மையான உடலும், உள்ளமும் கொண்ட பூமாலை, வழுக்கி விழும் தன் சகோதரனைத் திருத்துகிறாள். அவனை மட்டுமா? உலகத்திலுள்ள அத்தனை 'தவறிய' சகோதரர்களையும் திருத்துகிறாள்.

பணமிருந்தாலும் குணத்தை விடாதவள் பூமாலை. கள்ளங்கபடற்ற குழந்தைகளிடம் குழந்தையுள்ளத்தோடேயே பழகிய அவள் மாசு மருவற்றவள். ஆனால் தம்பி நேர் விரோதமானவன். பெண்ணைச் சகோதரியாகக் காணமுடியாத அவன் கண்களை அவன் சகோதரி பூமாலை திறந்து விடுகிறாள். ஊனக்கண்ணைப் பிடுங்கி ஞானக்கண்ணை வைக்கிறாள்.

எத்தனையோ மலர்களைக் கசக்கிய பரந்தாமன் உஷாவையும் பாழாக்க வருகிறான் அங்கே தன் சகோதரனைப் பற்றி அறிந்திருந்த பூமாலை இருக்கிறாள். இதையறிந்து ஒதுங்குகிறான் அவன். "...உம்...இதோபார் நான் இருக்கிறேன். உனக்கு வேண்டியது ஒரு பெண்தானே? நானும் ஒரு பெண். உனக்கு வேண்டியது உடல் தானே? வா. என்னிடத்திலும் வா. உன் காம உணர்ச்சிக்கு நானும் பலியாகிறேன். நீ கடந்து வந்த பாதையில் எத்தனை மலர்கள் கசங்கியிருக்கின்றன. திரும்பிப்பார்!" என்று கர்ஜிக்கிறாள். நம் உடல் வியர்க்கிறது. நம்மை அறியாமலேயே நாமும் திரும்பிப் பார்க்கிறோம். பண்டரிபாய் 'திரும்பிப்பார்' படத்தில் பூமாலையாக வந்து, வழுக்கி விழுந்தவர்களின் இதயத்தைத் தொடுகிறார். அவர் அந்தப் பாத்திரத்திற்கு ஜீவனளித்து விட்டார்.

அழும் பாத்திரங்களுக்காகத் துரதிருஷ்டவசமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்ட பண்டரி படிப்படியாக முன்னேறி ஒரு சிறந்த நட்சத்திரமாகி விட்டவர்.

அழகும் திறமையும் இளமையும் கொண்ட பண்டரி இம்மாதத்திய சிறந்த நடிகையாக – இம்மாத நக்ஷத்திரமாக கௌரவிக்கப்படுகிறார்.

விரைவில்
எதிர்பாருங்கள்!
ஸ்ரீ சாயி கானாம்ருதா பிக்சர்ஸ்
புது யுகம்
S.A. நடராஜன் • S.V. சுப்பையா
நரசிம்மபாரதி • முத்துகிருஷ்ணன்
M.S. திரௌபதி • கிருஷ்ணகுமாரி • M. சரோஜா
தயாரிப்பு: ஜி. ராமநாதன் டைரக்ஷன்: கோபு, சுந்தர்
கதை, வசனம், பாட்டு: கா. மு. ஷெரீப் • காமிரா: புருஷோத்தமன் • ஸ்டுடியோ: சியாமளா
PSR

'மனைவியின் மக'னுக்காக ஹேமமாலினி நடனமாடுகிறார்

வைஜயந்தி

★

ஜம்பு புரொடக்ஷன்ஸாரின் "மனைவி
யின் மகன்" படத்தில் இவர் ஒரு
மகளாக இருக்கவேண்டும்

பத்மினி

''ஸ்டில் போடடோவுக்கான போஸ இது!'' என்று சொல்வது போலிருக்கிறதல்லவா? பக்ஷிராஜாவின் பொன்னியில்.

கிரிஜா

வாழ்க்கைச் சித்திரம்

"வாத்தியார் பிள்ளை மக்கு; வைத்தியர் பிள்ளை வியாதிஸ்தன்". என்று பலர் சொல்லுவதுண்டு. ஆனல் இதெல்லாம் சில விஷயங்களில்தான். சாதாரணமாக நம்மில் அநேகர் மக்குப் பிள்ளைகள்தான். அதற்கு வாத்தியார்தான் குற்றவாளியா? இந்தக் காலத்துப் பிள்ளைகள் பலரும் நோஞ்சல்கள்; சுகவீனர்கள்தான். அதற்கு வைத்தியர்கள் என்ன செய்வார்கள்? வாத்தியார்களும் வைத்தியர்களும் அனுவசியமாகத் தாக்கப்படுகிறார்கள், அவ்வளவுதான்.

இந்தக் கலையுலகத்தை எடுத்துக் கொள்ளுங்களேன். கலைஞர்களின் பிள்ளைகள் கலைஞர்களாக இல்லையா என்ன? தமிழ் நாட்டிலே கந்தசாமி முதலியாரைப்பற்றி தெரியாத நாடக கலைஞரே இருக்க முடியாது. அவரது குமாரர் நவாப் எம். கே. ராதா என்பதும் யாவரும் அறிந்ததே. ராதாவை ஒரு சிறந்த நடிகர் என்று கலையுலகம் ஒப்புக் கொள்கிறது. ரஸிக உலகமும் ஒப்புக் கொள்ளுகிறது. அவரை ஒரு பரம்பரை நடிகர் என்று கூறுவது பொருத்தம்தானே? ஏன வசுந்தரா – வைஜயந்தி இல்லையா? இதேபோல வட இந்திய கபூர் குடும்பமும் ஒரு கலைக் குடுமபம்தான். ஆந்திரத்திலும் இதே போன்ற கலைக் குடும்பங்கள் உண்டு. இந்தக் குடும்பங்களில் ஒன்றுதான் திலகம் குடும்பமும். கலை உலகத்தினருடன தொடர்பு கொண்டு இளம் வயதிலேயே கலையைத் தன்னுள் ஐக்கியப்படுத்த முயன்று ஓரளவு வெற்றியும கண்டவர் இந்த திலகம்.

கலையுலகம் என்று நாம் கௌரவப்படுத்தும் இதே உலகத்தை, துரதிருஷ்டவசமாக நம் முன்னோர் (சமீப காலத்தவர்கள் தான்) ஒரு கேவலமான தொழிலாக நினைத்து ஒதுக்கி விட்டிருந்தார்கள். சுமார் எட்டு மணி நேரம் 'ஒரிஜின'லாக ஒரு கதையை ஏராளமான நடிகர்களைக் கொண்டு நாடகமாக நடித்தும் அந்தச் சமூகத்தினர் பெற்ற தொகை ரொம்பவும் குறைவாக இருந்தது. ஜாதித் துவேஷம் அதாவது ஹரிஜனன்—மட்ட ஜாதிக்காரன் என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த மனிதர்களுக்கு அடுத்தபடியாக, தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்பட்டவர்கள் இந்த நாடக சமூகத்தினர் தான்.

மக்கள் திரண்டு வந்து பார்ப்பார்கள். ஆனல் கதையையும் நடிப்பையும் ரஸிப்பார்களே ஒழிய அந்தக் கலைஞர்களை மதிக்கவே மாட்டார்கள். ஆனல் கலைஞன் வெளியுலகை அதிகம் மதிக்காமல தன் உலகத்தைக் கூடியவரை சீர்படுத்தி ஜாதி துவேஷத்தை ஒழித்து விட்டான். போகப் போக இந்தக் கூத்தாடி உலகம் நாடக உலகமாக மதிக்கப்பட்டு கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டார்கள். துணிச்சல்காரர்கள் சிலர் இந்த உலகில் பிரவேசித்ததால் 'குடும்பத்தினர்'களும் நடிக்க ஆரம்பித்தனர். அறிஞர்களும் அழகிகளும்

சேர்ந்து அறிவூட்டி கண்களுக்கு விருந்தளிக்கவும் செய்தனர். இப்படிப்பட்ட ஒரு நாடக கலைஞர்தான் திலகம்.

நாடக உலகம் எப்படிப்பட்டதோ? நாம் அதனுடன் ஈடுபாடு கொண்டால் எப்படி யிருக்குமோ, என்றெல்லாம் முதலில் திலகம் யோசனை செய்தார். ஆனால் கலைக்கு அவர் அர்ப்பணமாக விருந்ததை அவரால் தடுக்க முடிந்ததா? நாடக உலகில் புகுந்தார். குளிர் விட்டுவிட்டது! அவ்வளவுதான். காலடியில் புகழ் ஏணி! படிப்படியாக முன்னேறினர் அவர்!

டிவாடா குஎன்ற ஊர் மிகவும் அழகாக இருக்குமாம். கிருஷ்ணு ஜில்லாவிலுள்ள அந்தக் கிராமம் இயற்கைச் சிறப்புகளை உடையதாக, "இங்கே குடி (யிருக்க)வாடா" என்று அழைப்பது போலிருக்குமாம்! (அபபடி ஒன்றும் கிடையாது என்று யாரும் சண்டைக்கு வந்து விடாதீர்கள்!) இந்தக் கிராமத்தைச் சேர்ந்த திலகம் குடிவாடாவிலுள்ள ஒரு நாடகக் கழகத்திலே சேர்ந்து பல நாடகங்களில் நடித்து வந்தார். புராணத்திலிருந்து, சரித்திரம், கிராமியம், சமூகம்வரை எல்லா நாடகங்களிலும் பங்கு கொண்டு புகழும் பணமும் பெற்றார்.

இந்த நாடகக் கழகத்தில் பிரபல ஆந்திர நடிகர்களான ஸி. எஸ். ஆர். ஆஞ்சநேயலு, ரகுராமய்யா, பந்தா

கனகலிங்கேஸ்வர ராவ், ஏ. நாகேஸ்வர ராவ், கபிலவாய் லேட் ராமநாத சாஸ்திரி முதலியோர் நடித்து வந்தனர்.

ஒரு பெண்–கட்டுவிடாத தேகம், நாடக உலகில் பிரகாசிக்கிருள் என்ருல் பட உலகம் சும்மா விட்டு விடுமா என்ன? திலகம் நாடக உலகில் 'திலக'மாய் விளங்குவதைப்போலப் பட உலகிலும் திலகமாக விளங்க வேண்டும் என்ற ஆசை அவரைத் தவிர மற்றும் சிலருக்கும் ஏற்பட்டது அதன் பலனுகச் சென்னைக்கு திலகம் வர நேரிட்டது.

சரஸ்வதி டாக்கி டிஸ்டிரிப்யூடர்ஸ் ஸ்தாபனத்தினர் அந்தக் காலத்தில் பட உலகில மிகவும் புகழ்பெற்ற வினியோகஸ்தர்களாக இருந்தனர். அவர்களது விளம்பர முறைகளும் உழைப்பும் பல படங்களுக்குப் புகழையும் ஏராளமான வசூலையும் தந்தன. அந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த குரு கூறி சுப்பாராவ் மிகவும் நல்லவர். பட உலகில் நிறைய அனுபவம் வாய்ந்த அவர் நடிக, நடிகையரைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்திலும் சூரர்.

அப்போது சென்னை மோஷன் பிக்சர்ஸ் ஸ்டுடியோவில் 'சண்டிகா' என்ற தெலுங்குப் படம் தயாராக ஏற்பாடுகள் நடந்தன. மோஷன் பிக்சர்ஸ் ஸ்டுடியோதான் தற்போது ஜெமினி ஸ்டுடியோவாக விளங்குகிறது. இந்த சண்டிகாவை ஆர். பிரகாஷ் டைரக்ட் செய்தார். கண்ணும்பா, காலஞ்சென்ற வேமுரி கக்கய்யா, பாம்பே லலிதா (சரிதா தேவி) லேட் பி. ராகவாச்சாரி முதலியோர் நடித்தனர். பிரபல காமிரா நிபுணர் கமால்கோஷ்தான் அந்தப் படத்தின் ஒளிப்பதிவாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த சண்டிகாவிலே நடிக்க குரு கூறி சுப்பாராவ் திலகத்தை ஏற்பாடு செய்தார். திலகம் சென்னை வந்து நடித்தார். ஆனல் திரும்பி ஊருக்குப் போகும் உத்தேசத்தை அவர் நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. சண்டிகாவில் அவர் நடிப்பைப் பார்த்தோ என்னவோ எச். எம். ரெட்டி அவர்களின் ரோஹிணி பிக்சர்ஸார் அவரை 'ஹானஸ்ட் ரோக்' (சத்யமே ஜெயமே) என்ற தெலுங்கு படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

டைரக்டர் எல். வி. பிரஸாத் இந்தப் படத்தில கதா நாயகனை நடித்தார் திலகம் பிரதம கதாநாயகியாகத்

ன்கு நடித்தார். இந்தப் படம் சென்னை பிராக்ஜோதி ஸ்டுடியோவில் தயாராகியது. இந்தப் படத்தின் மூலம் தெலுங்குப் பட ரஸிகர்களுக்கு திலகம் நன்கு அறிமுகமாகி விட்டார்.

அதிருஷ்டமும் திறமையும் திலகத்திற்குப் பட உலகில் ஒரு நிரந்தர ஸ்தானத்தைத் தேடிக் கொடுத்து விட்டன. சென்னை வாசியாக மாறிவிட்ட அவர் உடனடியாக ரோஹிணி பிக்சர்ஸாரின் 'தெனாலி ராமகிருஷ்ணா' என்ற தெலுங்கு படத்தில் நடிக்க ஒப்பந்தமானார். 'ஹானஸ்ட் ரோக்' குறைந்த செலவில் வெற்றியளிக்கவே, அதைப் போலவே மற்றொரு ஹாஸ்யப் படத்தையும் தயாரிக்க ரோஹிணியார் முன் வந்தனர். ஏறக்குறைய முதல் படத்தில் நடித்தவர்களையே இதிலும் நடிக்க ஏற்பாடு செய்தனர்.

பிரஸாத், திலகம், எஸ். பி. லக்ஷ்மணசாமி முதலியோர் நடித்தனர். இந்த தெனாலி ராமகிருஷ்ணா படத்திலே, திலகத்திற்கு கதாநாயகிகள் பட்டியலில் ஒரு ஸ்தானம் 'கன்பர்ம்' ஆகிவிட்டது! ஆக ஒரு மாதிரியாக நாடக உலகிலிருந்து சினிமா உலகில் புகுந்த திலகம் ஒரு சிறந்த நடிகையெனப் புகழ் பெற்று விட்டார்.

உலக மகா யுத்தத்தின் கோரத்

தாண்டவத்தினால் இந்தியா, முக்கியமாகச் சென்னை பயங்கரமாகப் பாதிக்கப்பட்டது. சென்னையிலே ஜப்பானியரின் அட்டகாசம் எப்படியெப்படியெல்லாமோ இருக்குமென்று யாவரும் அஞ்சினர். யுத்தத்தின் பயங்கரத்தை அறியும் சந்தர்ப்பத்தை இழந்துவிட்டிருந்த இந்தியர்கள்—ஸிவிலியன்கள் இந்தக் கலாட்டாவில் உயிர் மிஞ்சினால் போதும் என்ற அளவுக்கு வந்துவிட்டனர். சென்னையெங்கும் களேபரம். சொத்து சுதந்திரம் எல்லாவற்றையும் விட்டு ஊரை விட்டு ஓடுவதிலேயே குறியாயிருந்தார்கள் மக்கள். அவரவர்களுக்குப் பிறந்த ஊரின் மீது அபார பிரியம் ஏற்பட்டு விட்டது! யுத்தத்தின்

சாயலே இல்லாத கிராமங்களுக்கு மக்கள் விழுந்தடித்துக் கொண்டு ஓடினர். அநியாய வாடகை வாங்கியவர்கள், வீட்டில் விளக்கேற்றக் கூட வகையின்றி நாட்டுப்புறங்களுக்கு ஓடி அநியாய வாடகை கொடுக்க நேர்ந்தது!

இந்தத் தாண்டவம் கலையுலகத்தையும் வெகுவாகப் பாதித்து விட்டது. அனேகமாக எல்லா படக் கம்பெனிகளும் வெளியூருக்குப் பறந்தன. கலைஞர்களும் நீண்ட ஓய்வுக்கு ஊருக்குப் போனார்கள். ஒருநாள் ஆந்திரத்திற்குக் கிளம்பிய வண்டியில் திலகமும் இருந்தார். திலகத்திற்கு இப்போது மற்ற எதையும் விட—ஏன் தன்னுயிரையும் விடத்தான்—புத்திரி பாசம் மேலிட்டு மனம் குடிவாடாவை நோக்கிப் பாய்ந்து துடித்தது. ஆனால் வண்டியால் அப்படி மனோவேகத்தில் போக முடியுமா? குறித்த நேரத்திற்குச் சற்றுத் தாமதமாகவே குடிவாடாவை அடைந்தது வண்டி!

வீட்டுக்குச் சென்றவுடனேயே 'அம்மா' என்று ஓடிவந்து மார்பில் முகம் புதைத்த பெண்ணை உச்சி மோந்து, 'கண்ணே கிரிஜா! எப்படியம்மா இருக்கே?'' என்று குசலம் விசாரித்தார் திலகம். மகள் கிரிஜாவா? அது யார் அது? இது வரையில் அவர் அட்ரஸையே காணோமே என்கிறீர்களா? அப்படி வாருங்கள் வழிக்கு!

கிரிஜாதான் திலகத்தின் மகள். திலகம்தான் கிரிஜாவின் தாய். கலைஞர் கலையுலகின் பொதுச் சொத்து. கலையுலகில் ஈடுபட்ட திலகம் கிரிஜாவை ஈன்றெடுத்தவர் என்றால் கலையுலகின் ஒரு அன்பளிப்பு அவர் என்றுதானே கொள்ள வேண்டும்?

குடிவாடாவில் 1936-ம் வருஷம் ஜூன் மாதத்தில் திலகத்தின் ஏக புத்திரியாகப் பிறந்தார் கிரிஜா. தாயார் திலகம் கலை உலகத்தில் ஈடுபட்டாரே ஒழிய அதன் சாயையே படாத வகையில் வளர்ந்தார் கிரிஜா. அவருக்கு நாடகங்களில் நடிக்க வேண்டும் என்று தோன்றவில்லை. அம்மாவின் நாடகங்களைப் பார்க்க வேண்டுமென்பதிலும் பிரமாதமான பிரியம் ஏற்படவில்லை. ஆனால் நேர்மாறாகப் படிப்பில் அவர் வெகுவாகக் கவனம் செலுத்தினார். இளம் வயதிலிருந்தே மிகவும் சூடிக்கையாக இருந்தார் கிரிஜா.

திலகத்திற்குத் தன் மகளின் மேல் உயிர். கலையும் கிரிஜாவும் அவருக்கு இரு கண்களாக இருந்தன. நாடகங்களுக்குப் போக வேண்டியது. திரும்பியவுடனே புத்திரியுடன் கொஞ்ச வேண்டியது இவைதான் அவருக்கு மிகவும் பிடித்தவை—மகிழ்ச்சி தந்தவை.

தாயின் பரிவும் அன்பும் கொண்டிருந்தபோது கிரிஜாவின் கல்வி வளர்ச்சியடைந்ததில் கேட்கவேண்டுமா? கிரிஜா சிரத்தையுடன் படித்து பத்தாவது வகுப்பு வரை மட்டமடிக்காமல் தேறி வந்தார்! குடிவாடா ஹைஸ்கூலில் அவருக்கு நல்ல பெயர். புத்திசாலி என்று பெயரெடுத்தார்.

இந்தச் சமயத்தில் தான் யுத்த பீதி காரணமாகக் குடிவாடா திரும்பினார் திலகம். ஊர் திரும்பி சும்மா இருந்தால் என்ன செய்வது? சம்பாதித்த பணத்தைச் செலவிட்டுக் கொண்டு ஊரில் இருந்தால் விரைவில் அது

தீர்ந்ததும் திண்டாட வேண்டியது தானே! போதாக்குறைக்குப் 'பொட்டைக்குட்டி'யை வைத்துக் கொண்டு என்ன செய்வது?

திலகம் யோசித்தார். இதற்கு ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டும் என்று யோசித்துக் கொண்டேயிருந்தார். அவரால் வீட்டில் சும்மா உட்கார்ந்திருக்க முடியவில்லை. ஏன் தானே ஒரு நாடகக் கம்பெனியை ஆரம்பிக்கக் கூடாது? இந்த யோசனை விரைவிலேயே உருவாகி விட்டது. திலகம் உடனடியாக ஒரு நாடகக் கம்பெனியை ஆரம்பித்து விட்டார். அவரது நாடகங்களுக்கு ஆந்திரத்தில் ஓரளவு வரவேற்பிருந்தது.

ஆனால் அவர் பட உலகில் மீண்டும் பிரவேசிக்க வேண்டும். அவரது குமாரி கிரிஜாவையும் புகுத்தி நக்ஷத்திரமாக்க வேண்டும் என்றிருக்கும் போது அவர் குடிவாடாவிலேயே இருக்க முடியுமா?

எவாகுவேஷனுக்கு ஊருக்குச் சென்றவர், கலாட்டாக்கள் ஓய்ந்ததும் சென்னைக்குத் திரும்ப நேரிட்டது. ஜெமினியின் 'வீர குமாருடு' படத்தில் நடிக்க ஒப்பந்தமாகிய திலகத்துடன் விடுமுறையைக் கழிக்க சென்னை வந்தார் கிரிஜா. அவர் வெறும் வேடிக்கை பார்ப்பவராக வந்தாரே ஒழிய, இங்கே பட உலகம் தன்னை ஆட்கொள்ளப் போகிறது என்பதைக் கனவில் கூட நினைக்கவில்லை.

திலகத்துடன் வந்த கிரிஜாவை டைரக்டர் பிரஸாத் பார்த்தார். நல்ல துருதுருப்பும் இளமையும் கொண்ட படித்த பெண் கிரிஜாவைப் பட உலகில் புகுத்த சம்மதித்து விட்டார்.

தனது அடுத்த படத்தில் எப்படியும் சந்தர்ப்பம் கொடுப்பதாக உறுதி கூறினார். அதே போல சொல்லி நடத்தியும் வைத்தவர் ஒருவர் உண்டு. திலகத்துடன் குடிவாடா நாடக கழக நாடகங்களில் நடித்த கே. எஸ. ராமச்சந்திர ராவ்தான் அவர். தற்போது அவர் ஒரு டைரக்டராகி விட்டிருந்தார். மந்த்ர தண்டம் தெலுங்கு படத்தை அவர்தான் டைரக்ட செய்தார் அந்தப்படத்தில் நடித்த ஹாஸ்ய நடிகர் சிவராவ் அல்லெயட் புரொடக்ஷன்ஸ் என்ற பெயரில் ஒரு படக்கம்பெனியை ஆரம்பித்தார். அவரிடம் கே. எஸ். ராமச்சந்திரராவ் கிரிஜாவைப் பற்றிச் சிபாரிசு செய்தார்.

'பரமானந்தய்ய சிஷ்யுலு' என்ற முழு நீள ஹாஸ்யப் படத்தைத் தயாரித்தார் சிவராவ். அந்தப படத்தில் நாகேஸ்வர ராவ், லக்ஷ்மிராஜ்யம், ரேலங்கி, ஸி. எஸ். ஆர் ஆஞ்சநேயலு, சீதா, கனகம் ஆகியோருடன் அவரே நடிக்கவும் செய்தார். அதன் டைரக்டரும் அவர்தான். புஷ்பலதா கூட அதில் ஒரு சிறு பாத்திரத்தில் தோன்றினார். கிரிஜாவுக்கு இரண்டாவது கதா நாயகியாக (ராஜ்யத்தின் சகோதரியாக) நடிக்கச் சந்தர்ப்பமளிக்கப்பட்டது.

ஹேமா என்ற அந்தப் பாத்திரத்தில் கிரிஜா நடித்ததே பலருக்குத் தெரியாது. அவருக்கும் அந்தப் பாத்திரம் அடியோடு திருப்தி யளிக்கவில்லை. ஆக அவரது முதல் படம் அவருக்குத் தோல்வியாகவே அமைந்து விட்டது. அதனால் அவரோ திலகமோ கலங்கிவிட வில்லை.

அடுத்தபடியாக தமிழ் நாடு டாக்கீஸாரின் 'அதிருஷ்ட தீபுடு'வில் கிரிஜா நடித்தார். டைரக்டர் சௌந்தரராஜன் அவர் விஷயத்தில் நன்கு சிரத்தை காட்டினார். சரிபார்ப்பதற்காகட் போடப்பட்ட அந்தப் படத்தின் சில காட்சிகளை 'மூவியோலா'

வில் பார்த்தார் டைரக்டர் பி. புல்லய்யா. தமிழ் நாடு ஸினி லாபரெட்ரியில் இது நடந்தது. புல்லய்யாவுக்கு கிரிஜாவிடம் நல்ல அபிப்பிராயம் விழுந்து விட்டது. ஆந்திரர்களுக்குள்ள கட்டுப்பாடும் சேர்ந்து கொண்டு, அவரை முன்னுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற தீர்மானத்தை ஏற்படுத்தி விட்டது.

புல்லய்யா ராகினியின் முத்திரையில் 'தர்ம தேவதா'வைத் தயாரிக்கத் திட்டமிட்டிருந்தார் அப்பொழுது.

(99-ம் பக்கம் பார்க்க)

சொஸைடடி பிக்சர்ஸாரின்

"உலகம்"

திரைக்கதை – வசனம்

காட்சி–1

[இந்தப் பூவுலகம் இருக்கிறதே, இது விசித்திரமானது. ஆஸ்திகமும் நாஸ்திகமும் இங்கே அடிபடும். காதலர்களுக்கு இது சொர்க்க பூமியாகத் தோன்றும். சம்சாரிகளுக்கு இது நரகம்! இந்த உலகத்திலே நடக்கும் நிகழ்ச்சிகளுக்குக் கணக்கே இல்லை. உலகம் என்பதைப் பொதுவாக எப்படி நோக்க

கதை :

ஸ்ரீமதி முனுஸ்

வசனம் :

ஸ்ரீமான் முனுஸ்

வேண்டும்? உலகம் உண்மையில் எது? கற்பனையில் காணப்படுவதை விட நடைமுறையில் எப்படி எப்படி இருக்கிறது—இருக்க முடியும் இந்த உலகம்? இதோ நாம் வந்துவிட்டிருக்கிறோமே, பார்த்துவிடலாம் இந்த உலகத்தை!]

சபாபதி கொஞ்சம் சொத்துள்ள ஒரு இளைஞன். ஒருநாள் மீனா என்ற அழகியைச் சந்திக்கிறான். தாய் தந்தையரை இழந்த அவன், சாகுந்தறுவாயிலிருக்கும் பாட்டியின் வேண்டுகோளின்படி, வீரய்யா மூலம் ஏழை மீனாவை மணக்கிறான். அவன் வரதக்ஷிணைப் பேயை ஒழிக்க வேண்டுமென்ற கருத்தையுடைய நேர்மையாளன். அந்த வருஷம் பஞ்சாலையின் தொழிலாளர் சங்க ஆண்டு விழாவை அவன் தலைமை வகித்து விசேஷமாகக் கொண்டாட ஏற்பாடுகள் நடக்கின்றன. ஆலையில் தொழிலாளர்கள் இது பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மேஸ்திரி சுந்தரம் மேற்பார்வை செய்கிறான்.

சுப்பு: இந்த வருஷம் சங்கத்தின் ஆண்டு விழா ரொம்ப பிரமாதமாயிருக்குமாமே!

மற்றவன்: விழாவிலே நம்ம சபாபதியில்ல தலைமை வகிக்கப் போறாரு!

வேறொருவன்: எல்லாம் அந்த உழைப்பும் அதிருஷ்டமும் தானப்பா ஆளைத் தூக்கிட்டுது!

சுப்: அது இருக்கட்டும்! அந்தத் தடிப்பயலைப் பார்த்தா பயமா இருக்குடா!

மற்: அவனுக்குச் சாப்பிட மட்டுந்தான் தெரியும்!

சுந்தரம் அங்கே வருகிறான்.

சுந்: ஏண்டா சுப்பு, சோம்பேறிப் பயலே! நீயும் சும்மா இருந்துகிட்டு அடுத்தவனையும் கெடுக்கப் பாக்கறியே?

சுப்: இல்லே மேஸ்திரி அய்யா! நான் சும்மா இருக்கலியே! இவுங்க இட்டே கேட்டுப்பாருங்க.



சுந்: அடே! எனக்கு நாலு கண்ணுடா! தெரியுமா? மத்தவங்க எவ்வளவோ வேலை செய்யறாங்க. நீ என்னடா செய்யறே?

மற்றொரு இடம். இடைவேளையில் தொழிலாளிகள் பேசிக்கொண்டே சாப்பிடுகிறார்கள்.

சுப்: அவன் கிடக்கிறான், மடப்பயல்!

விஸ்: மேஸ்திரியோடு கோவிச்சுக்கிட்டு நீ வேலையை ஒழுங்காகச் செய்யாட்டா யாருக்கு நஷ்டம் தெரியுமா?

சுப்: முதலாளிக்கு நஷ்டம். நமக்குச் சம்பளந்தானே!

விஸ்: தயாரிப்பு குறைஞ்சா உலக மக்களுக்கே நஷ்டம். அதனாலே உனக்கு நஷ்டம். உன் குடும்பத்துக்கே நஷ்டம்.

சுப்: உம். வேலைக்கேத்த கூலி கொடுக்காட்டாலும் வேலையா செய்யச் சொல்றே?

விஸ்: இந்தப் பாரு! பணத்தின்மேல் ஆசையில்லாதவன் பக்தன் அல்லது பித்தன். நீ மனிதன். வேலைக்குக் கூலி தராட்டா நீ கேக்கணும். அதை விட்டுட்டு விட்டிலே போய் உட்கார்ந்துட்டா நம்ம குழந்தை குட்டிக்கு யார் சோறு போடுறது? இப்போ வேலை செஞ்சே பசி தீரல்லே! வேலையே செய்யாட்டா?

சுப்: ஆறு முதலாளிமார்கள்லே...

விஸ்: நல்லவங்களும் இருக்காங்க; கெட்டவங்களும் இருக்காங்க. ஏம்பா சுப்பு. நம்பள்ளே நல்லவங்க கெட்டவங்க இல்லியா?

சுப்: ஆமா ஆமா! இருக்காங்க இருக்காங்க.

விஸ்: சுப்பு! நாம் சிந்தும் ஒவ்வொரு துளி வியர்வையும் ஆறாகப் பெருகிக் கொண்டு வருகிறது. அதிலே நீஞ்சும் கல்நெஞ்சம் படைத்த முதலாளி

மார்கள் தூண்டிலில் அகப்பட்டுக் கொண்டு துடிக்கும் மீனைப் போலத் துடிப்பார்கள் நம் கஷ்டத்தின் பலனை நாம் அனுபவிக்கா விட்டாலும் நம் மக்கள் அனுபவிக்கப் போகிறார்கள். சுப்பு! பயப்படாதே! தைரியமாயிரு.

தொழிலாளர் சங்கத் தலைவர் நாகய்யாவின் வேண்டுகோளுக்கிணங்க மீனு கார்னிவலைத் திறந்து வைக்கிறாள். கேளிக்கைகள் அமர்க்களப் படுகின்றன. சிறுத்தையுடன் மனிதன் சண்டை; சர்வதேச மல்யுத்தம்; 'நாட்டுக் கட்டை' மல்யுத்தம் எல்லாம் முடிவுற்றதும் தலைவன் சபாபதி பேசுகிறான்.

சபா: உற்பத்திக்கு முதலும் தொழிலும் முக்கியமென்பதை உங்களுக்கு நான் ஞாபகமூட்டுகிறேன். முதல் வைத்திருப்போர் தொழில் செய்வோருடன் நியாயமாக நடப்பது அவசியம். எத்தனையோ முதலாளிமார்கள் பண மமதையால் சூழ்வினைக்காளாகி, அடாத செயல்களைச் செய்துகொண்டிருப்பதை நாம் நேரில்தான் காண்கிறோம். ஆனால் நல்லவர்களுக்கு எப்போதுமே இந்த உலகத்தில் இடம் இருக்கிறது. தொழிலாளர்களாகிய நீங்கள் உங்கள் வேலையைப் பிசகில்லாமலும் சுணங்காமலும் செய்தால்தான் இந்த உலகத்தாருக்கு க்ஷேமம். இதில் நீங்கள் தவறிவிடாதீர்கள், நான் உங்களுள் ஒருவனாக

பாத்திரங்கள்

எம். வி. ராஜம்மா	லீலா
டி. ஆர். ரஜனி	மீனு
பி. கே. சரஸ்வதி	லலிதா
எம். எஸ். திரௌபதி	பிரேமா
டி. கே. பகவதி	சபாபதி
டி. ஈ. வரதன்	மோகன்
வீரப்பா	சங்கர்
குமரேசன்	சந்தர்

இருந்தேன். இப்போதும் இருக்கிறேன். இனிமேலும் இருப்பேன். இது உறுதி! இப்போது தொழிலின் பெருமையைப் பற்றியும் தொழிலாளர்களின் நிலையைப் பற்றியும் ஸ்ரீமான் வி. நாகய்யா அவர்கள் பாடுவார்.

நாகய்யா பாடியதும் விழா இனிது முடிவடைகிறது.

காட்சி 2

வருஷங்கள் பல கழிகின்றன. சபாபதிக்கு இப்போது இரு புத்திரர்கள்: சங்கரும் மோகனும். மணவயதடைந்த சங்கருக்குப் பெண் பார்க்கச் சொல்லியனுப்பியிருக்கும் போது அதைக் குறிப்பிட்டு மோகன் சங்கரைக் கேலி செய்கிறான்.

மோக: அண்ணா! அப்பாவும் அம்மாவும் நம்ப அய்யாசாமியிடம் உங்களுக்குப் பெண்ணைப் பார்க்கச் சொல்லியனுப்பியிருக்காங்க. உங்க அபிப்பிராயத்தைக் கேட்டாங்களா?

சங்: பெற்றோர் சொற்படி நடப்பதுதான் பிள்ளைகளின் கடமை! அவங்க பார்த்து ஒரு கல்லைக் கட்டிக்கச் சொன்னாலும் நான் கட்டிக்குவேன்.

மோக: நல்லா இருக்கு சமாசாரம்! பெண்ணைக் கட்டிக்கறது நீங்களா அல்லது அவங்களா? என்ன அண்ணா, மூளையில்லையா?

சங்: சரி சரி! உன் படிப்பு அவ்வளவு தாண்டா, போ!

பெற்றோர் விரும்பியபடியே பத்மாவை மணக்கிறான் சங்கர்.

* * *

லலிதா மோகனுடன் படிக்கும் கல்லூரி மாணவி அவளுக்கு மோகனின்மேல் தீராக்காதல்! ஒரு நாள் கல்லூரியை விட்டு வெளியே வரும்போது அவள் தன் உள்ளக் கருத்தை வெளியிடுகிறாள்.

லலி: உம். மோகன்! உன் அண்ணாவின் கல்யாணமோ முடிந்துவிட்டது. இனிமேல் உன் கல்யாணம்!

மோக: எனக்குக் கல்யாணமா? முதலில் உனக்கு லலிதா! பிறகு எனக்கு...

லலி: இது என்ன புதிர்?

மோக: புதிர்! நிஜத்தைத்தான் சொல்கிறேன் லலிதா!

லலி. என்னை யாரும் காதலிப்பதற்கு முன் உன்னை ஒரு பெண் காதலிக்கிறாள் என்று வைத்துக்கொள். அவளுக்கு நீ என்ன பதில் சொல்லுவாய்?

மோக: இப்பொழுது புதிர்போடுவது நீயா நானா?

லலி: இது புதிர் அல்ல. உன்னிடமுள்ள பாசத்தால்தான் கேட்கிறேன்.

மோக: அப்படியானால் உன் கல்யாணம் ஆகும்வரை அவளுக்குச் சொல்லும் பதிலை நான் ஒத்திவைப்பேன்.

லலி: அந்த 'அவள்' நானாக இருந்தால்...? என் மோகன்... நானாக இருந்தால்..?

மோக: இப்பொழுது இதற்குப்பதில் சொல்ல முடியாது லலிதா!

லலி: காரணம்?

மோக: காதல் என்பது சாதாரணமானதில்லை. தோன்றி மறையக் கூடியதுமில்லை.

(103-ம் பக்கம் பார்க்க)

சம்பந்த முதலியார் - வடிவேலு நாயகர்

தென்னிந்திய நடிகர் சங்கம்

சென்ற மாதம் 12-ம் தேதி ஞாயிற்றுக் கிழமையன்று சென்னை மப்பும் மந்தாரமும் சூழ்ந்து குளுகுளுவென்று காட்சியளித்தது. சூரியனைச் சூழ்ந்திருந்த மேகக் கூட்டங்களின் அடர்த்தியால் சென்னை இருண்டு காட்சியளித்தது.

சூரியனைச் சுற்றியிருந்த முகில்கள் விலகி இப்பொழுது சூரியன் 'பளிச்' சென்று தன் ஒளிக்கதிர்களை வீசிப் பிரகாசிக்கத் தொடங்கினன். என்ன ஆச்சர்யம்! நான் மறைந்து விடும் என்று நினைத்த நக்ஷத்திரங்கள் இன்னமும் மங்கா ஒளியைச் சிதறிப் பரப்பின! சூரியன் காயும் பட்டப் பகலிலும் நக்ஷத்திரம் வாசம் புரிகிற தென்றால் ஆச்சர்யமானதுதானே?

சென்ற மாதம் குறிப்பிட்ட அந்த ஞாயிற்றுக்கிழமை தினத்தில் திருவல்லிக்கேணி கலா மண்டப அரங்கில் "தென் இந்திய நடிகர் சங்கம்". ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த ஆரம்ப விழாவில் கலந்து கொள்வதற்காக திரை, நாடக மேடைகளில் மின்னும் நடிகதாரகைகள் பலர் அங்கு குழுமியிருந்து ஜகஜ்ஜோதியாக மின்னிக் கொண்டிருந்தனர்!

கலாமண்டபத்தில் கண் கொள்ளாக் காட்சியாக இருந்த இந்த விழாவை எச். எம். ரெட்டி தலைமை வகித்து நடத்தினர். பழம்பெரும் நடிகரும் முதுபெரும் கிழவருமான டி. வி. வடிவேலு நாயகர் இந்தச் சங்கத்தை ஆரம்பித்து வைத்தார்.

சங்க வரவேற்பு கமிட்டியின் அக்ராசனரான என். எஸ். நாராயண பிள்ளைவரவேற்புரையைநிகழ்த்தினர். அவரது வரவேற்புரை வெறும் வரவேற்புரையாக மட்டுமல்லாமல் சங்



எச். எம். ரெட்டி தலைமை வகித்தார்

கத்தின் உயர்தர கோட்பாடுகளை உணர்த்துவதாகவும் இருந்தது. அத்துடன் நடிக நக்ஷத்திரங்களின் அறிவுக் கண்களைத் திறப்பதாகவும் அமைந்தது.

"நடிகர்களுக்கென தனிப்பட்ட முறையில் – அவர்களது குறைபாடுகளை எடுத்துச் சொல்வதற்கோ. சீர்திருத்துவதற்கோ – இயங்கக் கூடிய ஒரு சங்கம் இல்லாதது பெரும் குறையாக இருந்து வந்தது இன்றைய தினம் இந்தக் குறை பூர்த்தியாகி விட்டது. நடிகர்களுக்குள் ஒற்றுமை புணர்ச்சியையும் எதிர்கால நல்வாழ்வையும் ஏற்படுத்துவது சங்கத்தின் முக்கிய கோட்பாடுகளாக இருக்கும். அவர்களது பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்தவும், மக்களிடையே அவர்களுக்கு உள்ள செல்வாக்கை உயர்த்தவும் இச் சங்கம் பாடுபடும். இதற்காக சங்கம் எல்லோருடைய ஒத்துழைப்பையும் கோருகிறது. நடிகர்களும் தங்களுக்குள் ஏற்றத் தாழ்வுகளைப் பாராமல் பணி புரிய முன்வரவேண்டும்" என்று நாராயணபிள்ளை தமது வரவேற்புரையில் குறிப்பிட்டார்.

அடுத்து தமது ஆரம்ப விழா உரையை நடத்தினார் வடிவேலு நாயகர். அவரால் எழுந்து நின்று பேசமுடியாததால் அவரது உரை வேறொருவரால் படிக்கப்பட்டது.

"தொன்று தொட்டே நடிப்புக்கலை நம்மிடம் ஊறிப்போய் வந்திருக்கிறது. நாடகக்கலையின் தாயகம் நம் திந்தமிழ் நாடு. நடிகர்கள் இதுவரை நாட்டுக்கு பலவகையில் சேவை செய்திருக்கிறார்கள். அவர்கள் சினிமா, நாடகம் முதலியவற்றை பூரணமாகப் பயன்படுத்திக்கொண்டு மக்கள் நலனுக்குப் பாடுபடவேண்டும். நடிகர்கள் தங்களிடம் விரோத மனப்பான்மையை வளரவிடாமல். ஐக்கிய மனோபாவத்துடன் வாழவேண்டும். நாடகங்களிலோ சினிமாவிலோ அரசியல், மத சர்ச்சைகளைப் புகுத்த முயற்சிக்கக்கூடாது" என்று நாயகர் தமது தலைமை உரையில் குறிப்பிட்டிருந்தார்.

தலைமைப் பீடத்தை அலங்கரித்த எச். எம். ரெட்டி ஆரம்பவுரைக்குப் பின் தமது தலைமைப் பேருரையை நிகழ்த்தினர். ''சினிமாவை பகிஷ்கரிப்பதென்பத அரசியல்வாதிகளின் அன்ருட நடவடிக்கைகளில் ஒன்ருக ஆகி விட்டது. அரசியல்வாதிகளில பலர் சினிமாப் படங்களைப் பார்க்காமலேயே அதைப்பற்றி பொறுப்பற்ற தன்மையில்பேசுவது வருந்தத்தககது சினிமாவைத் தூற்றும்படி நாங்கள் என்ன படுபாதகம் செய்து விட்டோம்? வரியின் மூலம் ஏராளமாகப் பணத்தை சர்க்காருக்குக் கொடுக்கும் அந்தப் பாவம் தானு? வாழ்க்கையில் நாம் நடந்து காட்டும் புனிதத் தன்மையால் சர்க்காரின் போக்கைக் கண்டித்து அவர்களைத் திருத்த வேண்டும். நடிகர்கள் படத்தயாரிப்பாளர்களுடன் ஒத்துழைக்க வேண்டும்'' என்று டைரக்டர் எச். எம். ரெட்டி கூறினர்.

அன்றைய இந்த ஆரம்ப விழாவுக்கு இந்திய பிலிம் பெடரேஷன் தலைவரான பி. என். சர்க்காரும் வந்திருந்தார். புதிதாக அங்குரார்ப்பணமாகியிருக்கும் இச்சங்கத்திற்கு தனது மனப்பூர்வமான ஆசியைத் தெரிவித்து ''சங்கம் வளர்ச்சியடைந்து ஒரு அகில இந்திய ஸ்தாபனமாக மாற வேண்டும்'' என்று வாழ்த்தினர் அவர்.

சங்கத் தலைவர் டி. வி. சுந்தரம் நடிகர்கள் பல வழிகளில் சுரண்டப் படுகிருர்களென்றும் சுய முயற்சியாலேயே அவர்கள் முன்னேற வேண்டி யிருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

'நடிகர்களுக்குள் உள்ள பொருமைக்குணம் மறைந்து அன்பு வளர வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் இச்சங்கத்திற்கான கிளைக் காரியாலயங்கள் உண்டாக வேண்டும்'' என்று நாடகப் பேராசிரியர் சம்பந்த முதலியார் கூறினர்.

எம் ஜி. ராமச்சந்திரன், சாரங்கபாணி, பாலய்யா, நாகேந்திர ராவ், என். எஸ். கே., எஸ். ஆர். ஜானகி முதலியோரும் பேசினர்.

நக்ஷத்திர நடிகர்கள் பங்கெடுத்துக் கொண்ட கதம்ப நிகழ்ச்சியுடன் விழா முடிவடைந்தது.

சங்க நடவடிக்கைகளில் சந்தோஷம் பொங்கிற்று.



வருகிறது!



சோபாவின்

பரோபகாரம்

(தமிழ்)

ஜீ. வரலக்ஷ்மி.
சாவித்திரி. ராம்சர்மா.
முக்காமலா. ஸி. எஸ். ஆர்.
ரேலங்கி. ஸி. வி. வி. பந்துலு.
ஆர். நாகேஸ்வர ராவ்

வசனம்: உதயகுமார். பாடல்கள்: லக்ஷ்மணதாஸ்.
சங்கீதம்: கண்டசாலா. ஸ்டுடியோ: வாஹினி.
டைரக்ஷன் & கேமிரா: கமால் கோஷ்.

SHOBHA FILMS MADRAS.17

சோபா பிலிம்ஸ்
35, உஸ்மான் ரோட், சென்னை-17.

M.R.S. Mani



அகில இந்திய சினிமா டெக்னீஷியன்களின இரண்டாவது மகாநாடு சென்ற ஜூன் மாதம் 20, 21 தேதிகளில் கல்கத்தாவில் நடைபெற்றது. மேற்கு வங்கப் பிரதமர் டாக்டர் பி. ஸி. ராய் இந்த மகாநாட்டைத் திறந்து வைத்தார். டைரக்டர் கே. ராம்னாத் இந்த மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார். டெக்னீஷியன்களின் தரம் உயரவேண்டும் என்றும், டெக்னீஷியன்களைப் பயிலுவிக்க ஒரு பயிற்சிக் கூடத்தை சர்க்கார் ஆரம்பித்து வைக்க வேண்டும் என்றும், டெக்னீஷியன்களுக்குள் மாகாண, மதப் பேதங்களின்றி ஐக்ய மனோபாவம் ஏற்படவேண்டும் என்றும் பல தீர்மானங்கள நிறைவேறின.

திருமணம் என்ற நறுமண வாழ்க்கையில் மன்னன் நிற்கிறுன். சிறுமி ஒளவைக்கோ விவாகம் வேப்பாகக் கசக்கிறது. ஜெமினி 'ஒளவையா'ரில் துளசி, கணேசன், குசலகுமாரி முதலியோர்.



'இளமையைக்குலைத்து முதுமையைக் கொடுத்து அருளிய விநாயகப் பெருமானே! ஜனசமுதாயத்திற்குச் சேவை செய்ய அருள் தா' என்கிறுரா ஔவையார் ?

'என் காதல் கடிதத்தை விஜயலக்ஷ்மி கண்டுபிடித்து விட்டாளே' என்று 'அவ'னில் நர்கீஸ் ஆத்திரப்படுகிருர்.—'திரும்பிப்பா'ரில் நரசிம்மபாரதியிடம் தான் கொண்ட ஆத்திரத்தை கையால் காட்டிவிடுகிருர் கணேசன்.

பாலசரஸ்வதியுடன் நடனம் கத்துக்கறேன் என்று காலை ஒடித்துக் கொண்டு, சாவித்திரியிடம் கணேசன் சிகிச்சை பெறுகிறாரோ?—நாராயணன் கம்பெனி 'மனம் போல் மாங்கல்யம்' படத்தில்.

'வஞ்சம்' படத்தில் பரிசுத்தக் காதலை சாவித்திரி—காந்தாராவ் ஜோடியின் கலை முகம் சொல்லவில்லையா?—ஆனல் ஆணுருவில் வந்த பெண் நடத்தும் கள்ளக் காதல் 'வீரசுந்தரி'யில் சித்தரிக்கப்படுகிறது.

டி. ஆர். ராமச்சந்திரன் – ராஜம் இருவரும் ‘மனிதனும் மிருகமும்’ படத்தில் காதல் கெடுபிடி கட்டத்தில் வருவதைப் பார்த்து, பானுமதியும் ராமராவும் ‘சண்டிராணி’யில் தொடுபிடி கட்டத்தில் வருகிறார்கள் போலும்!

Distributors: Madras City, Tamilnad and Malabar — The All India Film Corporation Ltd, Madras-2 Madura & Ernakulam
ஆகஸ்ட் 28-ம் தேதி வெளி வருகிறது!
பரணியின்
சண்டி ராணி
Studio... BHARANI
பானுமதி
ராமாராவ்..ரங்காராவ்..ரேலங்கி
டைரக்ஷன்... பானுமதி ▪ தயாரிப்பு... ராமகிருஷ்ண

அசோஸியேடட் புரொட்யூஸர்ஸ்
ஆசை மகன்

அசோஸியேடட் புரொட்யூஸர்ஸின் முதல் காணிக்கையாக 'ஆசை மகன்' இம்மாத மத்தியில் வெளிவரவிருக்கிறது.



மிகுந்த சிரத்
தையுடன் தயா
ரிக்கப்பட்ட
இப்படத்திலே
ரஸிகர்களுக்கு
ரொம்பவும் அறி
முகமான பி.
எஸ். சரோஜா,
பத்மினி, கிரிஜா.
கணேஷ், பாலய்
யா, கே. ராமசாமி





முதலிய பல நக்ஷத்திர நடிகர்கள் நடிக்கின்றனர்.

ஜி. ஆர். ராவ் டைரக்ட் செய்யும் 'ஆசை மக'னை நடனம், பாடல்கள். வசனம் கலை நுணுக்கம், நடிப்பு முதலிய எல்லா அம்சங்களிலும் சிறந்த படமாக விளங்கச் செய்ய தயாரிப்பாளர் வாசு மேனன் மிகுந்த சிரத்தை காட்டி வருகிறார்.

"நான் ரஸித்த காட்சி"

("சினிமா பார்க்கும் பொது ஜனங்கள் ஆபாசத்தைத்தான் விரும்புகிறார்கள். மாயா ஜால படங்களும், ஸ்டண்டுகளுமதான் ஓடுகின்றன. அரை நிர்வாண நடனம் இல்லாத படங்கள் தோல்வியடைகின்றன" என்றெல்லாம் கூறும் படமுதலாளிகளை இந்தப் பகுதியைக் கவனமாகப் படிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம். ஜனங்கள் எதை ரஸிக்கிறார்கள்; எதைப் பாராட்டுகிறார்கள் என்று தெரிந்து கொள்ள இப்பகுதி மிகவும் உபயோகமாக அமைந்திருக்கிறது-ஆசிரியர்.)

*பொன்னி

முருகனிடம் சொர்ணம் கும்பி கொதிக்கக் கண்ணீர் விட்டுக் கதறும்போது தற்செயலாக வருகிறாள் பொன்னி. தாய் என்ற முறையில் அவள் செய்த தியாகங்கள் ஒன்ரு இரண்டா? மணிபோலக் குழந்தைகளைப் பெற்றும் மலடிபோல் காலங் கழித்தாள். கூடவே இருக்கும் பொன்னியை மகள் என்று கூடக் கூப்பிடமுடியாத நிலையில் காலங் கழித்தாள். எரிமலை வெடித்தது. துக்கத்தை அழுது ஆற்ற முயன்றாள்.

'அம்மா......!'

மறைவிலிருந்து தன் அன்னையை அறிந்து கொண்ட பொன்னி கண்களில் நீர்வழிய, கைகால்கள் நடு நடுங்க, இதயம் துடிதுடிக்க அம்மாவிடம் ஓடுகிறாள். தாயிடம் ஓடும் அந்தப் பாக்கியசாலியான சேயின் நிலைகண்டு நம் உள்ளம் மகிழ்ச்சியும் துயரமும் அடைகிறது.

ஆர். கோவிந்தராஜன்,
சென்னை.

*மின்மினி

நவீனனுக்கு விஷமிடப்படுவதறிந்த புஷ்பா மருந்தை மாற்றி விடுகிறாள். காதலின் வேலை அது. மீண்டும் கடமையின் பெயரால் அவனையே நவீனுக்கு விஷமிட அனுப்புகின்றனர் டாக்டரும் ஜமீன்தாரும். அவளிடம் சந்தேகம் கொண்ட டாக்டர் 'டானிக்' பாட்டிலில் விஷத்தை வைத்து விடுகிறார். அவள் விஷத்தை டானிக் என நினைத்து நவீனிடம் எடுத்துச் செல்கிறாள் ஆனால் அவர்கள் காதலின் உயர்வை டாக்டரினால் அறிய முடிகிறது. புஷ்பா அவனுக்குக் கொடுக்கும் மருந்தைத் தட்டிவிட்டு தான் சிறை செல்கிறார். சிறந்த காட்சி. செய்த தவறை உணருபவன் தானே மனிதன்?

கே. ராமச்சந்திரன்,
அம்பாசமுத்திரம்.

*மின்மினி

தன் உள்ளக் கருத்தை எழுத்தாக வடிக்கும் திறமையும் அஞ்சா நெஞ்சமும் கொண்டவன்தான் உண்மை எழுத்தாளன். நவீன் இப்படிப்பட்டவன்தான். கத்திக் குத்தோடு ஆஸ்பத்திரியில் கிடக்கும் நவீன் முதலாளி வாஞ்சி அய்யரைப் பார்த்தவுடனேயே 'இவ்வார பத்திரிகை இன்னும் தயாராக வில்லையா?' என்று கேட்கிறான். அவனல்லவா கடமை வீரன்; நேர்மையான எழுத்தாளன். அதே நேர்மையாளன்தான் தன் தவறு எடுத்துக்காட்டப்பட்ட போது தன்னைத் திருத்திக் கொள்ளத் தீர்மானிக்கிறான். எழுத்தாளர்கள் பெருமைப்பட வேண்டிய கட்டம் இது.

த. மு. ராமன்,
சென்னை.

* இக்குறியிடப்பட்ட மூன்று கடிதங்களுக்கும் தலைக்கு ஐந்து ரூபாய் வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

பொன்னி

சொர்ணத்தைப் பிச்சைக்காரி என்று ஏசுகிறள் கண்மணி. பணம் அவள் பகுத்தறிவைப் பாழ்படுத்தி விட்டது; கல்வி அவனைக் கர்வம் கொண்டவளாக்கிற்று. தாயைப் புரிந்து கொள்ளாத அவளுக்கு அறிவூட்டுகிறன், படித்தும் படாடோபமற்ற புத்திசாலி சுந்தர். 'பிச்சைக்காரியல்ல இந்த புனிதவதி, ஒரு லட்சியவாதி; உளுத்துப்போன இந்த உலகத்திலே கோடியில் ஒரு உத்தமி; சுயநல சூரர்கள் கொக்கரிக்கும் இந்த நாட்டிலே தன்னலமே அறியாத தனிப்பெருந்தியாகி; நடமாடும் தெய்வம்; உன் தாய்; காலமெல்லாம் கரங்கூப்பித் தொழ வேண்டிய கடவுள்; உன்னை மனுஷியாக்கிய மாதா; அறிவூட்டிய அன்னை' என்று உணர்ச்சிப் பெருக்கில் உடல் துடிக்கக் கூறுகிறன். கண்மணிக்குப் பாசம் பிறிடுகிறது; அறிவு தெளிகிறது. தாய்க்காகத் தன் உயிரையும் பணயம் வைக்கத் தீர்மானிக்கிறள். 'அம்மா' என்று கூவி அன்னையின் மார்பில் முகம் புதைக்கும் போது நமக்கு மயிர்க் கூச்செறிகிறது. உள்ள முருக்கும் உயரிய காட்சி.

ரா. பாலசுப்ரமணியம்,
சைதாப்பேட்டை.

தாய்க்காக தங்கையிடம் வேலைக்காரியாக அமர்ந்து அவள் கையாலேயே மாடியிலிருந்து தள்ளப்பட்டு கையுடைந்து போன பொன்னி, மீண்டும் தாயின் ஆணைக்குக் கட்டுப்பட்டு கண்மணியிடம் செல்கிறள். ஆனல் அங்கு சமரஸத்திடமிருந்து கண்மணியையும் தப்புவித்துவிட்டு குற்றத்தை தானே ஏற்கிறள். நேர்மையான நடத்தையுள்ள அவளால் விபசாரி என்ற ஏசலைமட்டும் தாங்கமுடியவில்லை, 'அம்மா...! விபசாரி, தேவடியா, பிச்சைக்காரி.....அய்யய்யோ! அவுங்க சொன்ன ஒவ்வொரு வார்த்தையும்...!' என்றவள் மேலே பேசமுடியாமல் ஓவென்று அழுகிறள். நம் நாட்டுப் பத்தினிப் பெண்களின் பண்பை விளக்கும் அக்காட்சி நம் இதயத்தைத் தொடுகிறது.

சாரநாதன்,
சென்னை.

பொன்னி படித்துப் பத்தாவது தேறியவள். ஆசையுடன் ஆர்டரைக் கையிலேந்தி அன்னையிடம் ஓடிவருகிறள். ஆனல் தாயின் கண்ணிலே நீரைக் கண்டதும் துணுக்குறுகிறது அவள் மனம். காரணம் கேட்கிறள். பொன்னி ஒரு வேலைக்காரியாகப் போகவேண்டும்; அதுவும் தங்கையிடம். இது கண்ணீரோடு கூடிய தாயின் வேண்டுகோள். படித்த பெண்ணானலும் பண்பு மாருதவள் பொன்னி. தாயிற் சிறந்ததொருகோயிலுமில்லை-தாய்ச் சொல் துறந்தால் வாசகமில்லை என்பதை அறிந்தவள், அந்தப் புனிதவதி பொன்னி. சொர்ணம் பெற்றெடுத்த தங்கமல்லவா அவள்? 'உன் இஷ்டப்படி நடக்கிறதைத் தவிர இந்த உலகத்திலே எனக்கு எந்த லட்சியமும் கிடையாதும்மா' என்று அவள் சொல்லும்போது நமது உள்ளத்தின் அடித்தளத்திலே வேதனையும் ஆனந்தமும் ஏற்படுகின்றன. படித்த பெண்களுக்கு அறிவு புகட்டும் அரியகாட்சி.

ஆர். ஜி. ரங்கநாயகி,
சென்னை.

கூடவே இருந்துங்கூட தாயை அன்னையென்று அழைக்கும் பாக்கியம் பெருத பொன்னிக்கு உண்மை தெரிந்து 'அம்மா' என்று அவளிடம் ஓடுகிறள். அவள் 'நான் உன் தாயில்லை' என்கிறள். பொன்னிக்கு உள்ளம் உடைகிறது. 'தெய்வத்துக்குச் சமமான உன் தாய் மனசை எப்பவாவது புண்படுத்திட்டேனு? என்னை உன் மகள்னு சொல்ல எந்த விதத்திலாவது தகுதியை இழந்திட்டேனு? அம்மா! நானறிய ஒரு குற்றமும் செய்யலியேம்மா, என்னை மகள்னு கூப்பிட ரத்தபாசம் கூடவா உன்னைத் தூண்டலை?' என்று கேவியபடி கூறுகிறள். அவள் படும் வேதனை நம்மையும் கண்கலங்கச் செய்கிறது.

'ஒயிட்லென்ஸ்,'
பாளையங்கோட்டை.

கண்மணியின் அடி, உதை, வசவு எல்லாவற்றையும் சகஜமாக ஏற்று, அவளாலேயே மாடிப்படியில் உருட்டப்பட்டுக் கையை உடைத்துக் கொண்ட பொன்னி, தாய்க்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற

தவறி விழுந்ததாகக் கூறுவது மிகவும் நன்றாக இருக்கிறது. பொன்னியின் அருங்குணங் கண்டு ஆனந்தக் கண்ணீர் வழிகிறது நம் கண்களிலே.

ஏ. கே. ராஜாமணி,
மாயூரம்.

கண்மணி சமரஸத்தின் அறைக்குச் செல்வதைக் கண்ட பொன்னி அவளைத் தொடருகிறாள். சமரஸத்தின் அறையில் தன்னைத் தொடர்ந்ததற்காக கடிந்து கொள்ளுகிறாள் கண்மணி. ஆனால் 'அப்பா வருகிறார்' என்று அவளை மறையச் சொல்லிவிட்டு விபசாரி என்ற பட்டத்தைத் தான் ஏற்கிறாள். தாய்க்காக அவள் செய்யும் தியாகம் நம்மைக் கண்ணீர்விடச் செய்கிறது.

ஜி. அமிர்தலிங்கம்,
கும்பகோணம்.

கோர்ட்டில் உண்மை வெளியாகி யாவரும் வீடு வந்ததும் பொன்னியைக் கேட்கிறார் நல்லசிவம். தற்கொலை செய்ய முயற்சித்ததைக் கூறவேண்டாமென்று ஏன் தடுத்தாள் என்பதுதான் கேள்வி. பூர்வோத்திரம் வெளிப்படக் கூடாது என்பதுதான் தாயின் ஆசை என்று தாயிடம் அவள் பக்தியோடு கூறுவது பிரமாதம்!

வி. ஜெயராமன்,
கோயமுத்தூர்.

ஏமாற்று வித்தையில் கைதேர்ந்த மோகன் சமரஸம் என்ற பெயரில் உலாவி படித்த பெண் கண்மணியைக் கற்பழிக்க முயலுகிறான். கல்வி யறிவற்றாலும் கண்யமாக நடக்கும், பகுத்தறிவு வளர்ந்த மரகதம் இயன்றவரை தடுக்கிறாள். பெண்களின் சுபாவிகம் தெரிந்த மரகதம் சமரஸத்திடமிருந்து கண்மணியைக் காக்கும் காட்சி பிரமாதம்.

ஆருத்ரன்,
சேலம்.

முருகன் மூலம் இரண்டாம் புதல்வி இருக்குமிடம் சொர்ணத்திற்குத் தெரிகிறது. அதுவாவது சௌக்கியமாக இருக்கட்டும் என்கிறான் முருகன். பெற்ற பாசம் ஒரு புறம் ஆனால் மகளின் மகத்தான வாழ்வைத் தடை செய்யக்கூடாதென்ற எண்ணம் ஒரு புறம். பாசம், கடமைக்கிடையே போராடிக் கண்ணீர் சிந்தும் சொர்ணத்தின் நிலை அனுதாபத்திற்குரியது அரிய காட்சி.

எஸ். லலிதா,
சென்னை.

கண்மணி பொன்னியை தன் சகோதரி என்றறிந்ததும் சிறைக்கு ஓடுகிறாள். அங்கே அவளை அணைத்து ஆறுதல் கூறுகிறாள் பொன்னி. பணத்திலும் பதவியிலும் உயர்ந்தவளாக தான் இருந்தாலும் பண்பிலும் அன்பிலும் தன்னைவிட மேம்பட்டவளானவள் பொன்னிதான் என்று கூறுகிறாள் கண்மணி. தவறை உணர்ந்து திருந்துவது நம் நாட்டுப் பண்பல்லவா? ரஸிக்கக்கூடிய அருமையான காட்சி.

எஸ். வத்ஸலா,
சென்னை.

சமரஸம் கண்மணியின் மனதைக் கலைக்கிறான். அவள் மகிழச் செய்ய பல பாஷைகளை 'ஒன்று படுத்து கிறான்.' 'எப்படிப் பாடினரோ' பாடலை அவன் ஆங்கில மெட்டில் பாடுவது கண்மணியை மட்டுமின்றி நம்மையும் மகிழச் செய்கிறது. தற்கால படஉலகப் பாடல்களின் மெட்டையும் கிண்டல் செய்கிறது இக்காட்சி.

வி. எஸ். மணி,
திருவனந்தபுரம்.

பொன்னியைத் தபாலாபீசில் சந்திக்கிறான் சுந்தர். இருவர் உள்ளமும் ஒன்றுபடுகிறது. ஆண்கள் ஆத்திரக்காரர்கள். சுந்தர் அவளிடம் மண விஷயம்பற்றி பிரஸ்தாபிக்கிறான். பெண் பொறுமையின் உறைவிடம். ஆழம் அதிகமுள்ள நீர்ப்பரப்பு சலனம் காணப்படவில்லை அவள் முகத்திலே. தாய் அன்னிய நாட்டிலிருந்து வந்தபின் எதுவும் நடக்கும் என்கிறாள். தமிழ்ப் பெண்

ணின் சிறப்பு அது. பொன்னி அதற்கு ஒரு சீரிய உதாரணம். கல்லூரி மாணவ மாணவிகள் அவசியம் பார்க்கவேண்டிய, நீதி போதிக்கும் காட்சி இது

நந்தலா.
செங்கற்பட்டு.

மரகதம் தடுத்தும் கண்மணி, சமரஸம் இருவரும் வெளிக்கிளம்புகிறார்கள். காரின் பின் ஸீட்டில் கண்மணி ஏறி உட்கார்ந்து கொள்கிறாள். உடனே சமரஸம் அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொள்ள முயற்சிக்கிறான் ஆனால் மரகதம் அவள் பக்கத்தில் ஏறி உட்கார்ந்து விடுகிறாள். சமரஸத்திற்கு ஆத்திரம் வருகிறது. கார் கதவைப் படீரென சாத்திக் கொள்கிறான் நான் பொன்னியில் மிகவும் விரும்பி ரஸித்த காட்சி இது.

ராகவன்.
சென்னை.

தாய் சொர்ணத்துக்கு இரு கண்கள் போல இரு பெண்கள். ஒரு கண்மணிக்காக மற்றொரு பெண்மணி பொன்னியைத் தியாகம் செய்கிறாள். ஆனால் பொன்னி? தாய்க்காகத் தங்கையிடம் வேலைக்காரியாகிறாள். அவச்சொல்லை அமைதியுடன் அடக்கமாக ஏற்கிறாள்; அடி, உதை குத்துக்கும் அவள் அஞ்சவில்லை கடமை, சத்தியம் அவள் ஆயுதங்கள். கை உடைகிறது. விபசாரியாக—ஏன், கொலைகாரியாகவும் அவள் தூற்றப்படுகிறாள். பொன்னியின் செயல் பெண் குலத்துக்கே பெருமை தரக்கூடியது. தாயின் தியாகம் பெரிதா? தமக்கையின் தியாகம் பெரிதா? உணர்ந்து ரஸிக்கக்கூடிய கட்டம்.

கே. ஜி. ராஜன்.
ஈரோடு.

கண்மணியை எச்சரிக்கை செய்யும் கடிதத்தை அவளிடம் சேர்த்த சொர்ணம் உண்மையறியாத கண்மணியால் கண்டபடி அடிக்கப்பட்டு அழுது கொண்டே வீடு திரும்புகிறாள். பொன்னி 'யாராவது அடித்தார்களா அம்மா?' என்று குமுறுகிறாள். "ஒரு பெண் வழுக்கி விழ இருந்தது. அதைக் காப்பாற்ற நினைத்தேன். அதனால் வந்த வினை" என்கிறாள் சொர்ணம் அவளது உள்ளத் துடிப்பை அறியும்போது நமக்கு குடலைக் குமட்டும் ஒரு வேதனை ஏற்படுகிறது.

வி. கோவிந்தராஜுலு.
திருக்கோயிலூர்.

பிள்ளைப் பேறில்லாவிட்டாலும் புண்ணியவான் என்று போற்றப்படும் நல்லசிவம், தான் பெறாத தன் குழந்தைகளுக்காக சமரஸத்திடம் அடிமை போலிருக்கிறார் ஆனால் நிலைமை மிஞ்சிப்போனதும் அவர் மனம் புண்படுகிறது. மகள் கண்மணியின் விஷயமறிந்த அவர் மானம் மரியாதை போய்விட்டதென்று வெறுத்துக் கூறும்போது நமக்குப் பரிதாபமாக இருக்கிறது.

ஏ. கே. நரசிம்மன்.
பம்பாய்.

பொன்னுரங்கம் தன் மனைவி படுத்த படுக்கையாயிருப்பதாகவும் பிள்ளையை அனுப்பும்படியாகவும் நல்லசிவத்திடம் கேட்கிறார். 'இப்போ உயிர் இருக்கோ இல்லையோ' என்ற அளவில் அவர் கூறும்போது, 'கண்டிப்பா போயிடுங்க' என்று கார் விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு வருகிறான் சொக்கன். அகஸ்மாத்தானதானாலும் வேடிக்கையாக இருக்கிறது.

பி. எஸ். கோபாலன்.
தாம்பரம்.

எத்தனுக்கும் எத்தன் உண்டு அல்லவா? சமரஸம் தான் பெரிய கைகாரன் என்று நினைக்கும்போது முருகன் அவனிடம் விஷயத்தைக் கறந்து அவன் உயிரே தன்னிடமிருப்பதாகக் கூறுகிறான். அனுபவித்து ரஸிக்கும் காட்சி.

கே. கே. நாகராஜராவ்.
திருத்துறைபூண்டி.

தபால் பெட்டி

பாடல் விஷயம்

அகில இந்திய ரேடியோவில் சினிமா இசைத்தட்டுகளைக் குறைத்து விட்டிருக்கிறார்கள். சினிமாப் பாட்டுக்கள் என்றால் டப்பாப் பாடடுக்கள் என்றுதான் அர்த்தமா? கோயில் முழுதும், கொஞ்சும் புறாவே, வாழ்க வாழ்க போன்ற ஏராளமான சிறந்த கர்நாடக மெட்டுப் பாடல்கள் இல்லையா? நாள் முழுதும் உழைத்து வீட்டு வரும் மக்களுக்கு சிறிது நேரமாவது 'லைட் மியூசிக்' வேண்டாமா? ரேடியோவைத் திருப்பினால் யாராவது அழுகிறார்கள். ஏன் இந்த வம்பு? சினிமா சங்கீதம் வேண்டும் என்பதே ரஸிகர்கள் ஆசை. அரசாங்கம் சிந்திக்குமா?

இராமேசன்,
டிக்கோயா.

●

ஐந்துவித திட்டம்

இரண்டாவது மகா யுத்தத்திற்குப் பின் ஜப்பான சினிமாத் தொழிலில் பிரமிக்கத்தக்க வகையில் முன்னேறி உலகிலேயே மூன்றாவது ஸ்தானம் வகிக்கிறது. சில நாளைக்குள் இந்தியாவை விழுங்கிவிடும். இந்தியப் பட உலகம் வளர்ந்து முன்னேற இதோ சில திட்டங்கள். (1) படத் தயாரிப்புக் காலம் குறைய வேண்டும். (2) படத்திற்காக காசைக் கரியாக்கி பிரமாண்டமான காட்சிகளை அமைத்துக் கொண்டிருப்பதைத் தவிர்க்க வேண்டும். (3) நடிகர்களுக்கு ஏராளமான பணத்தை ஒழிக்கக் கூடாது (4) ஏற்கெனவே வெளியான படக் கதைகளின அம்சங்களைப் புகுத்துவதை ஒழிக்க வேண்டும் (5) கதைக்குச் சம்பந்தமற்ற அனாவசியமான காட்சிகளைத் திணித்து நீளத்தை அதிகமாக வளர்த்தக் கூடாது. இதையெல்லாம் கவனித்து நல்லதைச் சிக்கனமாகவும் செய்தால் பிரமாதமாக முன்னேற முடியும்.

எம். கே. சொர்ணப்பா,
மதுரை.

●

காதலா காமமா?

வர வர படங்களில் காதல் காட்சிகளில் காதல் கண் தெரியாத காமமாகப் பிரதிபலிக்கப் படுவதைப் பார்க்கிறோம். அருவருக்கத் தக்க இவைகள் படங்களிலே நிறைந்து விட்டிருக்கின்றன. ஒருவன் ஒரு பெண்ணைப் பார்த்தவுடன் 'உஸ்' ஸென்று உறிஞ்சுகிறான அவனுக்கு நாயைப் போல் நாக்கிலே நீர் ஒழுகு

செகரடரி: (படமுதலாளியிடம்) நீங்க அடுத்த படத்துக்கு என்ன கதை எழுதறதும்னு கவலைப்படறீங்களே! இன்னிககுத தபாலிலே ஒரு அருமையான கதை வந்திருக்கு. படிக்கிறீங்களா?

கிறது! காதல் என்ற புனிதப் பெயரால கண்டவர்களும் கண்ட பெண்களையும் கற்பழிப்பதை ஆபாசமான முறையில் சித்தரித்து விடுகிறார்கள் "என் வீடு" படத்திலே சிவராம் லீலாவுடன் ஒரு இரவைக் கழித்ததை ஆபாசமற்ற முறையில் படமாக்கியிருந்தார்கள். பெற்ற தாயிலும் அப்படித்தான் நிலைகளைப் பின் பற்றுமல் காதலுக்கும் காமத்துக்கும் வித்தியாச மில்லாமல் ஏன் செய்ய வேண்டும்?

ஸ்ரீதர்.
கோவை.

வில்லனின் தன்மை

தற்போது அனேகமாகப் படங்களில் வில்லன் பாத்திரம் கண்டபடி சித்தரிக்கப்படுகிறது. கதாநாயகியை ஒரு மலைப்பாங்கான இடத்திற்குக் கடத்திச் சென்று சிறையிடுவதோ அல்லது அவளை அங்கு அழைத்து வரச் செய்வதோ பிரதானமான காட்சியாக அமைக்கப்படுகிறது. மீண்டும் மீண்டும் இக்காட்சிகளைத் திணிக்காமல் வில்லன் பாத்திரதாரியைச் சிருஷ்டிக்க முடியாதா? பெண்ணைக் கற்பழிக்க முயலுகிறவன்தான் வில்லனா?

கே. பி. விஸ்வநாதன்,
திருச்சிராப்பள்ளி.

தகப்பனார்: மீசைக்கும் ஆசை கூழுக்கும் ஆசைன்னு அழறே! சினிமா நக்ஷத்திரமாகோணும்னு துடிச்சே. இப்போ கலியாணமும் பண்ணிக்கோணும்னு பிடிவாதம் பண்றே! சே! சே!

ராஜாராணி கதை!

பலர் ராஜாராணி கதைகளைப் படமாகத் தயாரிக்கிறார்கள் ஆனால் காதலன், காதலி, வில்லனைச் சுற்றியே பின்னிப் படமெடுக்கிறார்கள். இந்திய சரித்திரம் மிகப் பிரபலமானது. வீராதி வீரர்களும் தேச பக்தர்களும் நிறைந்த நாடு இது. சேர, சோழ, பாண்டியர் முதல் வட இந்திய அரசர்கள் வரையிலும் பாரதி முதல் குமரன் வரையுள்ள வீரர்களையும் தேச பக்தர்களையும் கொண்டு நாட்டுக்கு உபயோகமான பல படங்களை தயாரிக்கலாம். எதிர்கால இந்தியாவை வலுப்படுத்தலாம். வெறும் ராஜாராணி கதைகளைப் படமாக்குவதைவிட வீரர்களின் கதைகளைப் படமாக்கக் கூடாதா?

எஸ். ராமச்சந்திரன்,
சென்னை.

ஒன்றுக்கு இரண்டு...

படத் தயாரிப்பாளர்களில் பலர் ஒரே படத்திற்கு இரண்டு மூன்று பாடல்கள் இயற்றுபவர்களை நியமிக்கிறார்கள்; சிலர் மூன்று நான்கு வசன கர்த்தாக்களை அமர்த்துகின்றனர். டைரக்ஷனுக்கும் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஏற்பாடு செய்யப்படுகிறார்கள். சங்கீத டைரக்ஷனும் இப்படித்தான் யார் எந்த பாடலை இயற்றியுள்ளார்; யார் இதற்கு மெட்டு அமைத்தவர் என்பதெல்லாம் புரியவில்லை. இப்படிப் போட்டுக் குழப்பி கதம்பமாக்காமல் சிறப்பாகச் செய்யக்கூடாதா?

"ஜூபிடர் பிரியன்".
மதுரை.

விமலன், கோவில்பட்டி

எம். எஸ். சுப்புலக்ஷ்மியை கச்சேரிக்கு அழைத்தால் வருவாரா? அவரது தெளிவான விலாசம் என்ன?

அவசியம் வருவார். ஸ்லேடன்ஸ் கார்டன், பூந்தமல்லி ஹைரோடு, சென்னை–10 என்ற அவரது விலாசத்துக்கு எழுதிக் கேளுங்கள்.

ஆ. மங்களராஜன், கொழும்பு–1

'மின்மினி' உங்கள் சொந்தப் படமா?

எல்லாப் படங்களுமே படம் பார்க்கும் பொதுஜனங்களுக்குச் சொந்தமானதுதான்!

இன்பம் வரும்போது ஒருவன் எப்படி யிருப்பான்?

உலகமே 'தன் கால் கீழ்' என்று நினைப்பான்.

துன்பம் வரும்போது எப்படி யிருப்பான்?

உலகமே 'தலை கீழ்' என்று முடிவு கட்டி விடுவான்!

மனிதனுக்கு மனிதன் செய்ய வேண்டிய கடமைகள் என்ன?

மனிதனாக நடந்து கொள்ள வேண்டியதுதான்!

வி. லில்லி, மன்னார்

பானுமதிக்கு என்ன என்ன பாஷைகள் தெரியும்? அவருக்கு கார் ஓட்டத் தெரியுமா?

தெலுங்கு, தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளிலும் பானுமதிக்கு நல்ல பரிச்சயம் உண்டு. அவருக்கு கார் ஓட்டத் தெரியும் என்று நினைக்கிறேன்!

பானுமதி ஏன் மகாலிங்கத்துடன் நடிக்க வில்லை?

ரஸிகர்கள் துரதிருஷ்டசாலிகள்!

மயில்வாகனன், பம்பாய்

இந்தியாவில் வெளிவரும் படங்களைப் பார்க்க விருப்பமில்லை. ஏன்?

உமது நாகரீகம் முற்றிவிட்டதால் இருக்கலாம்!

பி. வி. சுக்கல், சென்னை–3

மனோஹர், ஸ்ரீராம், 'ஜெமினி' கணேசன் இம்மூவரில் யாருடைய நடிப்புக்கு முதல் ஸ்தானம் கொடுக்கலாம்?

மனோஹருடைய நடிப்பு என்னைக் கவருகிறது.

எஸ். கணபதி, மலாயா

எஸ். வரலக்ஷ்மியின வாழ்க்கை வர்ணனை வெளியிடப் பட்டுள்ளதா? கடிதம் எழுதினால் பதில் வருமா?

'பேசும் பட'த்தில் அவரது வரலாறு முன்பே பிரசுரிக்கப்பட்டு விட்டது. மூன்றாவது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு, சென்னை–20 என்ற விலாசத்திற்கு கடிதம் போடும். பதில் வருமா வராதா என்பது உமது அதிருஷ்டத்தைப் பொருத்தது!

பி. கே. அமீர் ஹம்ஸா, சேதுக்குவாய்த்தான்

அஞ்சலிதேவியின் முதல் தமிழ்ப் படம் எது?

'மகாத்மா உதங்கர்'

நாமம், ஸ்ரீவைகுண்டம்

ஹாலிவுட் நடிகைகளின் பொழுது போக்கு எது?

கணவன்மார்களை மாற்றிக் கொள்வது!

ஹிந்தி நடிகைகளின் பொழுது போக்கு என்ன?

மோட்டார் விபத்துகளை ஏற்படுத்துவது!

தமிழ் நடிகைகளின் பொழுது போக்கு?

அரட்டை அடிப்பது!

அகில இந்தியாவிலும் காமினி கௌஷல் சிறந்த நாட்டிய நடி என்று ஒரு பம்பாய் பத்திரிகை கூறுகிறது? நீங்கள் யாரைச் சொல்கிறீர்கள்?

வைஜயந்திமாலாவின் நடனத்தை அந்தப் பம்பாய் பத்திரிகை ஆசிரியர் பார்த்ததில்லை போலும்!

இளமை, திறமை இரண்டில் ஒரு நடிகைக்கு எது அவசியம்?

திறமை தேவையில்லை!

எல்லமுத்து, டிக்கோயா

திராவிட முன்னேற்றக் கழகத்தால் நாட்டு மக்களுக்கு நன்மையா திமையா?

காலம் தான் காட்டவேண்டும்!

கே. ராமசாமி,
பெரிய மஸ்கெலியா

படப்பிடிப்பின்போது பேசக் கூடாது என்று என் நண்பர் கூறுவது உண்மையா?

பேசுவது மட்டுமல்ல. வேறு எந்த விதத்திலும் சிறு சப்தம்கூட செய்யக் கூடாது! உமது நண்பர் பூரா விஷயத்தையும் சரியாகச் சொல்லவில்லை போலிருக்கிறது!

எஸ். ராஜகோபாலன்,
திருவிடைமருதூர்

எம். ஜி. ராம்சந்தருக்கு கடிதம் எழுதினால் பதில் எழுதுவாரா?

பதில் எழுதுவார், ஆனால் கடிதத்தின் தரத்தைப் பொருத்தது இது!

எம். வி. வரதன்,
புதுக்கோட்டை

விசிறிகள் சினிமா நக்ஷத்திரங்களிடமிருந்து கையெழுத்து வாங்கி சேகரம் செய்கிறார்களே, சினிமா நக்ஷத்திரங்கள் யாரிடமிருந்து கையெழுத்து வாங்குவார்கள்?

'செக்'கில், பட முதலாளிகளிடமிருந்து!

படவுலகில் காண்பதற்கரியது எது?

தற்போது வெற்றிப் படங்கள்!

விலை மதிப்பற்ற நகையொன்றை ஒரு நடிகைக்குப் பரிசளிக்க விரும்புகிறேன். பதிலுக்கு அவர் என்ன செய்வார்?

ஒரு புன்னகை பூப்பார்!

ஜி. எஸ். பாண்டியன்,
அவிசாவெல்ல

வஸந்தகுமாரி பாடவும், கிருஷ்ணகுமாரி நாட்டியமாடவும், சூர்யகுமாரி பன்னீர் தெளிக்கவும் குசலகுமாரி என் பக்கத்தில் அமர்ந்திருக்கவும் ஒரு கனவு கண்டேன். என் கனவு நனவாகுமா?

'குமாரிகள் பித்துப்பிடித்த திருக்குமரா! உன் கனவு பலிக்கட்டும்' என்று எந்தப் போலிச்சாமியாராவது உமது நிலைக்கிரங்கி வரங்கொடுத்து அது பலிப்பதாக இருந்தால், உமது கனவும் நனவாகும்!

எஸ். வி. சண்முகம், தர்மபுரி

'திரும்பிப் பார்' என்னவாயிற்று?

சென்ற 10-ம் தேதியை நீர் திரும்பிப் பாரும்!

வெளிவரும் சில படங்களில் குதிரைப் பந்தயக் காட்சிகள் காட்டுவதன் நோக்கம் என்ன?

புராணப் படமாகவோ, சரித்திரப் படமாகவோ இருந்தால் குதிரைச் சவாரியைக் காண்பிக்கலாம். சமூகப் படத்தில் அந்தக் குறை இருக்கக் கூடாது என்பதற்காக இப்பந்தயக் காட்சிகளைச் சேர்க்கிறார்கள் போலும்!

எப். ஆர். ஏ. சிங், இலங்கை

பிறவிகளிலேயே சிறந்தது மனிதப் பிறவிதான் என்று நம் முன்னோர்கள் கூறியிருக்க, மனிதனுக்கு உபமானமாக மலரையும், மானையும் மயிலையும் கூறுவது சரியா? எப்படி?

சரியல்ல! ஏனெனில் மனிதன் தற்போது நடந்து கொள்ளும் மோசமான விதத்தினால் அந்த மலருக்கும் மானுக்கும் மயிலுக்கும் பேசும் திறனிருந்தால் 'மான நஷ்ட தாவா' போட்டு விடுமே!

எஸ். அய்யாக்கண்ணு, மொரட்டுவ.

நம்பியாரின் வாழ்க்கை வரலாற்றை பேசும் படத்தில் ஏன் பிரசுரிக்கவில்லை? அவரது வரலாற்றைச் சுருக்கமாக கூற முடியுமா?

'பேசும் பட'த்தில் அவரது வாழ்க்கை வரலாறு கடந்த நான் காண்டுகளுக்கு முன்னரே பிரசுரிக்கப்பட்டு விட்டது. அவரது வாழ்க்கை வரலாற்றின் சுருக்கம்: மேடை நடிகராக இருந்து, மீனும் திரைவான நக்ஷத்திரமாக மாறி மங்காப் புகழில் மிதந்து வருகிறார் நம்பியார்.

எம். கோவிந்தசாமி, மஸ்கெலியா போஸ்ட்

பரோபகாரத்தில் நடித்த ராமசர்மா எந்த ஜாதியைச் சேர்ந்தவர்? அவரது வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாக கூற முடியுமா?

'பேசும் பட'த்தில் அவரது வரலாறு விரைவிலேயே வெளிவரவிருக்கிறது.

வி. ராஜா, மதுரை

கனபரிமாணப் படங்களுக்கு நம் நாட்டில் வரவேற்பிருக்குமா?

இருக்கலாம். தங்கள் உண்மை கனபரிமாணங்களை இது வெளியிட்டு விடுமே என்று வேண்டுமானால் நம் நடிக நடிகையரில் சிலர் எதிர்க்கலாம்!

'உலகம்' எப்படியிருக்கும்?

உருண்டையாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்!

ராசையா, நாவலபிட்டி

என் நண்பர் ஒருவர் அகண்ட மார்பும், உயர்ந்த புஜமும், இருண்ட விழிகளும், நல்ல ஆரோக்யமும் கொண்டவர் அவர் ரஞ்சனுடன் போர்புரிய விரும்புகிறார். தங்கள் அபிப்பிராயம் என்ன?

பண்டைய சரித்திரங்களில் எதிரி நாட்டு மன்னனை வர்ணிப்பதைப் போலவே தங்கள் நண்பரையும் வர்ணித்திருக்கிறீர்களே! இருக்கும் படப்பிடிப்புகளுக்கே நேரம் போதவில்லை என்பதால் காலதேவனுடன் போராடிக் கொண்டிருக்கும் ரஞ்சனுக்கு உமது நண்பரின் தரத்தை எடைபோட இடமிருக்காது என்று நினைக்கிறேன்.

குதர்க்கன், வேலூர்

நம் நடிகைகளிடம் காணப்படாத ஏதேனும் விசேஷ அம்சம் ஹாலிவுட் நடிகைகளிடம் உள்ளதா!

ஆம், சட்ட ரீதியில் விவாகரத்து!

அருணா நமசிவாயம், திருவாரூர்

இந்தியாவில் மொத்தம் எத்தனை ஸ்டூடியோக்கள் உள்ளன? அவற்றில் முதன்மையானது எது?

சுமார் அறுபது ஸ்டூடியோக்கள் உள்ளன. சென்னையிலுள்ள வாஹினி தான் இந்தியாவில் மட்டுமின்றி தூரக்கிழக்கு நாடுகளுக்குள்ளேயே சிறந்த ஸ்டூடியோவாகும்.

இந்தியாவில் மொத்தம் எத்தனை நிரந்தர தியேட்டர்கள் உள்ளன? அவற்றில் முதன்மையானது எது?

சுமார் 3500 தியேட்டர்கள் உள்ளன நம் இந்தியாவில். பம்பாயில் உள்ள லிபர்டி, தியேட்டர்களுக்கு ராஜாவாக விளங்குகிறது.

நடராஜன், திருச்சி

சினிமா என்பது என்ன?

ஒரு லாட்டரி பந்தயம், இப்போதைக்கு!

தங்கவேலு, மைசூர்

இப்பொழுது வரும் படங்களைப் பார்க்கவே கண்கூசுகிறதே. என்ன செய்வது?

'கூலிங் கிளாஸ்' போட்டுக் கொண்டு பாரும்!

நான் பட முதலாளிகளுக்கும் நடிக நடிகைகளுக்கும் உதவும்படி வியாபாரம் செய்ய விரும்புகிறேன். எத்தகைய வியாபாரத்தை ஆரம்பிக்கலாம்?

கடன் கொடுத்துதவும் 'வட்டிக் கடை'யை ஆரம்பியுங்கள்!

நீங்கள் அளிக்கும் பதில்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யலாம்?

ரூபா 9/ அனுப்பி 'பேசும் படம்' வருஷ சந்தாதாராகச் சேருங்கள்!

வி. க. கனக செல்வராஜா, வவுனியா

நடிகர், நடிகைகள் வாழ்க்கை வரலாற்றை விவரிப்பதுபோல் பின்னணி பாடக பாடகியர்களுடையதும், வசனகர்த்தாக்களுடையதும் வாழ்க்கை வரலாறுகளை விவரித்தால் என்ன?

சென்ற இதழ் பேசும் படத்திலிருந்து வசனகர்த்தாக்களைப் பற்றிய புது பகுதியை ஆரம்பித்திருப்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பின்னணி பாடகர்களுடைய வரலாறுகளை விரைவில் பிரசுரிக்க முயலுகிறோம்.

நால்வர் படத்தில் யார் யார் நடிக்கிறார்கள்?

தங்கம், முத்துலக்ஷ்மி முதலியோர் நடிக்கிறார்கள்.

நாதன், மதுரை

நக்ஷத்திரங்கள் பகலில் மின்னுமா?

'மாட்டினி ஷோ' இருந்தால்!

எம். டி. டி. ராஜன், சென்னை

டி. ஆர். ராஜகுமாரியின் 'கூலி'யை எப்பொழுது வெண் திரையில் பார்க்கலாம்?

அவர் அதைத் தயாரித்தால்......?

எம். எஸ். கருப்பய்யா, இலங்கை

'பேசும் படம்' பார்த்தால் பயித்தியம் பிடித்து விடும் என்கிறார்களே உண்மையா?

ஆமாம், பார்த்தவுடனே வாங்கிப் படிக்கவேண்டும் என்ற பைத்தியம் ரஸிகர்களுக்குப் பிடித்து விடுகிறதல்லவா?

ப. அற்புதராணி, யாழ்ப்பாணம்

பண்டரிபாயின் சகோதரி மைனுவதியை நான் சந்திக்க விரும்புகிறேன். இயலுமா? அவரது விலாசம் என்ன?

7. சரவண முதலி தெரு–17 என்ற அவரது விலாசத்திற்கு கடிதமெழுதிக் கேளும்.

குமாரி தங்கத்தின் விலாசம் என்ன?

c/o சங்கீதா பிக்சர்ஸ், சென்டிரல் ஸ்டூடியோ, கோவை என்பது அவரது தற்போதைய விலாசமாகும்.

பொ.செ.துரைராஜா, வவுனியா

இவ்விடத்தில் ஓர் இசை ஆசிரியர் இருக்கிறார். அவர் பெண்களின் பின்னால் சுற்றித் திரிகிறார். இதன் காரணம் என்ன?

நம் பண்டைய இலக்கியங்களில் 'பெண்களைப் பார்த்தவுடனே சில கவிகள் தன்னை மறந்து பாட ஆரம்பித்து விடுவார்கள்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்போல இந்த தற்கால இசை ஆசிரியருக்கு மங்கைகளைப் பின்பற்றிச் சுற்றினால்தான் 'மெட்டு' போடவரும் போலிருக்கிறது!

உ. சாகி ரக்மன், திருகோணமலை

பிரபல நடிக நடிகையர்களுக்கு கடிதம் எழுதத் தடையேதேனும் உண்டா?

உங்கள் கடிதங்களுக்கு அவர்களிடமிருந்து பதில் கிடைக்காமல் போய், அதற்காக தொடர்ந்து நீர் கடிதம் எழுதி 'நீர் கடிதம் எழுத வேண்டாம் இதோ பதில்!' எனபதாக நக்ஷத்திரங்களே தடை விதித்தால் உண்டு!

மாணிக்கம், கும்பகோணம்

ஒரு விதவை இரண்டு வருஷங்களுக்குப் பிறகு கல்யாணம் செய்து கொண்டால் அவளுக்கு குழந்தை பிறக்குமா?

இதற்கென்று இருக்கும் 'உடற் கூறு' பத்திரிகைகளுக்கு இம்மாதிரிக் கேள்விகளை எழுதிக் கேளும்.

கே. சுப்பய்யா, ரிஷபம்

அதிகமான படங்களை டைரக்ட் செய்தவர் யார்?

எந்த மொழியில் என்பதை சொல் லுங்கள், ஸார்?

பானுமதியைத் தவிர நம் நடிக நக்ஷத்திரங்களில் வேறு யாராவது சொந்தத்தில் ஸ்டூடியோ வைத்திருக்கிறார்களா?

பர்மாராணியில் நடித்த டி. ஆர். சுந்தரம் வைத்திருக்கிறாரே!

எஸ் எம். ரிஸா, காலி

பானுமதியின் விலாசம் என்ன?

முலானி தெரு, தியாகராய நகர், சென்னை—17 என்ற விலாசத்தில் அவர் இருக்கிறார்.

இ. வேதா, மட்டகளப்பு

ஒரு சினிமா நடிகை படங்களில் 'நடிக்கும்'போது தன் கற்பை காப்பாற்றிக் கொள்கிறாரா?

காப்பாற்றிக் கொள்கிறார்!

ஒரு படத்தின் வெற்றிக்கு காரணஸ்தர் யார்?

தற்போது தணிக்கை அதிகாரிகள்!

வடநாட்டு லதாமங்கேஷ்கரை விட பி. லீலா இனிமையாகப் பாடுவார் என்று நான் அபிப்பிராயப் படுகிறேன். தங்கள் அபிப்பிராயம் என்ன?

'எந்த இரு நபர்களின் அபிப்பிராயமும் பொருந்துவதில்லை' என்ற உலக வாக்கு இங்கு நிரூபணமாகி விட்டது.

சந்திரகுமார், மதுரை

இப்பொழுது பத்மினி எந்தப் படங்களில் நடித்து வருகிறார்?

ஆசை மகன், சொர்க்க வாசல் முதலிய படங்களில் நடித்துவருகிறார்.

ராமலிங்கம், புதுவை

சினிமா நடிகர்கள் ஊர் பிரயாணம் செய்யும்போது பொது மக்கள் அவர்களைப் பார்க்க விரும்பினால் அதை நடிகர்கள் பொருட் படுத்துவதில்லையே. பொது மக்களால் முன்னுக்கு வந்த இவர்கள் இப்படிச் செய்வது சரியா?

இம்மாதிரி செய்த சில நடிகர்கள் இப்பொழுது மண்மூடிப் போய் இருந்த இடம் தெரியாமலிருப்பது இவர்களுக்கு எச்சரிக்கையாக இருக்கட்டும்!

சங்கர், சென்னை

மனிதனில் நடித்த கிருஷ்ணகுமாரி இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்? அவரது விலாசம் என்ன?

சுமார் அரை டஜன் படங்களில் நடித்து வரும் கிருஷ்ணகுமாரி ரஸிகர்களின் மதிப்பை உணர்ந்தவர். 11, மூஸா சேட தெரு, தி. நகர் சென்னை—17 என்ற விலாசத்திற்கு கடிதம் எழுதும். அவசியம் பதில் கிடைக்கும்.

பி. எம். முஹம்மது ஆதம், லால்பேட்டை.

சினிமா உலகில் வழுக்கி விழுந்த வனிதையரைத் தான் காணலாம் என்று என் நண்பர் வாதாடுகிறார். உங்கள் அபிப்பிராயம் என்ன?

டைரக்டர்கள், பட முதலாளிகள் முதலியோரையும் பார்க்கலாமே!

என் மனம் கவர்ந்த வைஜயந்திமாலாவை எந்தப் பூங்காவில காணலாம்?

திரை பொருத்தப்பட்ட தியேடடர் எனும் பூங்காவில், அவர் நடித்த படம் வரும்போது!

எம். ஆர்., வத்தலகுண்டு

சினிமா நடிகையாவதற்கு ஒரு பெண் முதன் முதலில் என்ன செய்ய வேண்டும்?

சினிமா நடைமுறை அகராதிப்படி வெட்கத்தை விட்டு விடவேண்டும்!

பட முதலாளிகள் இப்பொழுது யாருக்கு அதிகமாக பயப்படுகிறார்கள்?

பிராந்திய தணிக்கை அதிகாரிக்கு

தங்கவேலு, வவுனியா

எம். கே. ராதா, எம். ஜி. ராம்சந்தர், ரஞ்சன், வீரப்பா இவர்களில் நடிப்பிலும் அழகிலும் வாள் சண்டையிலும் சிறந்தவர் யார்?

நடிப்பிலும் அழகிலும் ராதாவும், வாள் சண்டையில ரஞ்சனும் சிறந்தவர்கள்.

சந்துரு, ஜோதிபுரி

மதன மோஹினியில் நடித்த ஹரிணியும், ஸ்ரீ முருகனில் பால முருகனாக நடித்த பேபி ஹரிணியும் ஒரே நபர்தானா?

மதன மோஹினியில் அந்தப் பெயருள்ள நடிகை யாரும் நடிக்கவில்லையே 'ஜகன மோகினி'யில் நடித்த ஹரிணியாக இருந்தால் நீர் குறிப்பிடுவது சரி!

டி. பிரேமாவதி தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ருசி வகைகளின் ஆராய்ச்சியில் காலத்தைக் கொன்று வருகிறார்!

பி. தங்கமுத்து, இலங்கை

ராஜமாணிக்கம் நாடகக் கம்பெனியின் விலாசமென்ன?

காங்கிரஸ் மைதானம் தேனாம்பேட்டை, சென்னை-18 என்ற இடத்தில் அவரது கம்பெனி இருக்கிறது.

திரினித்தே ஆசிர், பாண்டிச்சேரி.

லதா மங்கேஷ்கர் எத்தனை சினிமாவில் பாடியிருக்கிறார்?

அவருக்கே மறந்து போயிருக்கும்!

பி. சங்கரமூர்த்தி, கீழப்பட்டமுடையார்புரம்

சில தமிழ்ப் படங்களில் காதலர்கள் காலேஜிலிருந்து திரும்பும் பொழுது சைக்கிள் சவாரி செய்து கொண்டே காதல் கீதம் பாடிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் இவ்விதம் நம நாட்டில் நடைபெறுவதில்லையே?

நாட்டில் நடைபெறுவதை சினிமாவில சித்தரித்துக் காட்டுவதும் தனிக் 'கலை'யாயிற்றே!

நக்ஷத்திரங்களின் அந்தரங்க விஷயங்களை 'பேசும்-படம்' எழுதினால் என்ன?

'பேசும் பட'த்தை ரஸிகர்கள், நக்ஷத்திரங்கள் முதலியோரின் 'வசைப் பட'மாக ஆக்கச் சொல்கிறீர்!

காதல் பெரிதா, நட்பு பெரிதா?

'உள்ளக் கிளர்ச்சியினால் பருவ மாறுதலுக்காக ஏற்படுவது காதல்; உள்ளன்போடு தொடர்பை உண்டாக்குவது நட்பு. முனது நிலையற்றது; பிந்தியது நிரந்தரமானது' என்று பிளாட்டோ கூறியிருக்கிறார்.

எம். துரைராஜ். ...?

பேசும் பட'த்தில வெளி வருவதுபோல் ஹிந்திப் படங்களின் கதை வசனம் எந்தப் பத்திரிகையிலாவது வெளி வருகிறதா?

அப்படியொரு ஹிந்திப் பத்திரிகை வெளிவருவதாகத் தெரியவில்லை.

ஏ. சம்பந்தம், மருத்துவக்குடி

சேலம் பொன்னொளி புரொடக்ஷனார் தனவந்தன என்ற ஒரு படம் தயாரிக்கப் போகிறார்களாமே, உண்மையா?

இது விவரம் எங்களுக்குச் சரிவர கிடைக்கவில்லை

ம. இ. நாயகம், யாழ்பாணம்

பி. கே. சரஸ்வதியின் நடிப்பைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

இன்னும் பண்பட வேண்டும்.

எம். கே. ராதா இப்பொழுது எந்தப் படங்களில நடித்து வருகிறார்?

ஜெமினி ஔவையார், உலகம் பலவிதம் முதலிய படங்களில் நடித்து வருகிறார்.

வி. எம். லட்சுமணன், கும்பளா

பணம் சம்பாதிப்பதற்கு ஒரு வழி சொல்லுங்களேன்?

அது அவ்வளவு எளிதாக இருந்தால் நான் ஏன் இப்படி கஷ்டப்படுகிறேன்?

ஸ்டுடியோ............

(தொடர்ச்சி)

''சிவாஜி கணேசன் இப்பொழுது ஒரு பாரிஸ்டர் ஸார்''

''நான் என்ன கலெக்டர் வேலைக்கு ஆள் பிடித்துப் போடும் கமிஷன் ஏஜண்டா? என்னிடம சொல்கிறீர்களே?'' என்றேன் நான்.

''அட! அதைச் சொல்ல வரவில்லை ஸார்! நம்ம மனிதனும் மிருகமும் படத்திலே அவர் ஒரு பாரிஸ்டராக—'பாரின்' படிப்பு படிச்சவராக வருகிறார்''—இந்தச் சம்பாஷணையை என்னுடன் நடத்தியவர் யார் தெரியுமா? மனிதனும் மிருகமும் கதை வசன கர்த்தாவும் டைரக்டர்களில் ஒருவருமான எஸ். டி. சுந்தரம்தான். இந்தச் சந்திப்பும் சம்பாஷணையும் 'மனிதனும் மிருகமும்' தயாராகும் ரேவதியில்தான் நடைபெற்றிருக்க வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியாதா என்ன?

''சாந்தி நிலையம்—மனநோய் வைத்தியசாலை'' என்ற சிறு விளம்பரப் பலகையைத் தாங்கிய ஒரு பெரிய வைத்தியசாலையின் கட்டிடம் அது.

அந்தப் பெரிய கட்டிடத்தின் முன் அறையில் இருவர் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் மனநோய் வைத்திய சாலையின் டாக்டர்; மற்றவர் பாரிஸ்டர்.

பாரிஷ்டர் மிகவும் கனிவான குரலில் டாக்டரிடம் சொல்லிக்கொண்டிருந்தார். ''டாக்டர்! டாக்டர்!' நீங்க எப்படியாவது அவரைக் காப்பாற்றி விடவேண்டும். டாக்டர்! டாக்டர்!!''

''இதோ பாருங்க! இந்த மாதிரி நிலைமையிலே நீங்ககூட சர்வ ஜாக்கிரதையாகப் பழகணும். இல்லாவிட்டால் உங்களுக்கே கூட ஆபத்து ஏற்பட்டுவிடலாம.''—டாக்டர் பாரிஸ்டருக்கு எச்சரிக்கை கொடுத்தார்.

ஆனல் பாரிஸ்டரோ தொடர்ந்து ''டாக்டர்! நீங்க எப்படியாவது அவரைக் காப்பாற்ற முயற்சி செய்யுங்கள்'' என்று தனது விடாப்பிடிக் கோரிக்கையை மீண்டும் நினைவுபடுத்தினர்.

மனிதனும் மிருகமும் — ரேவதி புரொடக்ஷன்ஸ் தயாரிப்பு. கே. வேம்பு. கதாசிரியர் சுந்தரம் இருவரும் கூட்டாக அமர்ந்து இபபடத்தை டைரக்ட் செய்து வருகிறார்கள். மாதுரிதேவி. டி. ஆர் ராமச்சந்திரன். கே. சாரங்கபாணி முதலியோரும் இப்படத்தில் நடித்து வருகிறார்கள்.

* * *

''இலவசமாக சினிமா காட்டுறுங்க ஸார். பாஸ் இல்லாமலே கூட ஓசியிலே பார்க்கலாம் படம். போங்க போங்க!'' என்று வாஹினியின் வாயிலில் நுழையும்போதே என்னை வரவேற்று உபசரித்து வந்தனுபசாரம் தெரிவித்துவிட்டு உள்ளே அனுப்பினர் ஒரு ஸ்டுடியோவாசி. முனபின் எனக்கு அதிக பரிச்சயமிலலாத அந்த ஆசாமி என்னை இப்படி 'தடபுடல்' படுத்திவிட்டது கொஞ்சம் ஆச்சர்யமாகத்தான் இருந்தது.

பின்னர் விஷயம் தெரிய வந்த போதுதான் அவரது காருண்யத்திற்கான காரணம்—கடலின் மத்தியில் கலங்கரை விளக்கமெனத் தெரிய வந்தது. வலிய வந்து தன்னை என்னிடம் விளம்பரப் படுத்திக் கொணட அந்த நபருக்கு 'பேசும் பட'த்தில் தன் படம் வெளிவர வேண்டுமென்பது நெஞ்சில் ஊறிப்போன ஆசையாம்! அதற்காக என்னை காக்காய் பிடிக்கிறர் என்று தெரியவந்தது.

ஆனல் ஒரு விஷயம் மட்டும் உண்மை. அந்த நபர் சொல்லியது போல் இலவச சினிமா காட்சி வாஹினியின் பரந்த நிலப் பரப்பின் ஒரு மூலையில் நடைபெற்று வந்தது! இந்த இலவசக் காட்சிககுக் காரணமாக இருந்து புண்ணியத்தை இரண்டு கைகளால் வாரிக் கொண்டு போனவர்கள் ஜெயந்தி புரொடக்ஷன் ஸார்.

பொன் வயல் படத்தில் செங்கோடன் ஒரு நாட்டுப்புறத்தானுக சித்தரிக்கப் படடிருக்கிறுன். உழைத்து உழைத்து தன் விவசாயத்தையும் வாழ்வையும் வளமாக்கிக் கொண்ட அவனது இச்செய்கைகளுக்கு உரைகல்லாக இருந்தது ஒரு பெரிய பண முடிப்பு! அதை பூமியில்



ரோஹிணி ஸெட்டில் என் காமிராவைப் பார்க்கிறார் எஸ். ஏ. நடராஜன்

புதைத்து இரவும் பகலும் காவல் காத்து வந்தான் செங்கோடன். பணத்தின் மீது அவ்வளவு உயிர் அவனுக்கு! அவனது ஆசைக் காதலியாக ஒருத்தி ஏற்படுகிறாள். நாட்டுப்புறத் தானுக் கேற்ற பட்டிக்காட்டுப் பாவை அவள்! செங்கோடன் முழங்காலுக்கு மேல் வேட்டியைக் கட்டி யிருந்தான் என்றால், முழங்கை வரை வரும்படி ரவிக்கை போட்டிருந்தாள் அவள்!

இவர்களது ஆனந்த வாழ்க்கையில் புயல்வீச ஆரம்பித்து விடுகிறது. பங்காரு, ஏஸ்ராஜ் போன்ற ஒரு அயோக்கிய கும்பல் செங்கோடனின் பணத்தை அபகரிக்க திட்டம் தீட்டுகிறது இந்தச் சதித் திட்டத்தில் ஒரு சினிமா கொட்டகை தன் பங்கை புரிகிறது.

தன் ஆசைக் காதலியால் தூண்டப்பட்ட ஆவலை அடக்க முடியாமல் செங்கோடன் சினிமா பார்க்கப் போகிறான். கிராமாந்திர மாதலால் ஒரு டூரிங் சினிமாதான் அங்கு இருக்கிறது.

சென்றமாத மத்தியில் இந்த டூரிங் சினிமா சம்பந்தப்பட்ட காட்சிகள் பூராவும் பொன் வயலுக்காகப் பிடிக்கப்பட்டன இதற்காக ஒரு டூரிங் சினிமாவையே சில தினங்களுக்கு வாடகை பேசி வாஹினியில் 'அடிக்க'ச் செய்திருந்தார்கள்.

படத்தின் பாத்திரங்கள் தவிர படம் பார்ப்பதற்கும் கும்பல் தேவை தானே? அதற்காக கட்டணமின்றி காட்சிக்கு அழைக்கப்பட்டார்கள் பலர்.

முத்துலக்ஷ்மி டிக்கெட் கொடுக்கும் இடத்தில் டிக்கெட்டும் கையுமாக, சிறு பணக்குவியலுக்கு முன் உட்கார்ந்திருந்தார்.

தியேட்டர் சொந்தக்காரரான—படத்தில்—தங்கவேலு காட்சிக்குக் கூட்டம் சேருவ

'வீரசுந்தரி' சுந்தராம்பாளும், இன்ஸ்பெக்டர் ஜானகிராமனும்

'ஜாதகம்' பார்க்கிருர் நாகேந்திரராவ

ைதக் கண்காணித்து வந்தார்.

அப்பொழுது அங்கமுத்து வந்தார். அவர் இடுப்பில் ஐந்து வயதுக்கும் மேற்பட்ட ஒரு 'குழந்தை' அவரால் வலிய வைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. 'மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு கட்டணம் வசூலிக்கப்படும்' என்பது தியேட்டர் சரித்திரத்தின் பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கும் ஒரு 'தற்காப்பு' சட்டமல்லவா?

அங்கமுத்து 'சுமைதாங்கியாக' மாறிவிட்டதன் மர்மம் தங்கவேலுக்குப் புரிந்து விடுகிறது.

''இதோம்மா! குழந்தையை கீழே இறக்கி விட்டு அழைச்சுக் கிட்டுப் போ! நீ அதுக்கு டிக்கெட் வாங்காமப் போனாலும் பரவாயில்லை' என்று சொல்லிவிட்டு. அங்கிருந்த சிப்பந்தி ஒருவனைப் பார்த்து ''டேய் இந்தக் 'குண்டை'த் தூக்கி ஒரு மூலையில் போடு!'' என்ருர் தங்கவேலு.

கூடியிருந்தவர்கள் கொல்லென்று சிரித்து விட்டார்கள்.

அந்தச் சிரிப்பின் கோஷத்திலே 'ஷாட் ஓகே! கட்கட்' என்ற டைரக்டர் ஏ. டி. கே. யின் சந்தோஷக் குரலும் கேட்டது!

பொன்வயல். 'கல்கி' யின் பொய்மான் கரடு என்ற நவீனத்தைத் தழுவி எடுக்கப்படுகிறது செங்கோடனுக டி. ஆர். ராமச்சந்திரனும், அவரது கிராமாந்திரக் காதலியாக அஞ்சலி தேவியும் நடித்து வருகிருர்கள்.

ஷைனுவதி என்ற புதுமுகம் பொன்வயல் மூலம் பொதுமக்களுக்கு அறிமுகமாகப் போகிருர். 'பொன்வயல்' அறுவடையாக இன்னும் இரண்டொரு மாதகாலம் பிடிக்கலாம். படத்தின் டைரக்டரான ஏ.



சரோஜாவுக்கு டைரக்டர் ராவ் ஆலோசனை கூறுகிருர் 'ஆசை மகன்' ஸெட்டில்

டி கே, வசனத்தையும் எழுதியிருக்கிறார்.

* * *

வாஹினியில் 'மெட்ராஸ் ஆர்ட்' தயாரிக்கும் 'ரோஹிணி' சம்பந்தப்பட்ட ஒரு காட்சியையும் பார்த்தேன். நகைக் கடைக் காட்சி அது!

அதன் விபரம் இதுதான்:

சந்துரு ஒரு பெரிய ஜமீன்தார் மகன் 'ஊதாரிக் கும்பல்' ஒன்று அவனுக்கு உயிர் காப்பாக வந்து சேருகிறது நண்பர்களின் தூண்டுதலால் சந்துரு பல கெட்ட வழிகளில் ஈடுபடுகிறான் சந்துருவின் நடத்தையில் அதிருப்தி கொண்ட ஜமீன்தார் அவனை வீட்டை விட்டு விரட்டிவிடுகிறார். தன் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு தவறான வழிகளில் பணம் சம்பாதிக்க முயலுகிறான் சந்துரு. அவனுக்கும், அவனது நண்பர்களுக்கும் ஒரு நகைக்கடை கண்ணில் தென்படுகிறது.

பட்டாடோபமான முறையில் சந்துருவை உடையணியச் செய்து நகைக்கடைக்கு அழைத்து வருகிறார்கள், அவன் நண்பர்கள்.

நகைக்கடை முதலாளியான ஸேட் அவனது ஆடம்பரங்களுக்கு அடிமையாகி, சந்துருவை பெரிய செல்வச் சீமான் என்று நினைத்து விடுகிறான்,

சந்துரு சிலவிலையுயர்ந்த நகைகளைக் சுட்டிக்காட்டி, அவற்றை கொடுக்கும்படியும் அதற்கான பணத்தைக் கொடுத்தனுப்புவதாகவும் ஸேட்டியிடம் கூறுகிறான். ஆனாலும் ஸேட் அவனை நம்புவதில்லை. ஆகவே தன் சிப்பந்தி ஒருவனிடம் நகைகளைக் கொடுத்து பணத்தைப் பெற்றுவரும்படி அவர்களுடன் அனுப்புகிறான்.

மார்வாடிக் கடை சிப்பந்தி சந்துருவின் கார் சவாரி ஜம்பமான பார்வை முதலியவற்றில் மயங்கி விடுகிறான். ஆகவே நகைப் பெட்டியை அவனிடம் கொடுத்து விடுகிறான்.

நடுவில் கார் ஓர் கடையின் முன் நிறுத்தப்படுகிறது அங்குள்ள ஒருவனிடம் 'இந்த ஆளிடம் பணத்தைக் கொடுத்தனுப்பு' என்று உத்தரவு போட்டுவிட்டுப் போய் விடுகிறான் சந்துரு.

'பணம் வரும்! வரும்!' என்று எதிர்பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருக்கிறான் சிப்பந்தி அவனுக்கு சந்துருவின் விஷயம் தெரியாது!

ரோஹிணியில் இந்த நகைக்கடை காட்சி ஒரு முக்கியமான கட்டம். முடிவடையும் தறுவாயிலிருக்கும் இந்தப் படத்தை கமால் கோஷ் டைரக்ட் செய்து வருகிறார். அவருக்கு உதவியாக மோஹினியை டைரக்ட் செய்த லங்காசத்யம் வேலை செய்து வருகிறார்.

சந்துருவாக இந்தப் படத்தில் எஸ். ஏ. நடராஜன் நடித்து வருகிறார். மேனாட்டு மோஸ்தரில் உடை அணிந்து கொண்டு புகை பிடித்துக் கொண்டு அவர் 'ஸெட்'டில் உலாவி வந்த தோற்றமே 'தனி'யாக இருந்தது.

அன்றைய படப் பிடிப்புக்கு மாதுரி தேவியும் வந்திருந்தார் தனது கணவர் முகர்ஜியுடன் உட்கார்ந்து கொண்டு அவர் படப் பிடிப்பைக் கவனித்து வந்தார்.



பொன் வயலுக்கான கூடாரத் தியேட்டர் பிரிக்கப்பட்டபின் - புரொஜக்டர் அறையின் தோற்றம்

ஒருவர் தன் இருதய பூர்வமாக ஒரு விஷயத்தை நினைப்பார். அவரது அந்தரங்க சுத்தியினால் அச்சம்பவமும் நடைபெற்று விடும் 'மனம் போல் மாங்கல்யம் — அவர் நினைத்தது போலத் தான் சம்பவமும் நடந்திருக்கிறது' என்று பழமொழியுடன் குறிப்பிடுவார்கள்.

இந்தப் பழமொழி வாஹினியில் நான் இம்முறை நுழைந்த போது என் விஷயத்திலும் பலித்து விட்டது!



சிவதாணுவுக்கும் சாரங்கபாணிக்கும் 'வசனம்' படித்துச் சொல்கிறார் உதவி டைரக்டர் ஸ்ரீநிவாஸன்

இம்முறை ஏதேனும் புதுப்படமாக—பேசும் படம் ஸ்டுடியோ விஜயத்தில் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று எதிர்பார்த்துச் சென்ற எனக்கு ஒரு புதிய படம் தயாராகக் காத்திருந்தது! அந்தப் படமும் 'மனம்போல் மாங்கல்யம்' ஆக இருந்தபோது நானே என்னை ஒருகணம் மறந்து விட்டேன்.

அங்கே ஒரு கல்யாணப் பிரச்னை அடிபட்டு வருவதைப் பார்த்தேன்.

சாரங்கபாணியும் சிவதாணுவும் தான் இங்கு மணப்பிரச்னையில் ஈடுபட்டிருந்தார்கள்.

"அப்பொ ஒரு வழியா முடிச்சுடுங்களேன்!..." என்று புரோகிதர் சிவதாணு பணிவுடன் சாரங்கபாணியிடம் கூறினார்.

"நீர் ஒண்ணு! கல்யாண விஷயமா பேசறச்சே!..."

"என்ன கல்யாண விஷயமா?" புரோகிதரின் குரலில் ஆச்சர்யம் தொனித்தது. அவரது கண்கள் வியப்பினால் விசாலமடைந்தன.

"ஆமாம்! மீனாக்ஷியை நானே கல்யாணம் பண்ணிக்கலாம்னு பாக்கறேன்..."

சாரங்கபாணி கடைசியில் கூறிய விஷயம் புரோகிதருக்கு 'அணுகுண்டு தன் தலையில் வெடித்த' உணர்ச்சியை ஏற்படுத்தியது.

நாகப்பா வயோதிகர். மீனாக்ஷி பருவத்தின் முதல் படியை எட்டிப் பிடித்திருக்கும் எழிலரசி.

மீனாக்ஷியை தன் மகன் சுந்தருக்கு மணமுடிப்பது பற்றி நாகப்பா முதலில் தீர்மானித்திருந்தார். ஆனால் அவரது முடிவு இப்படியாக—தானே மீனாக்ஷியை மணம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதாக மாறிவிடும் என்று புரோகிதர் நினைக்கவில்லை. ஆகவே அவரது திடீர் முடிவு புரோகிதரையே திகைக்க வைத்து விடுகிறது.

நாராயணன் கம்பெனியாரின் 'மனம்போல் மாங்கல்யம்' வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கொண்டு பின்னப்பட்டது.

நாகப்பாவின் பாத்திரத்தை சாரங்கபாணி ஏற்று நடிக்கிறார். சிவதாணு புரோகிதராகவும், சுந்தராக 'ஜெமினி' கணேசனும் தோன்றுகிறார்கள். மீனாக்ஷியாக சாவித்திரி மின்னுகிறார்.

பி. புல்லய்யா டைரக்ட் செய்து வரும் இந்தப் படம் முக்கால் பாகத்திற்கு மேல் வளர்ந்திருக்கிறது.

நாராயணன் கம்பெனியாரின் இரண்டாவது தயாரிப்பு இப்படம்.

பிரிட்டனின் தலைசிறந்த படத் தயாரிப்பாளர்களுள் ஒருவர் அலெக்ஸாண்டர் கோர்டா. கன பரிமாண படங்களைப்பற்றி தனது மனப்பூர்வமான அபிப்பிராயங்களை இக்கட்டுரையில் விளக்கியிருக்கிறார் அவர்.

சினிமா எதிர்நோக்கும் புரட்சிகள்

அலெக்ஸாண்டர் கோர்டா

வாழ்க்கையில் ஏற்படக் கூடிய ஒவ்வொரு மாறுதலையும் முன்னேற்றப் பாதையின் மைல் கல்கள் என்றும், தான் காணும் எந்தப் புதுவிஷயத்தையும் ஏற்கனவே கண்டதை விடச் சிறந்தது என்றும் நினைப்பது மனித இயல்பு. முக்கியமாக, எளிதில் எதையும் நம்பி விடக்கூடிய மக்கள் இப்படித்தான் நினைக்கிறார்கள்.

சினிமா உலகிலும் இப்படிப்பட்ட ரஸிகர்களுக்குக் குறைவில்லை. சாதாரண பேசாத படங்கள் வந்தன; பலப்பல பெயரில் வர்ணப் படங்கள் வந்தன. இப்போது கனபரிமாண படங்கள் வந்திருக்கின்றன. 'கனபரிமாணத்தில் படம் தயாரிக்கப் படுகிறதா? பேஷ், பேஷ். அது சாதாரணப் படங்களைவிட குறைந்த பக்ஷம் ஒன்றரை மடங்காவது உயர்தரமாகத்தான் இருக்கும்' என்று ரஸிகர்கள் கருதி விடுகின்றனர். அது ஒரு முன்னேற்றம் என்ற அசைக்க முடியாத அபிப்பிராயம் அவர்களிடையே ஊறிவிடுகிறது.

படங்கள் நன்றாக இருக்கின்றன அல்லது மோசமாக இருக்கின்றன என்பதை ஆராயாமலே சொல்லி விடுகின்றனர் இந்த ரஸிகர்கள். எதைப்பற்றி மேற்படி படங்கள் கூறுகின்றன என்பதை ஆராயாமல் என்ன முறையில் அதைச் சொல்லுகின்றன என்றுதான் கவனிக்கிறார்கள் இவர்கள். சுமார் முப்பத்து மூன்று வருஷங்களுக்கு முன், அதாவது 1920-ம் வருஷவாக்கில் பல சித்திரக்காரர்கள் இப்படித்தான் திண்டாடினார்கள். வரைவதைவிட எந்தப் பாணியில் சித்திரம் தீட்டினால் நன்றாயிருக்கும். என்ற கலைக்குதவாத பிரச்னைகளைப்பற்றி மாரடித்துக் கொண்டிருந்தார்கள் இந்தச் சித்திரக் கலைஞர்கள்.

மேற்சொன்ன கருத்துதான் சரி என்று வைத்துக் கொள்வோம். அப்படியானால் இதுவரை இந்த வெள்ளித் திரை சாதித்ததுதான் என்ன? ஒன்றுமே இல்லையா? புகைப்படத்தைச் சலனப்படமாக ஆக்கியவெறும் முறைதான் அதுவா?

அது அப்படித்தான் என்று சொல்லப்படுமானால் என் வாழ்நாள் வீணாக்கப் பட்டதாகத்தான் நான் கருதுகிறேன். கவிஞனின் உண்மைத் தேவை காகிதமல்ல. அதைப் போல என்னைப் போன்ற படத் தயாரிப்பாளர்களுக்கு விளக்குகளும் பிலிம் சுருளும் தேவைகளல்ல. யாவருக்கும் தேவையானது நம்மைச் சுற்றி ஜீவனுடன் துடிதுடிக்கும் வாழ்க்கைதான். வாழ்க்கையைப் பிரதிபலிக்காத எதுவும் ஜீவனுள்ளதாகவோ கவர்ச்சிகரமானதாகவோ இருக்க முடியாது. அந்த வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் விதத்தில் எதையும் அவரவர்கள் அறிவுக்கும் திறமைக்கும் எட்டியவரை சித்தரிக்க முயலுகிறோம். கலைஞர்கள், கவிஞர்களுக்கும் படத் தயாரிப்பாளருக்கும் இடையே முக்கியமான வித்தியாசமிருக்கிறது.

ஒரு ஓவியக் கலைஞரை எடுத்துக் கொள்வோம். மிகுந்த திறமைசாலியாக அவர் விளங்கக் கூடும். ஆனால் புகழும் பணமும் கிடைக்காது. இதனால் அவர் மனம் சோர்ந்துவிடுவதில்லை. சாகும் தறுவாயில் புகழ் பெறுகிறவர்களையும் இறந்த பின் புகழ்மாலை பெறுகிறவர்களையும் அவர் தன் அகக் கண்முன் நிறுத்திப் பார்ப்பார். தனக்கு இன்று பணம், புகழ் கிடைக்காவிட்டாலும் தன் ஓவியங்கள் என்றாவது ஒரு நாள் அமரத்வம் பெறக்கூடும் என்ற நம்பிக்கையில் அவர் செயலில் சோர்வடைவதில்லை. ஆனால் ஒரு படத்திற்காக சுமார் இரண்டு லக்ஷம் பவுன் செலவழிக்கும் ஒரு தயாரிப்பாளர் இப்படி கனவு காண முடியுமா? காத்துத்தான் கிடக்க முடியுமா?

சினிமா படங்களுக்கு அமரத்வ மதிப்பு இருப்பதாக நம்புகிறவர்கள் இருக்கமாட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன். ஏதாவது ஒரு படம் நிரந்தரமாகப் புகழ் பெற்றிருக்கிறது என்றால் அதற்கு காரணம் அதில் கையாளப் பட்டுள்ள ஏதாவது ஒரு நூதன முறையாகத்தான் இருக்க முடியும்.

படத் தயாரிப்பாளர்கள் எல்லோரும் கதை சொல்லுகிறவர்கள் தான். ஒரு எளிய கதையைப் படமாகச் சித்தரித்து மக்களை இரண்டுமணி நேரம் குலுங்க குலுங்கச் சிரிக்கச் செய்கிறோம்; கண்ணீர் விட்டுக் கலங்கச் செய்கிறோம்; மெய்சிலிர்க்கச் செய்கிறோம்; மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு எங்கள் இஷ்டம்போல் ஆட்டி வைக்கிறோம். அதுதான் எங்கள் கலை.

நாங்கள் வாழ்க்கையைப் பற்றிப் போதிக்கும் ஆசாரியர்கள் அல்ல; நீதி புகட்டும் ஆசிரியர்களுமல்ல. இதனால் போதனை செய்வதில் எங்களுக்குத் திறமை குறைவு என்பது அர்த்தமல்ல. வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். அவ்வளவுதான். நாங்கள் வாழ்க்கைச் சம்பவங்களைப் படம் பிடிக்கும் போதே அதில் நீதி போதனைகள் இல்லாமலிருக்க முடியுமா?

பட உலகில் புரட்சி

இப்போது சினிமா உலகில் புதுப் புது விதங்களில் புரட்சி ஏற்பட்டிருக்கிறது. கனபரிமாணப் படங்கள், டெலிவிஷன் இரண்டில் கனபரிமாண முயற்சி ஒரு சிறு புரட்சி என்பதுதான் என் அபிப்பிராயம். டெலிவிஷன்தான் மிக வேகமாக முன்னேறி வரும் ஒரு முக்கிய பொழுதுபோக்கு சாதனமாகி விட்டது.

அதன் ரகசியம் காமிராவிலோ திரையிலோ இல்லை. நாள் முழுதும் வேலை செய்து களைத்து பொழுது போக்கை விரும்பும் மக்கள் தங்கள் வீட்டிலேயே காலை நீட்டிக் கொண்டு சாவகாசமாக டெலிவிஷனை ரஸிக்க முடிகிறது. என்பது ஒன்றுதான் டெலிவிஷனின் வெற்றிக்குக் காரணம். நாளுக்கு நாள் டெலிவிஷன் ரஸிகர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே வருகிறது.

ஒலிப்பதிவு

இப்படியெல்லாம் நான் சொல்வதிலிருந்து கனபரிமாண முறை பட உலகில பிரவேசித்திருப்பதைக் கண்டு படத் தயாரிப்பாளன் என்ற முறையில் நான் பயப்படுகிறேன் என்று நீங்கள் நினைக்கக் கூடும். அது தவறு. பட உலகில் எனக்குப் பல வருஷ அனுபவமுண்டு. நாற்பது வருஷங்களாக நான் படத்தயாரிப்பில் ஈடுபட்டிருக்கிறேன். படப்பிடிப்பு வேலைகளில் எனக்குத் தெரியாதது. நான் செய்யாதது ஒன்றுமில்லை. சென்ற காலத்தை எண்ணிப் பார்க்கும்போது படத்துறையில் ஏற்பட்டுள்ள நுட்பமான மாறுதல்கள் என் ஞாபகத்துக்கு வருகின்றன.

ஆயினும் இன்று கனபரிமாணப் படங்கள் படவுலகில் ஏற்படுத்திய புரட்சியைவிட 'ஒலிப்பதிவு' முறைதான் அதிக புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறது என்று சொல்லுவேன்.

மூவர்ணப் படங்கள் வந்தன. பிறகு ஒலிப்பதிவு வந்தது என் அறிவுக் கெட்டியவரை ஒலிப்பதிவைத்தான் சிறந்த புரட்சி என்று நான் ஒப்புக் கொள்வேன். சலனப்படத்தின்

மதிப்பையே அது உயர்த்தி விட்டது. காமிரா மூலம் 'சொல்ல' முடியாததை ஒலிபபதிவின மூலம சொலல எங்களால் முடிந்தது. நடிப்பின் தரத்தையே மாற்றி யமைத்தது. வெறும் முகவெட்டுளளவர்களாக இருந்தால் மட்டும் போதாது; நலல பேச்சுத் திறனும் இருந்தாக வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தியது. இதனால் படங்களை வெறுத்தவர்கள்கூட பார்க்க ஆரம்பித்து ரஸிகர்களின் எண்ணிக்கையைப் பெருக்கினார்கள்.

புதிய பிரச்னை

கனபரிமாணம் எல்லாப் பிரச்னைகளையும் விளக்கித் தீர்த்து விடும் என்று நம்பினால் அது முட்டாள்தனமாகும். புதிய முறை. நூதனமானது என்பதற்காகச் சில காலம் மதிப்புடன் விளங்கிப் பிறகு பழசாகி விடும். நல்ல படங்களைப் பார்க்க மக்கள் ஆவல் கொள்ளுவார்கள். வரப்போகும் படங்கள் கனபரிமாண முறையிலேயே தயாரிக்கப்பட்டால் கூட அதனால் அதன் மதிப்பு உயராது. பின் இந்த முறையினால் பிரயோஜனம்?

கனபரிமாணப் படமும் வர்ணப் படங்களைப்போல தரத்தில் சில சமயம் சிறந்து விளங்கினாலும காலவரையறையின்றி இந்த 3-டியின் புதுமையை நாம் நம்பியிருந்தால் டெலிவிஷன் விரைவிலேயே சினிமாத் தொழிலை விழுங்கி விடுவதையும் நாம் பார்க்க நேரிடும். இந்த 3-டியைப் பற்றி ஒரு அமெரிக்க ரேடியோ விமர்சகர், "3-டி ஒருபடி முன்னே செல்வதல்ல; அதன் கவர்ச்சியே ஒரு அடி பின்னே செல்கிறது என்பதுதான்" என்று கூறுகிறார். வீர, தீர செயல்களை விளக்கும படங்கள் மட்டும்தான் கனபரிமாண முறையில் வெற்றி பெறும்.

சினிமா இன்னும் பல வருஷங்களுக்குத் தொண்டு செய்துதான் வரும் படங்களின் எண்ணிக்லையும் பார்ப்பவர்களின் எண்ணிக்கையும் கணிசமான அளவிலே குறையவும் கூடும் ஆனால் சினிமா ஒரு சிறந்த பொழுது போக்காகவே அமையும். 3-டியில் பிடிக்கத் தேவைபபடாத கதைகள் சாதாரண முறையில் சிறப்பாகத் தயாரிக்கப்படும் என்று நான் நிச்சயம் நம்புகிறேன். ★

மின்மினி

திரைக்கதை, வசனம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

டாக்: புஷ்பா! ஜமீந்தார் உங்களுக்கு நல்லது செய்யத்தான் வந்தார். உங்களாலேதான் அவருக்கு அபக்யாதி வந்தது. நம்தலை விதிக்கு பிறத்தியாரை நொந்துக்கிறதிலே என்ன வந்துடும் புஷ்பா?

ஜமீ: நொந்த மனசு, ஏதோ பேசறு. நாம் என்ன செய்யலாம்?

டாக்: (புஷ்பாவை நெருங்கி) புஷ்பா! ஆதிமுதற்கொண்டே உன் சுகத்திலே நானும பாதி அனுபவிச்சிருக்கேன். உன் வாழ்க்கையில் அக்கறை கொண்டவன் நான். ரம்பா பேரிலே உனக்கிருக்கிற பிரியம் எனக்கில்லையா? இரண்டு நாளா ராப்பகல் இல்லாம நான் படற கஷ்டம், மனசு வேதனை உனக்குத் தெரியாது புஷ்பா திடமா இரு. இன்னமும் முயற்சி செய்து பார்க்கிறேன்.

வாஞ்சியிடம் போகிறுர்.

டாக்: (வந்து கொண்டே) மிஸ்டர் வாஞ்சி அய்யர் இருக்காரோல்லியோ?

கிளார்க்: இருக்கார் ஸார். உள்ளே போங்களேன.

டாக்: நமஸ்காரம் மிஸ்டர் வாஞ்சி அய்யர்!

வாஞ்: வாங்கோ டாக்டர்.

டாக்: நேற்றுத்தான் கேள்விப்பட்டேன். ஊரெல்லாம் அமர்க்களப்படறதே! நவீனனுக்கு இப்போ எப்படி இருக்கு?

வாஞ்: ஏதோ அவன் செய்த புண்ணியம் விழுந்த குத்து பலமானதா இல்லை. தப்பிச்சுண்டுட்டான்.

டாக்: (சூள் கொட்டிவிட்டு) நவீனன் நோக்கம் என்னவோ நல்லதுதான். ஆனு ஆபத்து நிறைஞ்சதாச்சேன்னு அப்பவே நினைச்சேன்.

வாஞ்: எனக்கும் தெரியாமலா டாக்டர் இருந்தது? எத்தனையோ தரம் சொல்லிப் பார்த்தேன் அவன கேட்டாத்தானே?

டாக்: ஆமா... கொஞ்ச நாளாவது நீங்க பக்கத்துலேயே இருந்து கவனிச்சுக்கிறது தானே?

வாஞ்: அதை ஏன் கேட்கிறேள். டாக்டர்! ஆஸ்பத்திரியோல்லியோ நெனைச்சப்ப போய்வரக் கூட முடியறதில்லே.

டாக்: ஓஹோ... மறந்துட்டேன். பிரைவேட் நர்ஸிங் ஹோமா இருந்தா சௌகரியமா யிருக்கும, இல்லையா? அது சரி.. டாக்டர்ஸ் என்ன அபிப்ராயப்படரு?

வாஞ்: எப்படி இருக்குன்னு கேட்டா நின்னு நிலைச்சு பதில் சொன்னுத்தானே டாக்டர்? இப்ப உங்களுக்கு ஓழிஞ்சிருக்குமா? ஒழிவு தானே?

டாக்: ஏன்?

வாஞ்: என்கூட வரலாமா?

டாக: எங்கே?

வாஞ்: ஆஸ்பத்திரிக்கு... நீங்க வந்து நவீனன நிலைமையைப் பார்த்து சொன்னு எனக்கு கொஞ்சம் நிம்மதியா இருக்கும்.. என்ன... தயங்கறேளே...!

டாக்: தயக்கமில்லே! ஆஸ்பத்திரியிலே இருக்கறப்போ இன்னொரு டாக்டர் இண்டர்பியர் ஆகிறது அவ்வளவு சரியில்லே, ஒவ்வொருத்தர் ஒவ்வொரு தினுசிலே டிரீட்மெண்டு.

கொடுப்பா. அங்கே நான் வந்தா ஏதாவது சொல்றுப்பிலே இருக்கும். அது அவாளுக்கு மனக்கஷ்டமா இருக்கும். தவிர அது எடிகேட் இல்லே பாருங்கோ...ஆனு ஒண்ணு மாத்திரம் சொல்லுவேன. ஆஸபத்திரியில் இருக்கிறதைவிட தெரிஞ்ச ஒரு டாக்டர் மேற்பார்வையிலே இருக்கிறத நல்லது. எல்லாத்துக்கும் ரொம்ப சௌகரியமா இருக்கும்.

வாஞ்: தெரிஞ்ச டாக்டர்னு வேறே யார் ஸார் இருக்கா? உங்க நர்ஸிங் ஹோமுக்கே கொண்டுவந்து விடவேண்டியதுதான்.

டாக்: சரிதான்...அந்தப் பொறுப்பை வேறெ என் தலேலே கட்டப் பார்க்கிறீளா! இப்போ இருக்கிற பேஷண்டுகளையே கவனிக்க திணறிண்டு இருக்கேன். தவிர நர்ஸிங் ஹோமிலே ஒரு பெட் கூடக் காலியாவே இல்லே.....இந்த காலத்திலே.

வாஞ்: அடாடா, அப்படியானு வேறே எந்த நர்ஸிங் ஹோமுக்குக் கூட்டிண்டு போகலாம், டாக்டர்!

டாக்: அடெடே...அதுக்குச் சொல்லவல்லே! இருந்துண்டு அடியோட மழுப்பிடுவேனு என்ன? எப்படியாவது ஏதாவது ஏற்பாடு பண்றேன். இன்னிக்கு ஈவினிங் கூட ஒரு பெட் காலியாகணும்.

வாஞ்: பின்னே என்ன யோசனே? உங்க நர்ஸிங்ஹோமுக்குக் கொண்டு வர இப்போ ஏற்பாடு செய்யறேன்.

டாக்: ரைட்டோ நான் வறேன். சரி.

டாக்டர் போகிருர்.

காட்சி 11

புஷ்பாவிடம் டாக்டர் தேறுதல் கூறுகிருர்.

டாக்: புஷ்பா! எங்களாலே முடிஞ்ச வரைக்கும் முயற்சி செய்து பார்த்தாச்சு. எதுவும் சாதகமாகலே. ரம்பாவை வெளியே கொண்டு வருவது இனிமே உன் கையிலே தான் இருக்கு.

புஷ்: என்னுலே என்ன செய்ய முடியப்போறது?

டாக்: இதுதான் கடைசி முயற்சி. ரம்பா நிரபராதியா வெளியே வரதும். ஜெயில்லே இருக்கிறதும் உன் சாமர்த்தியத்திலேதான் இருக்கு. ரம்பா விடுதலேயாகி வரணும்னு உன் சாகஸத்தாலே நவீனனே உன் வழிக்குக் கொண்டு வந்தாத்தான் முடியும். நவீனனே என் நர்ஸிங் ஹோமுக்கு கொண்டு வந்துட்டேன் இப்போ, உனக்கு சர்வசாதகமும் இருக்கு. அவனே உன் ஆட்டத்துக்கு ஆட வைத்துட்டா...

புஷ்: ரம்பா விடுதலே ஆயிடுவாளா?

டாக்: நான் சொல்றபடி செய்தாத்தான் கேஸ் இருக்காது; தண்டனேயு மிருக்காது. என் ஆஸ்பத்திரியிலே நீ ஒரு நர்ஸ்போல வரணும்.

புஷ்: எதுக்காக?

டாக்: அது போகப் போகத் தெரியும். என்ன சொல்றே புஷ்பா?...ஏன் தயங்கறே? உன் ரம்பாவிற்காக நீ செய்துதான் ஆகணும். அவ துடிதுடிக்காம இருக்கணும்னு நீ தயங்கக் கூடாது புஷ்பா! அவளேக் காப்பாற்றி வெளியே கொண்டு வரணும்னு நான் சொல்றபடி செய்துதான் ஆகணும்.

புஷ்: சரி...

மாயா என்ற பெயரில் ஒரு நர்ஸாக மாறுகிருள் புஷ்பா.

சந்துருவின் நர்ஸிங் ஹோமில் இப்போது அவள் ஒரு நர்ஸ்.

நவீ: ஓ! நீங்களா?

டாக்: என் நர்ஸிங்ஹோம் உங்களுக்குப் பிடிச்சிருக்கா நவீனன்?

மாயா: உங்க நர்ஸிங்ஹோம் அவருக்குப் பிடிச்சிருக்கோ இல்லேயோ, அதுதெரியாது. ஆனுல் மிஸ்டர் நவீனனுக்கு என்னே ரொம்ப ரொம்பப் பிடிச்சிருக்கு!

டாக்: மிஸ்டர் நவீனன் ஏன் அந்த ஆஸ்பத்திரியை விட்டு நம்ப நர்ஸிங்ஹோமுக்கு வந்திருக்கிருர் தெரியுமோ உனக்கு, மாயா?

மாயா: தெரியாதே!

டாக்: அங்கே அவருக்குப் பொழுது போகலே, பேச்சுத் துணைக்கு ஆளில்லே, கவனிக்க சிரத்தை கொண்டவர் யாருமில்லேன்னுதான் இங்கே வந்திருக்கிறார், இங்கேயும் பிடிக்கலேனு வேறே இடத்துக்குப் போனு நீதான் பொறுப்பு!

நவீ: டாக்டர்!

டாக்: என்ன நவீனன் நான் சொன்னது நிஜமில்லேயா?

மாயா: நிஜமோ நிஜமில்லேயோ! இந்த இடம் பிடிக்கலேனு வேறே இடத்துக்குப் போறதுன்னு அவருக்குப் பைத்தியம்தான் பிடிச்சிருக்கணும்.

நவீ: டாக்டர்தான் கிண்டல் பிடிச்சவர். நீயுமா அவரோட சேர்ந்துண்டுட்டே மாயா?

மாயா: அப்படிச் 'சொல்லிடுவேனு என்ன?

டாக்: நவீன்! இந்த மாயா லேசுப்பட்டவள்னு நினைக்காதே! இவளை நர்ஸாக அமர்த்திக்கொண்டதும் போதும், சிக்கு சொஸ்தமானுக்கூட நோயாளிகள் இந்த இடத்தை விட்டு நகரமாட்டேங்கிறுங்க ...இப்ப நீங்க வந்திருக்கீங்க. பார்க்கலாம்!

போகிருர். மாயா சோறு ஊட்டுகிருள் நவீனனுக்கு.

மாயா: ஏன் இப்படி பார்க்கிறேள்?

நவீ: ஒண்ணுமில்லே...

மாயா: சாப்பிடுங்கோ...

நவீ: மாயா! அந்தப் புஸ்தகத்தைக் கொடு.

அவள் கையைப் பிடிக்கிருன்.

மாயா: இந்தாங்கோ...மிஸ்டர் நவீன், உங்களுக்கென்ன பைத்தியமா?

நவீ. மாயா...!

மாயா: என்னை விட்டுடுங்கோ!

நவீ: உனக்குக்கூட என்னைப் பிடிக்கலேயா?

மாயா: பிடிக்காம இல்லே. ஆனு என்பேரும் உங்க பேப்பர்லே வந்துடுமோன்னு பயப்படறேன்.

நவீ: உன்பேரா? என் பேப்பர் லேயா?

மாயா: வராதா? யாராவது உங்களைப் பார்க்க வருவா. இப்படிப் பார்த்துடுவா. நாளை மின்மினிக்கு நியூஸ் போயிடும். உடனே 'நர்ஸிங் ஹோமிலே மாயா என்ற படுமோசக்காரி ஒருத்தி இருக்கிருள் அவள் தன் சாகஸத்தால் நவீனனையே மயக்கி விட்டாள்' அப்படின்னு அச்சாயிடும்.

நவீ: மாயா?

மாயா: ஏன்...?போடச் சொல்ல மாட்டேளா?

நவீ: நிஜமா இருந்தா போடுவேன்.

மாயா: பின்னே பொய்யா?

நவீ: பொய்யேதான்! நீ என்னை மயக்கினயா இல்லாட்டா நான் உன்கிட்ட மயங்கினேனு?

மாயா: அது உங்களுக்குத் தெரியும். ஆனு உங்க பேனு எழுதறப்போ நான்தான் மயக்கினேன்னு எழுதும்.

நவீ: என்னையும் என் பத்திரிகையையும்பத்தி இவ்வளவு மோசமாகவா நினைச்சிண்டு இருக்கே?

மாயா: உள்ளதைச் சொன்னல் கோபப்படமாட்டேள்னு நினைக்கிறேன். பெண்களைப்பற்றி பக்கம் பக்கமாக எழுதறீளே, அதெல்லாம் சரிதான்னு சொல்ல முடியுமா?

நவீ: எதனுலே இந்த சந்தேகம் வந்தது உனக்கு?

மாயா: உங்க பேப்பரைத் தொடர்ந்து வாசிச்சுண்டுதான் வரேன். உலகத்தில் நடக்கும் அயோக்யத்தனத்துக்கும் அக்ரம ஈடுபாடுகளுக்கும் பெண்களையே குற்றம் சாட்டி ஏசிக்காட்டறேள். உண்மை இதிலே எவ்வளவுதூரம்இருக்குன்னு நீங்க கொஞ்சமாவது யோசிச்சதுண்டா?

நவீ: யோசனை செய்யாமலா எழுதறேன்?

மாயா: யோசிக்காம எழுதறதா கததான் என் புத்திக்குப் படறது. நான்தான கேட்கிறேன், உங்களுக்குப் பணிவிடை செய்ய நான் வந்தேன். எந்த விதத்திலோ நீங்க என்னைக்கண்டு மோகிச்சுட்டேள். இப்போ என் கடைக்கண் பார்வைக்கு மருகி நிற்கிறேள். இதுக்கெல்லாம் காரணம் நான்தான்னு பழி சொல்ல உங்களுக்குத் துணிச்சல் வருமா? உங்களை விட்டுடுங்கோ. உங்களைப்போல ஒருவர் என்கிட்ட அப்படி ஆயிடறுர் இந்த சமாச்சாரம் உங்களுக்கும் தெரியறது. நான்தான் அவனைக் கெடுத்துட்டேன்னு தானே எழுதுவேள்?

நவீ: நீ எதுக்கு இதெல்லாம் சொல்றே?

மாயா: இப்ப நீங்க நிம்மதியா இருக்கேள். ஆற அமர யோசனை செய்யலாம். நீங்க சிர்திருத்தறவழி எந்த முடிவிலே கொண்டுபோய் விடுங்கிறதை யோசிச்சுப் பார்த்தேளா?

நவீ: என் போக்கு • தப்பானதுன்னு நினைக்கிறுயா?

மாயா: தப்பேதான்! ஒரு பெண் கெடறதும் நன்னு இருக்கிறதும் அவளைச் சுத்தியிருக்கிறவாளைப் பொறுத்து துங்கறது-உங்களுக்குத் தோணித்தா? அது இருக்கட்டும். என் மனசு இப்பொ கெட்டதற்குக்கூட நான் காரணமில்லே. நீங்கதான்! அது உங்களுக்குத் தெரியறதா?

நவீ: மாயா! அவளுக்கும் உனக்கும் வித்தியாசமில்லே.

மாயா: தொழில்லேதான். ஆனு சந்தர்ப்பம் எல்லோருக்கும் பொது. நானும் ஒரு பெண்ணு யிருக்கிறதாலே சொல்றேன். ரம்பாகூட என்னைப்போல ஒரு பெண்தான். அவளை நாசமாக்கின ஆண்கள்ளே நீங்ககூட ஒருவர்.

நவீ: மாயா...

மாயா: பெண்கள் காலின் கீழே கிடக்கிற பூச்சி. ஆத்திரத்திலே நசுக்கிடலாம். ஆனு அந்த ஆத்மா துடிதுடிச்சா...

நவீன் கொட்டாவி விடுகிருன்.

நவீ: நான் தூங்கறேன். ஆனு நீ பாடணும்.

நவீன் கனவு காணுகிருன்.

நவீ: ஏன் அங்கேயே உட்கார்ந்திட்டே மாயா. பேசமாட்டே – ஏன் மாயா அழுறே?–என்ன வந்துட்டது?

மாயா: என்னவா? அவா எப்படி எப்படி பேசிட்டிருக்கா – கேக்கலியா?

கூட்டம்: நர்ஸாக வந்து நாலு நாட்கள் ஆகலே. பலே கைகாரி ஆயிட்டாளே ..உம்.. காலம் கலிகாலமில்லே.

மாயா: நான் நர்ஸாக இருக்க வேண்டியதுதான். வருகிற நோயாளிகளுக்கு பணிவிடை செய்து அவா நோய் தீர்ப்பதுதான், நான் ஜென்மமெடுத்த பலன். என் சந்தோஷத்திற்கு வாழ்க்கை கிடையாது–நீங்க வந்தேள். நீங்களாகவே ஆசைப்பட்டீங்க. ஆனல் ஊரில் பேசுற பேச்சைப் பாருங்கள். நான் உங்களை கெடுத்திட்டேனு?

நவீ: இதுக்காகவா.. அழுறே... ஊரிலிருக்கிற வங்க எல்லாம் அப்படித்தான் விபரம் தெரியாம பேசுவா.

மாயா: விபரம் தெரிஞ்ச நீங்க மட்டுந்தான் எப்படி?

நவீ: நானுமா?

மாயா: நீங்கதான் சொல்லுங்க. ரம்பா—புஷ்பாவை சொல்லலையா. அவர்களைப்பற்றி எழுதினவர் என்னையுந்தான் எழுதவிங்க. யாரை நம்புவது? எனக்கு ஒரு அவதூறும் வேண்டாம். மன்னித்து விடுங்கோ...

மாயா போய்விடுகிருள். கனவு கலைகிறது.

நவீ: மாயா.. மாயா...

டாக்டர் நவீனனை மயக்கியதற்காக புஷ்பாவைப் பாராட்டுகிருர்.

டாக் : நவீனன் உன் மோஹனத்திலே மயங்குவானுன்னு சந்தேகமாகத்தான் இருந்தேன். உன்னிடத்திலேயும் உன் பேச்சிலேயும் அவனுக்கு அபார பைத்தியம் இருக்கு. இனிமே உன் காரியத்தை நீ சாதிக்கிறது கஷ்டமேயில்லே.

புஷ் : என்னை என்ன செய்யச் சொல்றேள்?

டாக் : பெண்களைப் பற்றின துவேஷம் அவன் மனசிலே ஊறிப் போயிருக்கு. அவன் அபிப்பிராயத்தை உன் சாதுர்யத்தாலே மாத்தணும். அது மூலமா ரம்பா குற்றவாளியா இருக்கமுடியாதுங்கிறதையும் அவன் மனசில் பதிய வைக்கணும்.

நவீனன் இப்போது மாயாபித்தன்!

நவீ : மாயா! மாயா!

மாயா : என்ன? எதுக்குக் கூப்பிட்டேள்?

நவீ : உம்...கொஞ்சம் காப்பி தரியா? மாயா! நான் எழுதறதெல்லாம் சரியில்லேனு சொல்றியா?

மாயா : மறுபடியும் அந்தப் பேச்சை ஆரம்பிச்சுட்டேளா?

நவீ : சொல்லேன்.

மாயா : சரியில்லே தான். பெண் ஜன்மங்கள் பேரிலே எதுவுமே குத்தமில்லே. பொறுமைக்கும் நிதானத்துக்கும் இடம் கொடுத்து, ஈகைக்கும் பயத்துக்கும் கட்டுப்பட்ட ஜன்மம் மனுஷ ஜாதிலேயே பெண்கள்தான் நவீன். உருப்படியானவேலே தாய்மை குணம் கொண்ட அவாகிட்டேதான் காணமுடியும்.

நவீ : பெண்களே விஷ கன்னிகை இல்லையா?

மாயா : இல்லவே இல்லே.

நவீ : என்னைக் குத்தின ரம்பா தேவி?

மாயா : ரம்பாதேவிதான் உங்களைக் குத்தினுன்னு நான் நம்பவே மாட்டேன். அவளும் பெண். நானும் பெண். என்னைப்போல ஹிருதயம் தானே அவளுக்கும் இருக்கணும்? எனக்கும் கூடத்தான் நீங்கள் விரோதி. அதனுலே நான் உங்களைக் கொன்னுடடேனு?

நவீ : நான் உன் விரோதியா?

மாயா : உங்களோட தர்க்கம் செய்யலே. தர்க்கம் செய்யறவா விரோதியாத்தானே இருக்கணும்? நீங்க என்ன நினைச்சாலுமசரி, உங்களைக் குத்தனவளோ அல்லது குத்தச் சொன்னவளோ ரம்பா தேவயா இருக்கவே முடியாது!

நவீ : உன் பேச்சே விசித்திரமா இருக்கு.

மாயா : அப்படித்தான் இருக்கும். நவீன்! எப்போதுமே குலைக்கிற நாய் கடிக்காது. பெணகளுக்கு ஆத்திரம் வந்தாக் குமுறுவா. அவ்வளவுதான்! கோபத்திலே புருஷன் மனைவியை நோக அடிச்சிடறுன். அவளுக்கு துவேஷமும் ஆத்திரமும் வந்தாககூட அவள் புருஷனைத் திருப்பி அடிச்சுட மாட்டா. பதிலுக்கு கத்துவா. அது தான் பெண்கள் சுபாவம். குழந்தை மனசுனனு கூடச் சொலலலாம். பொய் அதிக நேரம் நிற்காது. ரம்பா தேவியிடமிருந்து நிஜத்தை கிரஹிக்க போலீஸ் எவ்வளவோ தொந்திரவு கொடுத்திருக்குமே! பாவம் அதை எல்லாம சகிச்சிண்டு ஒரு பெண நிஜத்தை மறைச்சுடுவான்னு நினைக்கிறீளா?

நவீ : அப்படியானு என்னைக் குத்தினது ரம்பா இல்லே என்கிறயா?

மாயா : நிச்சயம் இருக்க முடியாது. உங்களைக் கொல்ல நினைக்கிறவ முன்னடியே பார்த்துப் பேசியிருப்பாளா? வேறு யாராவது செஞ்சிருந்து காக்காய் உட்காரவும் பனம்பழம் விழுந்த கதையா நடந்திருந்தா?

நவீ : நான் தீர்மானிச்சது ..?

மாயா : ஆத்திரத்திலே தீர்மானிச்சுட்டேள். உங்க அவசர புத்தியினுலே ஒரு பெண் பாவத்தைக் கொட்டிக்கறேள்.

காட்சி 12

சதி ஏற்பாடுகள் டாக்டர் ரூமிலே நடக்கின்றன.

டாக்: (டெலிபோனில்) டாக்டர் பேசறேன். யாரு? ரம்பாவா? ரம்பா! நீ எங்கிருந்து பேசறே? இதோ கிளம்பிட்டேன். நேரே வீட்டுக்கு தான் வரேன்...

எதேச்சையாக வருகிருள் புஷ்பா.

புஷ்: என்ன ரம்பாவா பேசினு?

டாக்: ஆமாம்... விடுதலை ஆயிட்டா!

புஷ்: விடுதலை ஆயிட்டாளா?

அவசரமாகத் திரும்புகிருள்.

டாக்: புஷ்பா எங்கே போறே?

புஷ்: நான் வந்த காரியம் முடிஞ்சு போச்சு. நான் போக வேண்டியது தானே?

டாக்: இரு போகலாம். ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறுக்கலையா? இப்போ நீ போனு விபரீதமாயிடும். நவீனன் டிஸ்சார்ஜ் ஆகிப் போகட்டும். (ஜமீன் தார் வருகிருர்).

ஜமீ: டாக்டர்! ஒரு நிமிஷம்...

டாக்: யாரு? ஜமீந்தாரா? உள்ளே வாங்களேன்.

ஜமீன்தார் உள்ளே வருகிருர்.

ஜமீ: அவசரமா ஒரு விஷயம்...

கம்பௌண்டர் இருப்பதை ஜாடை காட்டுகிருர்.

டாக்: கண்ணு! நீ போயி என் பேக் ரெடிபண்ணு... விசிட் போகணும். (கம்பௌண்டர் போகிருன்.)

டாக்: என்ன அவசரமான விஷயம்?

ஜமீ: நாம் பின்னின வலையாலே நாம்பளே...

டாக்: (ஜாடை காட்டி) உஸ்... உஸ்... புஷ்பா இருந்தா! நல்லவேளை போயிட்டா போலிருக்கு.

ஜமீ: நாம்ப பின்னின வலையிலே நாம்பளே சிக்கிண்டுட்டோம். போலீஸ் ரொம்ப ஜரூரா இருக்கு. நான் எந்த நிமிஷத்திலேயும் அரெஸ்ட் ஆயிடலாம். நவீனன் தான் இதுக்கு தூண்போல இருக்காணும். நீங்க என்ன வழி செய்யப் போறீங்க டாக்டர்?... பேசாம இருந்தா?

டாக்: எனக்கு எல்லாம் தெரியும் ஜமீந்தார். நல்லதோ கெட்டதோ இது வரைக்கும் என்னை நம்பிட்டேள். இன்னும் ஒரு நாள் பயப்படாமே தைரியமா இருங்கோ.

ஜமீ: என்னதான் செய்யறதாக நினைச்சிட்டிருக்கேள்?

டாக்: நவீனன் ஒத்தாசைத்தான் போலீசுக்கு அனுசரணை. அந்த அனுசரணை இல்லாமச் செய்துடப் போறேன். ஒரே இன்ஜக்ஷன்— ஜமீந்தார்! தயவுசெய்து நாம்ப கொஞ்ச நாளைக்குச் சந்திக்காம இருக்கிறதுதான் நல்லது. நீங்க என்னை நம்பிண்டு நிம்மதியாய் போங்கோ!

கம்பௌண்டர் வருகிருன்.

கம்பௌண்டர்: டாக்டர்ஸார்! அஞ்சாம் நம்பர் ரூமிலே இருக்கிற அம்மா அர்ஜண்டா கூப்பிடருங்க...

போகிருன். அவன் போனதும் மறைந்திருந்த புஷ்பா வந்து இன்ஜக்ஷனை மாற்றிவைக்கிருள். சிறிது நேரத்தில் டாக்டர் அங்கு வருகிருர்.

டாக்: மிஸ்டர் நவீன்! இப்ப எப்படியிருக்கு?

நவீ: ஆரோக்யமா! இருக்காப்பிலே இருக்கு.

டாக்: (புரியாதவராய்) இப்போ கொஞ்சம் மயக்கம் வராப்பிலே இருக்கணுமே.

நவீ: அப்படி ஒன்னுமில்லை டாக்டர்.

டாக்: இல்லையா? சரி...அந்த மாதிரி எதுவும் இருந்தாலும் பயப்பட வேண்டாம்.

அங்கிருந்து போகிருர்.

டாக்டருக்குத் தூக்கிவாரிப் போடுகிறது. நவீனனுக்கு மயக்கம் கூட வரவில்லை. சந்தேகப்பட்ட டாக்டர் உள்ளே போய் சோதனை யிடுகிருர். மருந்து மாற்றப்பட்டிருப்பது புலனுகிறது. புஷ்பா தான் அப்படிச் செய்து விட்டாள்

என்பதை அறிந்து கொண்டு. ஜமீந்தாருக்கு டெலிபோன் செய்கிருர்.

ஜமீந்தார் உட்கார்ந்திருக்கிருர். டெலிபோன் மணி அடிக்கிறது.

ஜமீ : (டெலிபோனில்) யாரு? டாக்டரா? என்ன? இன்ஜக்ஷன் மருந்து மாற்றப்பட்டிருக்கிறதா? என்னய்யா உளறுகிறீர்? யார் அப்படிச் செய்தது? புஷ்பாவா? ஒருக்காலும் அவள் செய்திருக்கமாட்டாள் என் உப்பைத் தின்றவள் அவள். ரம்பாவிற்காக உயிரையும் கொடுக்கக் கூடியவள் என்னது. அவள்தான் செய்தாளா? நிச்சயமாக உமக்குத் தெரியுமா? நிஜமாகவா?

டெலிபோனை வைத்துவிட்டு கோபத்தோடு புஷ்பாவிடம் வருகிருர்.

ஜமீ : புஷ்பா! என்னுடைய எண்ணத்திலே மண்ணை அள்ளிப் போட எத்தனை நாளாய் காத்திண்டு இருந்தே?

முரு : என்னங்க நடந்துபோச்சு?

ஜமீ : அதை அந்தக் கள்ளியிடமே கேள். குப்பையிலே கிடந்த வளைக் கோபுரத்திலே உசத்தி வெச்சேனே. அதற்கு என் கைமேலே பலன் கிடைத்து விட்டது.

முருகன் : என்னதான் செய்தாங்க? சொல்லுங்களேன்.

ஜமீ : பாம்புக்குப் பால் வார்த்தாள்! புஷ்பா! என்னைப்பார் இப்படி! இன்ஜக்ஷன் மருந்தை மாத்தினயா? தலை குனிந்து பசப்பாதே. சொல்லு பதில்

முரு : சொல்லுங்களேம்மா...

ஜமீ : அவ சொல்லமாட்டாடா... புரியும்படியா நான் சொல்றேன். ஜமீந்தாரிணியை நான் கொல்லாமல் இருந்திருந்தா இவர்களெல்லாம் இந்த சுக போகத்தில் இருந்திருக்க முடியுமா? அதற்கெல்லாம் இவள் காட்டுகிற விஸ்வாசம் நமது ஜன்ம விரோதியைக் காப்பாற்றி விட்டாள். இந்தச் சண்டாளியைக் கழுத்தை முறித்துக் கொன்ருல்தான் என்ன?... நானும் டாக்டரும் யாருக்காகப் பாடுபடுகிறோம். (புஷ்பாவைப் பார்த்து) உங்கள் இருவருக்காக. உங்கள் சுகத்திற்காக, உங்களை ராஜபோகத்தில் வைப்பதற்காக...பழசைப் பற்றி கொஞ்சமாவது நினைத்தாளா இவள்? ரம்பாவைப் பற்றி அவன் கேவலமாக எழுதியதையெல்லாம் நினைத்துப் பார்த்தாளா இவள்? ஜவுளிக்கடை ருப்சந்த் அவள் காலடியில் ¿கத்துக்கு ஒரு புடவையாகக் குவித்தான் என்று ஏசினன் அவன். என் மனைவியின் கொலையில் அவளுக்கும் பங்கு உண்டு என்று எழுதினன். ஏறெடுத்தும் பார்க்காத ராவ்பகதூரை அவளது 108-ஆவது காதலனக்கினன். அவளை ஜெயிலுக்கு அனுப்பி வைத்து பொன்னன அவளது மேனியைப் புண்ணக்கினன். அப்படிப்பட்ட சண்டாளன் மீது இவளுக்குக் காதல். ஆசை ... அந்த ஆசைக்கு நாம் எல்லாம் பலி.

புஷ்பா அழுது கொண்டு நிற்கிருள். அவளை நெருங்குகிருர் ஜமீந்தார்.

ஜமீ : அனுதையாய்த் திரிந்த உன்னை ஆதரித்து நல்ல வழிகாட்டினேனே. அதற்கு நீ காட்டற பதிலுபகாரமா இது? ரோஷக்காரியா இருந்தா நீ பழிக்குப் பழி வாங்கத் தயங்கியிருக்கமாட்டே. உனக்காக நான் பட்ட பாடெல்லாம் மறந்துட்டாயா?

புஷ் : நான் மறக்கலே. நீங்களும் ரம்பாவும் சந்தோஷமா இருந்தால் போதும். என்ன செய்யணும் சொல்லுங்கோ...செய்யறேன்.

ஜமீ : புஷ்பா! ஒன்றுமறியாத கள்ளங் கபடமற்ற குழந்தை நீ. அனுபவப்பட்ட நான் அறிந்ததைச் சொல்லுகிறேன். முள்ளை முள்ளாலே தான் குத்தி எடுக்கணும். நீ திரும்ப டாக்டர் வீட்டுக்குப் போ. அவர் சொல்கிறபடி செய். சுகம் கெடாது. துன்பமில்லை. ஆனந்தமா வாழலாம். என்ன புஷ்பா? என்ன சொல்றே?

புஷ் : சரி...

போகிருள். வாசலில் ரம்பா எதிர்ப்படுகிருள்.

ரம் : புஷ்பா! எங்கே போறே?

புஷ் : ரம்பா! நீங்க ரெண்டு பேரும் சந்தோஷமா இருந்தாப் போறும். நான் போறேன்.

அவனை உதறிக் கொண்டு போகிருள்.

மாயா : நவீன்!

நவீ : யாரது? மாயாவா?

மாயா : ஆமாம்... ஏன் அப்படி திகைக்கிறேள்?

நவீ : நீ திரும்ப வருவயான்னு ஏங்கிக்கிண்டு இருந்தேன்.

மாயா : வராம இருந்துடுவேன்னு நினைச்சேளா? அவ்வளவு கல் நெஞ்சம் கொண்டவள்னு உங்க புத்திக்குப் பட்டது?

நவீ : மாயா! நீ நிஜமாவே மாயா தான்!

மாயா : நவீன்! ஏன் உங்க கண்ணெல்லாம் சிவந்திருக்கு? இன்னும் உபத்திரவம் இருக்கா?

நவீ : ஏன் சிவந்திருக்குன்னு கேட்கறியே மாயா! நீயே சொல்லு. ஏன் சிவந்திருக்கணும். மாயா! நீ போனே. உன்னோட என் மன நிம்மதியையும் கூடக் கூட்டிண்டு போயிட்டே. நீ இப்ப வந்தே. என் மனசு எவ்வளவு பூரிக்கிறது தெரியுமா? நீ என்கூடவே இருந்துட மாட்டியா?

மாயா : எனக்கு உலகமே வெறுத்துப்போச்சு...நவீன்.

நவீ : உன் வயசுக்கும் யௌவனத்துக்கும் உன் மனஸிலே கொள்ளை ஆசை இருக்கணுமே. அதை என்ன செய்தே மாயா?

மாயா : கொண்ணுட்டா. கனல் பட்டு திஞ்சுப் போச்சு!

நவீ : பட்டமரம் தழைக்கிறதில்லையா?

மாயா : எல்லோரும் அதைத் தழைக்கவைக்க முடியுமா? பக்குவம் தெரிஞ்ச தோட்டக்காரன் எங்கே இருக்கான்?

நவீ : நானில்லையா?

மாயா : இல்லேங்கலே! அதுவும் எத்தனை நாளைக்கு நீடிக்கும்?

நவீ : சந்தேகமா?

மாயா : உங்ககிட்டே சந்தேகமில்லை. உங்க உயிர்லேதான் சந்தேகம். அது எத்தனை நாளைக்கு உங்க உடல்லே இருக்கும்னு யாருக்குத் தெரியும்? நீங்க நடத்தற தொழில் அப்படி இருக்கு. மாங்கல்யம் கட்டின சுருக்குப்போல அறுக்கவும் வேண்டி வந்தா? என் ஆசை அடியோட நாசமாயிடாதா?

நவீ : உனக்காகப் பத்திரிகை தொழிலை விட்டுவிடச் சொல்றியா மாயா?

மாயா : நிஜ அன்புக்கு ஏதாவது தியாகம் கிடையாதா? என வாழ்வுக்குத்தான் ஒரு நம்பிக்கை வேண்டாமா? உங்க தொழிலை விட்டுடச் சொல்லலே. உங்க போக்கை மாத்திக்கலாம் உங்க லக்ஷியத்தைக் கைவிடச் சொல்லலே. அதை நிறைவேற்ற வேறே வழி இருக்கு நவீன். நீங்க சீர்திருத்தரேனு ஊராரைத் திட்டறேள் அதனலே காரிய சித்தி கிடைத்திடுமா? நான் சொல்றதைக் கேளுங்கோ. நியாயம் சொல்லுங்கோ. கல்யாணமான ஓர் பெண் இருக்கா. புருஷனல்லாத அன்னியன் ஒருவன். இரண்டு பேருக்கும் கண்டும் காணுமையும் தொடர்பு. இது உங்களுக்கு தெரியறது. அந்தப் பெண் செய்றது பதித் துரோகம்னு நினைக்கிறேள். அவளைத் திருத்தணும்னு ஆசை இருந்தா நீங்க என்ன செய்யணும்? தனிச்சுக் கூப்பிட்டு புத்தி சொல்லலாம். கண்டிக்கலாம். அவள் செய்றது தப்புன்னு அவ புத்திக்குப்பட வைக்கணும். அவளும் மனசு மாறித் திருந்துவா. திருந்தினலும் பிறகாவது மானத்தோடு வாழலாம். அதை விட்டுட்டு அவனுக்கும் அவளுக்கும் உள்ள தொடர்பை ஊரறியப் பறைசாற்றிஞ அதன் பலன் விபரீதம் தானே? பலருக்குத் தெரிஞ்சப்புறம் அவள் திருந்தினதான பத்தினியாயிட முடியுமா? இல்லை. அவளுக்கும் ஊரார் ஏசி ஏசி குளிர்விடறது துணிஞ்சிடரா. பிறகு அவள் திருந்தவே வழியில்லே. இதுதான் நீங்கள் பச்சையா எழுத

ரேள் பாருங்கோ. அது செய்யற சீர் திருத்தம். ஏன் நான் சொல்றது தப்பா?

நவீ: இவ்வளவு புத்திசாலித் தனம் உனக்கு எங்கிருந்து வந்தது மாயா?

மாயா: உங்க எழுத்தை வாசிச்சு இல்லே. உங்க கிட்டே ஒரு குணம் கண்டேன். அது சொல்லித் தந்தது.

நவீ: மாயா! நீ பேசு...... பேசிண்டே இரு. உன் கூடப் பேசற திலே ஆனந்தமா இருக்கு. ஆனு இந்த ஆனந்தத்தை சாஸ்வத மாக்கிட மாட்டியா?

மாயா: உங்கப் போக்கை மாத் திண்டா...

நவீ: சரி! இனிமே அந்தமாதிரி யெல்லாம் எழுதமாட்டேன். இப்போ நீ என் மாயாதானே?

புஷ்பா டாக்டரிடம் போகிருள்.

டாக்: புஷ்பா!

புஷ்: இதோ வந்துட்டேன்.

டாக்: மருந்து டிஸ்பென்சரி மேஜை மேலே இருக்கு. ஏன் தயங் கறே?

புஷ்: ஒண்ணுமில்லே ..

போகிருள் மருந்தை மாற்றி எடுத்துக் கொண்டு திரும்புகிருள்.

டாக்: புஷ்பா! நம்ப தலைவிதியை நிர்ணயிக்கிறது இனிமே உன் கையில்தான் இருக்கு.

மருந்தோடு உள்ளே போகிருள்.

இன்ஸ்பெக்டர்: (டெலிபோனில்) ஹலோ—யாரு?

வேருெருவர்: இன்ஸ்பெக்டர் சிங்காரம் பேசறது.

இன்: யாரது? சிங்காரமா?

சிங்: நீங்க உடனே சந்துரு நர்ஸிங் ஹோம் போங்க...

மற்: சந்துரு நர்ஸிங் ஹோமுக்கா? இதோ வந்துட்டேன்.

நவீ: ஏன் அழறே மாயா?

மாயா: நவீன்! என்னை மன்னிப் பேளா?

நவீ: நீ என்ன தப்பு செய்துட்டே? உனக்கு என்ன பைத்தியமா?

மாயா: பைத்தியமா அடிச்சுட்டா என்னை. ஒரு மாயை போலவே ஆக் கிட்டா. நவீன்! என்னை மன்னிக்க மாட்டேளா? நான் சண்டாளின்னு தெரிஞ்சுகூட க்ஷமிக்க மாட்டேளா?

நவீ: மாயா!

மாயா: என்னை அப்படிக் கூப் பிடாதேயுங்கே. நான் மாயா இல்லே. என் பேரும் அது இல்லே. நான் தான் உங்க தாபத்துக்கும் மனஸ் தாபத்திற்கும் பாத்திரமாயிருந்த ரம்பாவோட தங்கை.

நவீ: என்ன?

மாயா: நான் ஜன்மமெடுத்து ஆயிரக்கணக்கான பேர்களின் ஆசை அபிலாஷையைத் தீர்த்த எனக்கு என் சொந்த வாழ்க்கை யிலே சுகமில்லே. நான் பிறந்து யாருக் குமே நல்லதுகூடச் செய்ததில்லே.

நவீ: மாயா! என்ன அசட்டுத் தனம் இது? ஏன் கோழையா யிடறே? ஆயிரம் தப்பு இருந்தாலும் நான் மன்னிச்சுடறேன். நீ யாரா யிருந்தாலும் நான் ஏத்துக்கறேன.

டாக்டர் ஒட்டுக் கேட்கிருர்.

இதோ பார்! இனிமெ இந்த நர்ஸ உத்தியோகம் உனக்கு வேண்டாம். என்னேடயே இருந்துடேன்.

ஒட்டுக் கேட்டுவிட்டு டாக்டர் நகருகிருர்.

மாயா நவீனனேடு அன்பாகப் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டு மருந்தை மறுபடியும் மாற்றிக் கொண்டு போயிருப்பாளோ என்று நினைத்து, சோதனை போடுகிருர். மருந்தை மாற்றித்தான் எடுத்துக் கொண்டு போயிருக்கிருள். டானிக் என்பது அவன் எண்ணம். அது விஷமல்லவா?

டாக்டருக்கு மண்டை குழம்பு கிறது. மனக்கலக்கம். "நவீனன்

சாகவேண்டுமா? அப்படியானல் புஷ்பாவின் ஆசை? நவீனன் இறந்தால் தன் கதி? அகப்பட்டுக்கொண்டால்?'' தடுமாறுகிருர். அவரது மனதே எண்ணங்கள் தடுமாறுகின்றன. பிரமை தட்டுகிறது.

வாஞ்: டாக்டர்! யோசனை செய்கிருயா? நன்ருக யோசனை செய். ஆர அமர யோசனை செய். நீ என்ன யோசிக்கிருய் என்பது எனக்குத் தெரியும். புஷ்பா உன்னுடையவள் என்று நினைக்காதே. நவீனன்மீது அவள் கொண்டுள்ள பிரேமை அளவு கடந்தது. அவனை நீ ஒழிக்கப் பார்த்தால் அவள் சும்மா இருப்பாளா? நவீனனைக் காப்பாற்ற அவள் பாடுபடுவாள். போலீஸில் சொல்லுவாள். அப்பொழுது உன் கதி என்ன ஆகும் தெரியுமா? சேற்றை அள்ளி முகத்தில் பூசிக்கொள்ளாதே. சிந்தையைப் பறிகொடுத்துச் சிறைக்குப் போகாதே. மாளாத் துயரத்திலிருந்து மீளமுடியாமல் சாகாதே!

ஜமீ: டாக்டர்! உன் பழய ஏழ்மை ஸ்திதியை நினைத்துப் பார். இன்றிருக்கும் நிலையையும் எண்ணிப் பார். உனக்கு அந்தஸ்து தந்தவன் நான், எனக்கு துரோகம் செய்யாதே.

புஷ்: நம்பினவர்களை நாசம் செய்யும் நயவஞ்சகா. உன்னை நம்பின நவீனனைக் கொல்ல என்னைக் கொண்டே நயவஞ்சகமா செய்கிருய்? பாமரனும் செய்யப்பதறுகிற பஞ்சமா பாதகங்கள் எத்தனையோ செய்தாய். அதெல்லாம் எனக்குத் தெரியும். பாவம் பார்த்து. நீ என்னை ஆதரித்ததை நினைத்து உன்னைக் காட்டிக் கொடுக்காமல் இருந்தேன். இப்பொழுது நான் உன்னைக் காட்டிக் கொடுத்தால் உன் கதி என்ன ஆகும்? உன் அந்தஸ்து அஸ்தமிக்கும். அமைதிபோய் அவதிப்படுவாய். கொலைக் குற்றம் — நியாயஸ்தலம். தண்டனை—இப்பொழுது உன் கழுத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் டைக்கு பதில் தூக்குக் கயிறு.

ஜமீ: யார் பேச்சையும் கேட்காதே. அவன் அவள் கையாலே மடியட்டும். அந்தக்குற்றம் அவள்மீது தான் விழும். பயப்படாதே டாக்டர்.

ஜ. தா: என்னைத் தெரிகிறதா டாக்டர். நான்தான் ஜமீந்தாரிணி. என்னைப்பார்! நான் கொலைப்பட்ட கொடுமையை நினைத்துப்பார். அன்பைப் பெரிதாக நினைக்காமல் அற்பக்காசுக்காக என் புருஷன் என்னைச் சாகடித்தான் வறுமையில் வதங்கி, வாழ வழிதேடி வந்த சுப்பையா பிள்ளையை அடிமேல் அடி அடித்து அடியோடு ஒழித்துத் தீர்த்தான். அப்பேர்ப்பட்ட கொலைகாரனுக்கு நீ உடந்தையாயிருந்து உன் உயிருக்கு உலைவைத்துக் கொள்ளாதே. தூக்கு மரத்திலே தொங்காதே!

ஜமீ: கல்நெஞ்சக்காரனுனலும் கருணை இல்லாமல் போகாது! காட்டிக் கொடுப்பேன் என்று கலங்காதே. வாழ வைத்தவன் வீழ வைக்க மாட்டான்.

நவீ: உன் அறிவு மழுங்கி விட்டதா? உன் நெஞ்சைக் கல்லாக்கிக் கொண்டு விட்டாயா? காசாசையால் கருத்தழிந்த பாவி. கைக் கூலிக்காக கழுத்தை யறுக்காதே. அற்பக்காசுக்காக அழிவைத் தேடிக்கொள்ளாதே. நான் ஒழிந்தால் நீ செழிப்பாய் என்று நினைக்கிருய்? என்னை நீ கொன்று விடலாம். ஆனல் சட்டத்தை, நீதியை நேர்மையை ஒருக்காலும் உன்னல் கொல்ல முடியாது! என்னைக் கொல்லப் பார்க்கிருயே. எதற்காக? யாரோ செய்த கொலையை மறைப்பதற்காக கொலைகாரனைக் காப்பாற்றுவதற்காக. சட்டம் தரும் சன்மானத்திலிருந்து சண்டாளனைக் காப்பாற்றுவதற்காக. இதற்கெல்லாம் உனக்கு என்ன முடிவு கிடைக்கும் தெரியுமா?

ஜமீ: நவீனன் சாகத்தான் வேண்டும். அவன் உயிரோடு இருந்தால் நான் மட்டுமல்ல, நீ கூட தூக்கு மரத்தில் தொங்க வேண்டியதுதான். யார் பேச்சையும் கேட்காதே! பழி உன்மேல் வராது. தைரியமா இரு.

சுப்: அட பாவிப்பயலே! ஏண்டா இப்படி யெல்லாம் செய்யறே! அந்த ஜமீந்தார்தான் காசாசை பிடிச்சு பணத் தேவையினலே கட்டின பெண்டாட்டியைச் சாகடித்தான். உனக்கென்னடா வந்தது? நவீனன் உனக்கு என்ன வஞ்சகமடா செய்தான்? ஜமீந்தாரைக் காப்பாற்றினு காசு கிடைக்குமோன்னு பார்க்கிறே. முடிவில் என்ன கிடைக்கும் தெரி

யுமா? ஜமீந்தாரிணியைக் கொலை செய்ததை மறைச்சு வெச்சிக் காப் பாற்றினதுக்கு எனக்கு என்ன கிடைத்ததோ அதுதாண்டா உனக் கும் கிடைக்கப் போகுது. அனு பவிக்க வேண்டிய வயசிலே அல் பாயிசில் போகாதே. வாழ்க்கையை வளப்படுத்திக்கோ!

ஜ. தா : நாம் வாழத்தான் பிறந் தோம் டாக்டர், சாவதற்கில்லை. நம் சுகந்தான் நமக்குப் பெரிது. பிறரைப் பற்றி நமக்கென்ன கவலை? காரியத் தைப் பார்.

புஷ் : அயோக்யனுக்காக அக்ர மம் செய்யாதே.

ஜ. தா. : சொல்புத்தி கேட்டு சுய புத்தியை இழக்காதே.

வாஞ் : அக்ரமனுக்காக அடுத் துக் கெடுக்காதே.

சுப் : கொலைகாரனைக் காப்பாற் றப் போய் நீயும் கொலைக்களத்துக்கு போகாதே. இன்னுமா புத்தி தெளி யலை? சிக்கிரம் போ. தடுத்துக் காப் பாற்று. போ...போ போ...இப்பக் கூடக் காரியம் கெட்டு விடவில்லை. போ....சிக்கிரம் ...ஓடிப்போய் காப் பாற்று.

டாக்டர் புத்தி தெளிந்து நவீனன் அறைக்குள் போகிறார். ஜமீன்தா ருக்கும் போன் செய்கிறார்.

காட்சி 13

டாக்டர் மூலம் விவரமறிந்த ஜமீன்தார் பதறுகிறார்.

ஜமீ : நம் உப்பைத் தின்று நமக்கே துரோகமா. அவனோடு சேர்ந்து விளையாடுகிறாள். அதுதான் சரி. நானே சென்று அதன் முடி வைத் தீர்மானித்து விடுகிறேன்.

ரிவால்வரை எடுக்கிறார்:

முரு : எஜமான்! என்ன எஜ மான்? என்ன ஆகிவிட்டது எஜ மான்?

ஜமீ : என்ன ஆகிவிட்டதா? முருகா! என் உயிருக்கு ஆபத்து. என் வஞ்சனைகளுக்கு வெட்ட வெளிச்சம். யாருக்கு என் மீது வளர்த்த பாசமும், மாசற்ற அன்பும் இருக்கும் என்று நினைத்தேனோ. அந்தச் சண்டாளியின் நெஞ்சிலே கள்ளமும் கபடமும், நஞ்சும் நாக பாஷாணமும் நிரம்பி விட்டது. அதற் குக் காரணம் நவீனன் மேல் அவள் கொண்ட காதல்! ஆதரித்த என்னை அண்டிக் கெடுக்க முனைந்த முதிர்ந்த காதல் உல்லாச மாளிகையில் சுக போகத்தை அள்ளிக் கொடுத் தேனே அதற்கு எனக்கு அவள் தரும் பரிசு. மாற்றானின் கண்தெரியாக் காதல். ஊர் சுற்றிய உதவாக்கரையை உப்பரிகையில் வைத்தேனே, அதற்கு அவள் காட்டும் விஸ்வாசம். வியவஸ்தை கெட்ட காதல்.

முரு : பதறாதீங்க எஜமான்!

காட்சி 14

டாக்டர் புஷ்பாவிடம் தவறைக் கூறி உண்மையை விளக்குகிறார்.

டாக் : பதறாதே புஷ்பா! நல்ல வேளையா சரியான சமயத்திலே எனக்கு புத்திவந்தது. எப்பேர்பட்ட வனு யிருந்தாலும் எப்பவாவது ஒரு நாள்தான் செய்த தவறை உணர் வான். பிராயச்சித்தம் தேடுவான். அப்போ அவன் மனசிலே கள்ளம் இருக்காது. கபடமிருக்காது. அந்த நிலையிலே இதையெல்லாம் உனக்குச் சொல்றேன். சுப்பையாவை கொன் றது ஜமீந்தார்தான்.

புஷ் : ஆ! என்ன? என் அப்பா வைக் கொன்றது ஜமீந்தாரா? குல நாசம் செய்த அந்தச் சண்டாளத் தனத்தை மறைக்க நீங்களுமா உடந்தை! நீங்களெல்லாம் மனிதர் களா. மிருகங்களா? அவன்தான் கொலைகாரன்...கொலைக்கு மேல் கொலை செய்பவன். உங்களுக்குக் கூட ஹிருதயமில்லையா? வாடி ஏங்கு கிற ஜீவனுக்கு உயிர் கொடுக்கும் புனிதமான டாக்டர் தொழிலை சீர் கெட்ட செயலுக்கும் சில்லறைக் காசுக்கும் இதுவரை பலியிட்டது போதாதென்று நவீனனையுமா சாக டிக்கப் பார்த்தீர்கள்!

நவீ : என்ன? என்னையுமா சாக டிக்கப் பார்த்தார்கள்?

புஷ் : ஆமாம் நவீன். ஜமீந்தா ரிணியின் மரணம்பற்றிய ரகசியத்தை

நீங்கள் போலீசுக்குக் காட்டிக் கொடுத்து விடுவீர்கள் என்பதற்காக உங்கள் உயிரை எடுக்கத் திட்டம் போட்டார்.

நவீ: நிஜமாகவா? அட பாவி! உன் புத்திசாலித்தனத்தையும் படித்த படிப்பையும் கருணையற்ற கபடு சூதுகளுக்கா பயன்படுத்தினுய்? டாக்டர்! இதுனுலே உனக்கு என்ன கிடைத்து விட்டது? நீ செய்த வஞ்சகத்துக்கும் துரோகத்திற்கும் அகரமத்திறகும் மன்னிப்பு கிடைக்குமா?

அங்கு வந்த இன்ஸ்பெக்டரால் டாக்டர் கைது செய்யப்படுகிருர்.

* * *

முருகனுடன் தகராறு செய்யும் போது ஜமீன்தாரின் துப்பாக்கி வெடித்து ரம்பாவின் உயிரைக் குடித்துவிடுகிறது.

முரு: (ஜமீன்தாரிடம்) இனி மேல நான் இங்கிருந்தா எனக்குத் தூக்கு மரம்தான கிடைக்கும். நீங்க இனி எப்படி நாசமானுலும் எனக்குக் கவலையில்லே.

துப்பாக்கியைப் போட்டு விட்டுப் போகிருன். புஷ்பா ஓடி வருகிருள். ரம்பாமீது விழுந்து அழுகிருள்.

புஷ்: ரம்பா! சந்தோஷமா வாழலாம்னு எவ்வளவோ கோட்டை கட்டினேனே. கடைசிலே உன கதியும் இப்படியா முடியணும்.

நவீனன் வருகிருன். துப்பாக்கியை நீட்டுகிருர் ஜமீன்தார்.

ஜமீ: சீ! ஒதுங்கிப் போ. உள்ளதை உள்ளபடி எழுதிவந்த உத்தமனில்லையா நீ. என் மனைவியை நான் கொன்றேன். நீ பார்த்தது போல் பக்கம் பக்கமாய் எழுதினுய். போலீஸைத் தூண்டிவிட்டாயே. உன்னுல் என்ன செய்ய முடிந்தது? நெருப்போடு விளையாடிய நீ இப்போது நெருப்பிலே விழும் விட்டில் பூச்சியாகி விட்டாய்.. நெருங்காதே! கிட்ட வந்தால் சுட்டுவிடுவேன்.

நவீ: மிரட்டாதே! உயிருக்குப் பயந்திருந்தால் உன்னைப்பற்றி எழுதியிருக்கமாட்டேன். பேனு பிடிப்பவன் துப்பாக்கி பிடிப்பவனை விட நெஞ்சிலே உரம் கொண்டவன் என்பது உனக்குத் தெரியாது. தலையெழுத்து அறியாமல் தறி கெட்டு விட்ட பேயே!

ஜமீ: பிறரைப் பற்றி எழுதிப் பிழைத்த உனக்கு உன் தலைவிதியைப்பற்றி தெரியுமா? முட்டாளே! சமூகத்தை சீர்திருத்தப் புறப்பட்டாயே! யார் யாரையெல்லாம் நீ சீர்திருத்திவிட்டாய்? உலகத்தை உய்விக்க உயிர் கொடுக்க வந்தாயே. அந்த உலகத்தைப்பற்றி கடுகளவாவது உனக்குத் தெரியுமா? நீ எதையோ காப்பாற்றுவதாகக் கதறி எழுதி வந்தாயே, அந்த சத்யமும் தர்மமும் இப்போது உன்னைக் காப்பாற்றி விட்டதா? முட்டாளே! சிலந்திப்பூச்சியைப் பார்த்திருக்கிருயா? தான் பின்னிய வலையில் அது தானே சிக்கிக் கொள்ளாது. உன்னைப் போன்ற சிறு சிறு பூச்சிகள்தான் அதில் மாட்டிக் கொள்ளும். அதைப் போன்று என்னிடம் அகப்பட்டுக் கொண்ட சிறுபூச்சி நீ. சிலந்தி வலையில் சிக்குண்ட ஜீவன் எப்படி அணு அணுவாகச் சாகிறதோ, அப்படி நீ மடியப் போகிருய். இப்போது எனக்கு எல்லாமே போய்விட்டது. அதனுல் நீயும் போய்விட வேண்டும். உன்னை ஒரு முறையில்லே. நூறு தரம் சுடப் போகிறேன். தெறித்தெழும் ரத்தம் என் மீது பீச்சும்படி சுட்டெரிக்கப் போகிறேன்.. ஹி...ஹி ஹி......

திடுக்கிட்ட புஷ்பா, மூலையில் இருந்த கைத்தடியை எடுத்து துப்பாக்கி பிடித்திருக்கும் ஜமீன்தாரின் கையில் அடிக்கிருள். ஆத்திரத்தோடு கீழே விழுந்த துப்பாக்கியை எடுக்கக் குனிகிருர். பூட்ஸ் கால் ஒன்று அதை அழுத்துகிறது. ஏறிட்டுப் பார்க்கிருர். போலீஸ் இன்ஸ்பெக்டர்!

அழுது துடிக்கும் புஷ்பாவை நவீனன் தூக்குகிருன்.

புஷ்: என் கதி?

நவீ: நான் காப்பாத்தரேன். கவலைப்படாதே.

கோர்ட்டில் எல்லா உண்மைகளும் வெளியாகி ஜமீன்தாரும் டாக்டரும் தண்டிக்கப்படுகிருர்கள். புஷ்பாவுடன் ஆனந்த வாழ்க்கையைத் துவக்குகிருன் நவீன். ★



நடேஷ் ஆர்ட்
பிக்சர்ஸ்

அன்பு

N.A.P

VENDHAN

பிரபல நடிகர்களைக்
கொண்டு, பிரமாதமா
கத்தயாரித்தும், அட்ட
காசம் செய்யாமல்
அமைதியுடன் 'அன்பு'
படத்தை வெளியிட்டி
ருக்கிறார் அனுபவஸ்
தர் எம். நடேசன்.



பத்மினி, லலிதா, சிவாஜி கணேசன். டி. ஆர். ராஜகுமாரி, டி. எஸ். பாலய்யா போன்ற நடிக நக்ஷத்திரங்கள் சிறப்பாக நடித்திருக்கும் 'அன்பு' டைரக்ஷனிலும் சிறந்து விளங்குகிறது.

சோபாவின்

பரோபகாரம்

காட்சிகள்

PSR







சிறந்த பின்னணிப் பாடகரான கண்டசாலாவின் சோபா பிக்ச்ஸ் ஸ்தாபவர் "பரோபகாரம்" படத்தை முதல் அன்பளிப்பாகத் தயாரித்திருக்கிறது. நல்ல கதையமைப்பைக் கொண்டதாம் இப்படம் தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் தயாரிக்கப்பட்ட இப்படத்தில் ஜி. வரலக்ஷ்மி, ழக்காமல, சாவித்திரி, ராமசர்மா ரேலங்கி முதலிய பிரபல நடிகர்கள் நடித்திருக்கின்றனர்.

தெலுங்குப் பதிப்பு ஆந்திரத்தில் வெளியிடப்பட்டுவிட்டது. தமிழ்ப் பதிப்பு விரைவில் திரையிடப்படவிருக்கிறது. இதிலே பாடல்கள் கனஜோராக இருக்குமாம். கமால் கோஷ் இதன் டைரக்டர்.

செய்திச் சுருள்

ஔவையார்

சமாதானத்தையே தன் வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்ட ஔவையாரை, சமாதான முறையில் நாம் சுதந்திரம் பெற்ற ஆகஸ்ட் 15–ம் தேதியன்று திரையில் சந்திக்கப் போகிறோம். ஜெமினியின் மாபெரும் காவிய ஓவியமான இது படவுலகிலே ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்து வைக்கும் என்று எதிர்பார்க்கலாம். கே. பி. சுந்தராம்பாள் பிரதம பாகத்தில் தோன்றி நடிக்கும் இப்படத்தில் எம். கே. ராதா, கணேசன், வனஜா, குசலகுமாரி முதலியோரும் நடித்திருக்கின்றனர். கற்பனையழகு மிகுந்த காட்சிஜோடனைகளும், கருத்தைக் கவரும் வகையில் இசையமைப்பும் ஜெமினியின் இப்படத்தில் விசேஷ அம்சங்களாக இருக்குமாம்.

திரும்பிப்பார்

சிவாஜி கணேசன், பண்டரிபாய், கிருஷ்ணகுமாரி, கிரிஜா முதலியோர் நடித்திருக்கும் மாடர்ன் தியேட்டர்ஸாரின் திரும்பிப்பார் சென்ற மாதம் 10–ம் தேதியன்று திரையிடப்பட்டு விட்டது. இந்தப்படத்தை டி. ஆர். சுந்தரம் டைரக்ட் செய்திருக்கிறார்.

அன்பு

'அன்பினால் உலகத்தையே வெல்லலாம்' என்ற தத்துவத்தில் ஒரு அருமையான கதையை நடேசன் நினைத்தார். 'அன்பு' என்ற தலைப்போடு இப்போது அதை ஆபாசமற்ற ஒரு அழகான திரைப்படமாக வெளியிட்டிருக்கிறார். சென்ற மாதம் 24–ம் தேதியன்று அன்பு தமிழ் நாடெங்கும் திரையிடப்பட்டிருக்கிறது. பத்மினி–சிவாஜி கணேசன் இருவரும் இதில் காதல் ஜோடியாக வருகிறார்கள். அன்பின் அருமையை எடுத்துரைக்கும் ஆதர்ச சித்தியாக வருகிறார் டி. ஆர். ராஜகுமாரி.

ராம்னாத்தின் நியூ ஈரா புரொடக்ஷன்ஸ் ஆரம்ப விழாவில் தேநீர் விருந்து நடக்கிறது.

வலது கோடியில் 'டை'யுடன் இருப்பவர்தான் சர்க்கார். வாஹினியில் பிலிம் வர்த்தக சபை அளித்த விருந்தில்.

லலிதா, பாலய்யா, மற்றும் கே ராமசாமி முதலியோரும் இதில் நடித்திருக்கிறார்கள் நியூடோன், சிட்டாடெல் இரு ஸ்டுடியோக்களிலும் இப்படம் உருவாகியிருக்கிறது.

ஆசை மகன்

தாய், தந்தை, அண்ணி இப்படியெல்லாம் பெயர்கள் வந்து போய் விட்டது. இந்த 'சீரிஸிலே' அசோஸியேடட் புரொட்யூஸர்ஸார் ஆசை மகன் என்ற தங்களது படத்தை இம்மாதம் வெளியிடப் போகிறார்கள். மலையாளம், தமிழ் இரண்டு பாஷைகளிலும் ஆசை மகன் தயாராகியிருக்கிறது ஜி. ஆர். ராவ் இந்தப் படத்திற்கு டைரக்டராக பணியாற்றியிருக்கிறார். பத்மினி. பி. எஸ். சரோஜா, கிரிஜா, ஜெமினிகணேசன், பாலய்யா முதலிய நக்ஷத்திரங்கள் இப்படத்தில் மின்னுகிறார்கள். வாஹினியில் இப்படம் சுடப்பட்டிருக்கிறது.

சண்டிராணி

ஆகஸ்ட் வெளியீடாக வெளிவர விருக்கும் மற்றொரு படம் பரணியின் சண்டிராணியாகும். பானுமதி தன் சொந்த ஸ்டுடியோவில் தயாரித்து, டைரக்ட் செய்திருக்கும் இப்படம் ஒரே வாலிபனைக் காதலிக்கும் இரட்டைச் சகோதரிகளின் வாழ்க்கையைச் சித்தரிக்கிறது. பாமர ரஞ்சகமான அம்சங்கள் இப்படத்தில் ஏராளமாக இருக்கிறதாம். பானுமதி, ராமராவ், ரங்காராவ், வித்யாவதி, துளசி முதலியோர் சண்டிராணியின் நடிகர் பட்டியலில் காணப்படுகின்றனர். இம்மாதம் 28-ம் தேதி இப்படம் வெளியிடப்பட விருக்கிறது.

இன்ஸ்பெக்டர்

ஜூபிடர் பிக்சர்ஸார் அடுத்தடுத்து இப்பொழுது பல படங்களை வெளியிட்டு வருகிறார்கள். சென்ற மாதம் 31-ம் தேதி அவர்களது இன்ஸ்பெக்டர் தமிழ்நாடெங்கும் வெளியிடப்பட்டிருக்கும். இந்தப் படத்தின் தெலுங்குப் பதிப்பு ஆந்திராவில் ஏற்கனவே திரையிடப்பட்டுவிட்டது. நெப்டியூனில் சுடப்பட்ட இப்படத்தில், நாடகமேடையில் இதைப் பிரபலப் படுத்திய டி. கே. எஸ். சகோதரர்கள் நடித்திருக்கிறார்கள். அஞ்சலிதேவி தன் லீலைகளை தமிழ் நாட்டில் இப்படத்தின் மூலம் மீண்டும் ஆரம்பித்து வைக்கப்போகிறார். ஆர் எஸ். மணி இன்ஸ்பெக்டரை டைரக்ட் செய்திருக்கிறார்.

புதுப் படங்கள்

'சிக்கனமான முறையில் வைர மாலை என்ற படத்தை எடுத்து உங்களுக்களிக்கப் போகிறோம்' என்று 'தோட்டக்கார' விஸ்வநாதன் வைர மாலை படத்திற்கான ஆரம்ப விழா வன்று கூறினார். நியூடோனிலே சென்ற மாதம் 12-ம் தேதி காலையில் வழக்கறிஞர் வி. ஸி கோபால ரத்னம் அவர்களால் இப்படம் ஆரம்பித்து வைக்கப்பட்டது மனோஹர், துரைராஜ் மற்றும் பல நடிகர்களும் பிரமுகர்களும் இந்த ஆரம்ப விழாவிற்கு வந்திருந்தனர். மேடையில் ஓரளவு பிரபலமடைந்த நாடகம் இது தொழிலாளிகள் கூட்டாகச் சேர்ந்து ஆரம்பித்திருக்கும் இப்படத்தில் மனோஹர் நடிக்கலாம்.

கீழ்ப்பாக்கத்தில் 'சிக்கனம்' என்ற கோஷம் எழும்பியது போலவே கோடம்பாக்கத்திலும் அன்றைய தினம் காலை 'சிக்கனம்' என்ற கூக்குரலை எதிரொலிக்கச் செய்தார் டைரக்டர் கே. ராம்னாத். நியூ ஈரா புரொடக்ஷன்ஸ் என்ற சொந்தப் படக்கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார் அவர். பிலிம் செண்டருடன் கூட்டாகச் சேர்ந்து கொண்டு படங்களைத் தயாரிக்கப் போகிறார். 'சிக்கனமான முறையில் குறுகிய காலத்தில் இவை தயாரிக்கப்படும் என்பதோடு, கதைக்கு இவற்றில் முழுக்க முழுக்க பிரதான்யம் அளிக்கப்பட்டிருக்கும்' என்றார் ராம்னாத். முதல் படம் ஒரு சமூகப்படமாம். இதில் நாகய்யா நடிப்பதற்கேற்றவாறு ஒரு பாத்திரம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறதாம். அடுத்தது ஒரு சாகஸப் படமாம். அன்றைய இந்த ஆரம்ப விழாவுக்கு படவுலகம் பூராவுமே திரண்டு வந்து விட்டது. ஜுபிடர் மொஹிதீன், நாகிரெட்டி, ஏவி. எம்., பி. என். ரெட்டி, ஸ்ரீராமுலு நாயுடு, சுப்பராமன் மற்றும் ஏராளமான டைரக்டர்களும் நடிகர்களும் வந்திருந்தனர்.

இந்த 12-ம் தேதி ஒரு பெரிய முகூர்த்த நாள் என்பதை பயன்படுத்தாமல் விடக்கூடாது என்ற நோக்கத்தில் புதுப்படங்களுக்கு பூஜை போடப்பட்டதோ என்று நான் நினைக்கிறேன். அன்று மாலை நரசுவில் ஆனந்தகுமார் புரொடக்ஷன்ஸார் 'நக்கீரர்' என்ற படத்தின் துவக்க விழாவை நடத்தினார்கள். முருகபூஷணம், புதுமுகம் கிதாராணி முதலியோர் இதில் நடிக்கிறார்கள். ஆர். பிரகாஷ் டைரக்ட் செய்கிறார்.

அதே தினத்திலே வி. எல். நரசு தனது சொந்தப் படத்திற்கான பூஜையையும் அமரிக்கையாக நடத்தியிருக்கிறார். ஏ. எஸ். ஏ. சாமி இந்தப் படத்திற்கான கதை, வசனத்தை எழுதியிருப்பதுடன், படத்தில் நடிக்கும் சிவாஜி கணேசன், பி. கே. சரஸ்வதி, கிருஷ்ணகுமாரி முதலியோரை ஆட்டி வைக்கும் டைரக்டராகவும் அமர்ந்திருக்கிறார்.

அருணா பிலிம்ஸார் தங்களது மூன்றாவது படத்திற்கான ஆரம்ப பூஜையை சென்ற 15-ம் தேதியன்று நடத்தினார்கள். 'புரொடக்ஷன் 2-A' என்பது படத்தின் தற்காலிகப் பெயர்!

கன்னிராணி

ஏ. டி. எம். புரொடக்ஷன்ஸ் 'தோழன்' என்று தயாரித்து வந்த படத்திற்கு 'கன்னிராணி' என்ற புதுப் பெயரைக் கொடுத்திருக்கிறார்கள். நண்பர்கள் இருவரது இணைபிரியாத் தன்மையையும் வாத்சல்யத்தையும் விளக்குகிறது. மேடையிலேயே பிரபலமான இக்கதை. பி. வி. கிருஷ்ணன் டைரக்ஷனில் மாதுரிதேவி, நரசிம்மபாரதி, மனோஹர் முதலியோர் நடிக்கும் இப்படம் ரேவதியில் தயாராகி வருகிறது.

பி. என். சர்க்கார் விஜயம்

பிலிம் பெடரேஷன் தலைவரான பி. என். சர்க்காரும், பெடரேஷன் அங்கத்தினர்களில் சிலரும் சென்ற மாதம் சென்னைக்கு விஜயம் செய்திருந்தனர். இவர்களுக்கு சென்ற மாதம் 11-ம் தேதியன்று தென்னிந்திய பிலிம் வர்த்தக சபை ஒரு வரவேற்பளித்தது. சினிமாத் தொழிலில் அரசாங்கம் காட்டி வரும் அசிரத்தையையும், எதிர்ப்பையும் குறிப்பிட்டு, அதை நீக்க முன்வர வேண்டும்" என்று பெடரேஷன் தலைவர் கூறினார்.

'நக்கீரர்' படம் வளர காமிரா முடுக்கி விடப்படுகிறது



இந்திய பிலம் பெடரேஷன் தலைவருக்கும் அங்கத்தினர்களுக்கும்
வாஹினியில் நடந்த வரவேற்பின்போது எடுத்த படம்.

நாடகக்கழக வரவேற்பில் ஏவி. எம். தனது தூரக்கிழக்கு
பிரயாண அனுபவத்தை விளக்குகிறார்.



வி. ஸி. கோபாலரத்னம் 'வைரமாலை'யை உருவாக்க காமிராவை இயக்கி வைத்தார். சென்ற மாதம் 12–ம் தேதியன்று நியூடோன் ஸ்டூடியோவில் இந்த வைபவம் நடந்தது.



'நக்கிரர்' பட ஆரம்ப விழாவில் கலந்து கொண்டவர்கள்.



கிரிஜா.........

(27-ம் பக்கத் தொடர்ச்சி)

அதில் கதாநாயகியாக நடிக்க கிரிஜாவை ஒப்பந்தம் செய்து விட்டார். இந்தப் பாத்திரத்திலே-அதாவது பைத்தியக்கார மன்னன் மகள் ஸ்வர்ணவாக-பத்மினி நடிப்பதாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இதிலே பத்மினிக்குப் பதில் கிரிஜா நடித்தார். அந்தப் படத்தில் லலிதா, சாந்தகுமாரி. முக்காமலா, கௌசிக் முதலியோர் நடித்தனர்.

கிரிஜா இந்தப் பாத்திரத்திலே வாஸந்தியாகப் பெயர் மாற்றப்பட்ட கட்டங்களில் மிகவும் நன்றாக நடித்தார். குறும்புத்தனமும் விளையாட்டுப் புத்தியும் நிறைந்த ஒரு கிராமப் பெண்ணாக அதி இயற்கையாக நடித்த கிரிஜாவைக் கண்ட ரஸிகர்கள் கையில் ஜெபமாலையை எடுத்துக் கொண்டார்கள்! கல்லூரி மாணவர்கள் அவர் படத்தை நோட்டுகளில் மறைத்து வைத்துப் பார்த்து மகிழ்ந்தனர்! பாமரர்கள் அவரது வர்ணப் படத்தை பிரேம் போட்டு மாட்டி மானஸீக பூஜை செய்தார்கள்! ஆக கிரிஜாவுக்குப் பட உலகில் முன்னேற்றத்திற்கு வழி கோலப்பட்டு விட்டது!

ஆனால் புல்லய்யாவைப் போலவே கிரிஜாவை, சண்டிகா படத்தின் மேனேஜராக இருந்து, பின் விநோதா பிக்சர்ஸ் கம்பெனியை ஆரம்பித்த டி. எல். நாராயணாவும் முன்னுக்குக் கொண்டு வருவதில் அபார முயற்சி செய்தார். விநோதாவின் முதல் படமான 'ஸ்திரீ சாகஸம்' என்ற பிரம்மாண்ட தயாரிப்பில் கிரிஜாவுக்கு ஒரு முக்கிய பாத்திரமளிக்கப்பட்டது. ஆனால் கிரிஜாவை அந்தப் படத்தில் தக்கபடி படமுதலாளிகள் பயன்படுத்தவில்லை, என்றே சொல்ல வேண்டும். மிகவும் அருவருக்கத்தக்க முறையிலே அவரது பாத்திரம் சிருஷ்டிக்கப்பட்டிருந்தது. கவர்ச்சியை உண்டுபண்ணும் பாத்திரம் பார்ப்பதற்கு விரசமாகவே பட்டது. காதல் காட்சிகள் காமக் களியாட்டமாக மாறின. நாகேஸ்வரராவும் கிரிஜாவும் முத்தமிட முயலுவது போன்ற கட்டங்களே அந்தப்

கிரிஜாவின் தாயாரான நடிகை திலகம்.

படத்தின் தரத்தை வெகுவாகக் குறைத்து விட்டன. அவருக்குத் தகுந்தபடி 'ஆங்கிள்கள்' கொடுக்கப்படாததால் பார்ப்பதற்கும் நன்றாக இல்லை.

ஸ்திரீ சாகஸம் மொத்தத்தில் ஒரு சர்வசாதாரண படமாக அமைந்து விட்டது. நாகேஸ்வரராவ். அஞ்சலி தேவி, சூர்யபிரபா போன்ற பிரபல நக்ஷத்திரங்கள் நடித்தும் படம் தோல்வியுற்றது. வேதாந்தம் ராகவய்யா இந்தப் படத்தை டைரக்ட் செய்தார். அதிருஷ்டவசமாக இந்தப் படம் முதலில் வெளி வந்து விட்டது. இதற்குப் பின்தான் தர்மதேவதா வெளியிடப்பட்டது. இல்லாவிட்டால் கிரிஜாவின் புகழுக்கு 'ஹானி' ஏற்பட்டிருக்கவும் கூடும்.

இவை தவிர விஜயா புரொடக்ஷன்ஸாரின் 'பாதாள பைரவி'யில் கிரிஜாவுக்கு ஒரு சிறிய பாத்திரமளிக்கப்பட்டது. பாதாள பைரவியாகத் தோன்றி, 'நரனே! வேண்டுவன கேள்' என்று கணீரென்று பேசி விட்டுப் போவது கிரிஜாதான்.

இந்த வசனம் ஆந்திர நாட்டிலே மிகவும் பிரபலமாகி விட்டது. 'கரனே வேண்டுவன கேள்' என்று தெலுங்கில் ஒருவரை யொருவர் கேட்டுக் கொண்டு விளையாடுவது மாணவர்களிடையே சகஜமாகிவிட்டது இதனாலேயே அந்தச் சிறிய பாத்திரத்திலே தோன்றின போதிலும் கிரிஜாவுக்கு அதிக புகழ் கிடைத்தது.

கணபதி பிக்சர்ஸ் 'தேவகி' படம் 'ஆடஜென்ம' என்ற பெயரில் தெலுங்கில் தயாரிக்கப்பட்டது. அதில் லீலாவாக மாதுரி தேவிக்குப் பதில் கிரிஜா நடித்தார். படம் பிரமாத வெற்றியடையா விட்டாலும் கிரிஜாவின் நடிப்பு பாராட்டுதலைப்பெற்றது. இவைகளுக் கெல்லாம் பிறகுதான் தர்ம தேவதா இருமொழிப் படம் வெளியாகியது.

ஆகவே இதே சூட்டோடு சூடாக கிரிஜாவுக்கும் நக்ஷத்திர ஸ்தானம் கிடைத்துவிட்டது. கஜானனா புரொடக்ஷன்ஸார் தயாரித்த 'மாமியார்' படத்தில் கிரிஜா இரு கதா நாயகியரில் ஒருத்தியாகத் தோன்றினார். இந்தப் படம் 'கோடரிகம்' என்ற பெயரில் தெலுங்கிலும் வெளியாயிற்று. இரு பாஷைப் படங்களிலும் கிரிஜா நடித்தார். இளைய மருமகளாக வந்து மாமியார், மாமனார் இருவரது கொட்டத்தையும் அடக்கி படிப்பு சொல்லிக் கொடுக்கும் கட்டத்திலெல்லாம் கிரிஜாவின் நடிப்பு சபாஷ் பெற்றது. அவருடன் எஸ். வரலக்ஷ்மி, மனோஹர், ரேலங்கி, சூர்யகாந்தம், புதுமுகம் டி. கே. பாலசந்திரன் பி. எஸ். சிவபாக்கியம், பி. ஆர். பந்துலு முதலியோர் நடித்தனர். கே. வேம்புவின் டைரக்ஷனில் இப்படம் தயாராகியது.

இந்தப் படத்திற்கு முன்பு வெளியிடப்பட்ட 'என்வீடு' படத்தில் கிரிஜா நடித்தார். ஆனால் அவருக்கு அதிலே மிகவும் முக்கியத்துவமுள்ள பாத்திரம் அளிக்கப்பட வில்லை. சங்கீத விதுஷி லக்ஷ்மியாக பாடிக் கொண்டே பாதிபாகத்தைக் கடத்த நேர்ந்தது. ஆனால் கிடைத்த சந்தர்ப்பங்களில் நன்கு பேசி நடித்தார் கிரிஜா. 'என் வீடு' தெலுங்கு படத்திலும் கிரிஜா நடித்தார் அதில் நாகய்யா, டி. ஆர். ராஜகுமாரி, புதுமுகம் வித்யாவதி, டி. எஸ். பாலய்யா, நடராஜன், ராமசர்மா, கோபால கிருஷ்ணன் முதலியோரும் நடித்தனர். நாகய்யா தயாரிப்பு, டைரக்ஷன், சங்கீத டைரக்ஷன், நடிப்பு ஆகியவைகளின் பொறுப்பேற்றிருந்தார். சோபனாசலாவின் 'பிரஜா சேவா' தெலுங்கு படத்திலும் கிரிஜா தோன்றினார்.

கிரிஜா நடித்து கடைசியாக வெளிவந்த படம் மாடர்ன் தியேட்டர்ஸின் 'திரும்பிப்பார்' ஆகும். முழுதும் இளம் கலைஞர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட படம். சென்ஸார் போர்டின் தாக்குதலுக்குப் பிறகு வெளியான இப்படம் நல்ல பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்தது. கிரிஜா, கிருஷ்ணகுமாரி, பண்டரிபாய், சிவாஜி கணேசன் முதலியோருடன் டி. எஸ். துரைராஜ், நரசிம்மபாரதி முதலியோரும் நடித்திருக்கின்றனர் இப்படத்திலே. கருணாநிதி கதை, வசனம் எழுதிய இப்படத்தை டி. ஆர். சுந்தரம் டைரக்ட் செய்திருக்கிறார்.

தற்போது கிரிஜா சேர்ந்தாற் போல் பல படங்களில் நடித்து வருகிறார். மனோஹரா பிக்சர்ஸ் 'மனோஹரா' தமிழ், தெலுங்கு, ஹிந்தி முப்பாஷைப் படத்தில் அவருக்கு நிறைய வேலை இருக்கிறது. ஏராளமான பொருட் செலவில் பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகளுடன் தயாராகும் இப்படத்தில் கண்ணாம்பா, சிவாஜி



கணேசன், டி. ஆர். ராஜகுமாரி 'ஜாவர்' சீதாராமன், எஸ். எஸ். ராஜேந்திரன் முதலிய நக்ஷத்திர நடிகர்கள் நடிக்கின்றனர். பிரசாத் இந்தப் படத்தை சிரத்தையுடன் டைரக்ட் செய்து வருகிறார். நெப்டியூனிலே இந்தப் படம் தயாராகி வருகிறது. இது ஒரு தீபாவளி வெளியீடாக இருக்குமாம்.

'அம்மா'வை வெளியிட்டு வெற்றி கண்ட வாசுமேனன் அஸோஸியேடட் புரொட்யூஸர்ஸ் என்ற பெயரில் தயாரிக்கும் 'ஆசை மகன்' என்ற தமிழ், மலையாளம் இருபாஷைப் படத்தில் நடித்து வருகிறார் கிரிஜா. இம்மாதத்திலேயே இப்படம் வெளியாக விருக்கிறது. ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிலிம் கம்பெனியார் தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் ஜெமினியில் தயாரித்து வரும் பெயரிடப்படாத படத்திலும் கிரிஜா நடித்து வருகிறார். கண்ணாம்பா, கிரிஜா, கிருஷ்ண குமாரி, டி. கே. ராமச்சந்திரன், மனோஹர் முதலியோர் அதில் நடிக்கிறார்கள். நாகபூஷணம் இதன் டைரக்டர். தமிழில் வனஜா நடிக்கும் பாத்திரத்தில் தெலுங்கில் கிரிஜா நடிக்கிறார்.

ரோஹிணியாரின் 'வஞ்சம்' படத்திலும் கிரிஜாவுக்கு வேலையிருக்கிறது. இவரது தாயார் திலகம், மகள் பட உலகில் புகழ் பெறும் போது விலகியிருந்தாலும் அவரைப் பட உலகம் விடவில்லை. மாமியார் படத்திலும் சியாமளாவிலும், அவர் தோன்றியிருக்கிறார்.

கிரிஜாவுக்குக் கூடப்பிறந்தவர்கள் யாருமில்லை. அம்மாவுக்கு அவர் ஒரே பெண். தன் வயதொத்தவர்களுடன் அவர் சகஜமாகவும் சரளமாகவும் பேசிக் கொண்டிருப்பார். கிரிஜாவுக்கு ஓய்வு ஒழிவில்லாமல் பட வேலைகள் இருந்து கொண்டிருப்பதால் மற்று எதிலும் ஈடுபட அவரால் முடிவதில்லை. அவகாசமுமில்லை.

87676

கிரிஜாவுக்கு மலையாளம், தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய நான்கு பாஷைகளிலும் நன்கு பரிச்சயமுண்டு. ஹிந்தியும் கொஞ்சங் கொஞ்சம் தெரியும். ஹிந்தி, ஆங்கிலம், மலையாளம் மூன்று பாஷைகளிலும் ஆசிரியர்களைக் கொண்டு நன்கு பயிற்சி பெற்று வருகிறார். பெண்ணாகப் பிறந்து பட உலகிலும்

1954

வருஷத்திய

நக்ஷத்திர காலண்டர்கள்

அதி அற்புதமான மூவர்ண நக்ஷத்திரப் படங்களுடன் பல அளவுகளில் தயாராகின்றன. இன்றே உங்கள் தேவைக்கு எழுதுங்கள். வியாபார விருத்திக்கு அடிகோலுங்கள்.

10" × 15" & 11¼" × 17¼" அளவில் சுமார் 100 படங்கள் அடங்கிய ஸாம்பிள் செட் ரூ. 3/-

---

விவரங்களுக்கு:

ஸ்டார் காலண்டர் கம்பெனி

(ராமநாத் பிரஸ்)

சென்னை-14.

ஒவ்வொரு நகரத்திலும் ஏஜெண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதுங்கள்.

புகுந்தாகிவிட்டது. இனி எல்லாவற்றையும் கற்றுக் கொண்டால் தானே எல்லா இடத்திலும் சந்தர்ப்பம் கிடைக்கும்?

கிடைக்கும் நேரத்தை வீணாக்காமல் நிறைய புத்தகங்களை படிக்கிறார் கிரிஜா. படிப்பதன் மூலம் நன்கு அறிவு விருத்தியாகும் என்ற மனப்பான்மையுள்ள ஒரிரு நக்ஷத்திரங்களில் கிரிஜாவும் ஒருவர். படங்களில் விரும்பியோ விரும்பாமலோ நடனமாட வேண்டிய நிர்ப்பந்தங்கள் சிலசமயம் ஏற்பட்டு விடுகின்றன. ஆகவே அங்கே திணறிக் கொண்டிருக்காமல் நடனமாடப் பழகிவிட்டால் என்ன, என்று அவருக்குத் தோன்றியிருக்க வேண்டும்! ஆகவே தான் கிரிஜா நடனமாடப் பழகி வருகிறார் என்று நினைக்கிறேன்.

கிரிஜாவின் குடும்பத்தினர் தூர்க்க பூஜை செய்வதில் மிகவும் பிரபலமானவர்கள். அவர்கள் ரொம்பவும் பயபக்தி யுள்ளவர்கள். எதை மறந்தாலும் தூர்க்க பூஜையை மறக்கவே மாட்டார்கள். ஆகவேதான் கிரிஜா என்று தன் மகளுக்கு பெயர் வைத்தார் திலகம்.

*சுமார் ஐந்தடி உயரமும் எழுபத்தி ஐந்து பவுண்டு எடையுமுள்ள கிரிஜா வயதுக்குத் தகுந்த வளர்ச்சியுடையவர் என்று சொல்ல முடியாது. பழகுவதற்கு ரொம்பவும் நல்லவர். யாரிடமும் அடக்கமாகவும் சரளமாகவும் பேசிப் பழகுவார். தன்னைவிட மற்றவர்கள் அறிவில் சிறந்தவர்கள் என்ற அபிப்பிராயம் உடையவர் கிரிஜா. அதனால்தான் கலையைக் கிரகித்துக் கொண்டு முன்னணிக்கு வர அவரால் முடிந்தது. எலுமிச்சை நிறமுடைய கிரிஜா சுமாரான முகவெட்டு உடையவர்.

பிறப்பிலேயே நடிகையாகி, திறமையினால் முன்னணிக்கு வந்திருக்கும் கிரிஜாவுக்கு வரும் படங்கள் மகத்தான புகழைக் கொடுக்கும் என்று நிச்சயம் நம்பலாம். புது முகங்களோடு இப்படிப்பட்ட இளம் முகங்களுக்கும் நிறைய சந்தர்ப்பமளித்து முன்னணிக்குக் கொண்டுவர பட உலக பிரம்மாக்கள் உழைக்க வேண்டும்.

—எஸ். வி. ஸம்பத்குமார்.

உலகம்......

(32-ம் பக்கத்தொடர்ச்சி)

இடையே நண்பன் விட்டல் வரவே அவனுடன் பேசிவிட்டுப் பிரிகிருர்கள்.

காட்சி 3

மோகனின் மாமா தன் மனைவியுடனும் மகள் லீலாவுடனும் தென்னுப்பிரிக்காவிலிருந்து வருகிருர். லீலாவிடம் தன் மனதைப் பறிகொடுத்து விடுகிருன் மோகன். அவளும். அப்படித்தான். அவள் டாக்டர் வேலைக்குப் படிக்கிருள், இடையே பாரிஸ்டர் பரீட்சைக்காக லலிதா இங்கிலாந்து செல்கிருள். சங்கருக்கு ஆண் குழந்தை பிறக்கிறது. சந்தர் எனப் பெயரிட்டுச் செல்வமாய் வளர்க்கிருர்கள். அடுத்தவள் பத்மா. சபாபதி மரணப் படுக்கையில் விழுகிருன். அவனருகே மீனு, சங்கர். மோகன் மூவரும் குழந்தைகளுடன் நிற்கின்றனர்.

சபா : என் அருமை மக்களே! நான் இனிமேல் இந்த வியாதியில் பிழைக்கமாட்டேன். குழந்தைகளே! உங்கள் தாயை நன்ருகக் கவனித்துக் கொள்ளுங்கள். உங்களுக்குப் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி வளர்த்தவள் அவள். உங்கள் மனைவியைக் கண்யமாய் நடத்துங்கள். ஒரு பெண் இருக்க மறுதாரம் கொள்ளாதீர்கள். பெண் என்பது ஒரு பூ. அந்தப் பூவின் வாசனையைப் பத்திரப் படுத்துங்கள். அதைக் கசக்கி விட்டால் வீணுகிவிடும். உங்கள் சுகத்திலும் துககத்திலும் மனைவியே கூடியிருப்பாள். இறைவா! என் கடமை முடிந்துவிட்டது போலும்! உன்னை நான் துதிக்கிறேன்.

அவன் ஆவி பிரிகிறது. மீனு அவன் பாதத்தில் தலை வைத்துக் கதறுகிருள். எதற்காக எது நிற்கும்? இதைப்போன்ற சகஜ வாழ்க்கையைத் தானே தன்னுள் அடக்கிக் கொண்டிக்கிறது இவ்வுலகம்! லீலா மோகன் காதல் வளருகிறது.

காட்சி 4

லலிதா பாரிஸ்டர் பரீட்சையில் முதல் வகுப்பில் தேறியபின் நாடு திரும்பி மோகனிடம் வருகிருள்.



லலிதா: ஹலோ மோகன்!

மோக: ஹலோ லலிதா! இங்கிலாந்திலிருந்து எப்போது வந்தாய்?

லலி: நேற்றுத்தான் வந்தேன்.

மோக: பாரிஸ்டர் பரீட்சை?

லலி: பஸ்ட் கிளாஸ்!

மோக: ஐ ஸீ! கன்கிராஜுலேஷன்ஸ்!

லலி: மோகன்! நான் இப்போது உன்னைத் தேடிக் கொண்டுதான் வந்தேன்.

மோக: என ஞாபகம் கூட இருக்கா உனக்கு?

லலி: மோகன்! என் அன்பின் சிகரமான உன்னை என் வாழ்க்கையில் மறக்க முடியுமா?

அவனிடம் நெருங்குகிறாள். அவன் நகர்ந்து கொள்ளுகிறான்.

லலி: ஏன் நகர்கிறாய்? என் ஸ்பரிசத்தின் காந்தம் ஷாக் அடித்து விட்டதோ?

48 ரூபாய் மட்டும்

(ஆங்கிலம் கற்க)

பள்ளிக்கூடத்திற்கோ கல்லூரிக்கோ போகாமல் எவர்க்கும் எப் பரீட்சையும் தேறலாம். ஆங்கில ஆரம்ப எழுத்திலிருந்து தொடங்கி 4-ம் பாரத்திற்கொப்பான ஆங்கில அறிவு பெற ஆக ரூ. 48 தான் தேவை. இடையில் கல்வியை நிறுத்தியவர்களும் கற்கலாம். வயது, கல்வி முதலிய குறிப்புகளுடன் 8 அணு ஸ்டாம்பு அனுப்பி விண்ணப்பித்தால், மெட்ராஸ் மெட்ரிக், பெனுரஸ் மெட்ரிக், இன்டர்மீடியேட் முதலிய பரீட்சைகள் வீட்டிலிருந்தே படித்து எவ்வாறு தேர்ச்சி பெறலாம் எனும் விவரம் அறிவிக்கப்படும்.

முகவரி:

கேம்பிரிட்ஜ் காலேஜ்

கைதமுக்கு (P) திருவனந்தபுரம்

மோக: உன்னைப் பல நாட்களுக்குப் பிறகு காண்கிறேன் அல்லவா? மேலும் நீ இங்லாண்ட் ரிடர்ன்ட்! படிப்பில் மேதை! பாரிஸ்டர்!

லலி: ஆனாலும் நான் உனக்கு என்றும்போல் சாதாரண லலிதாவாகத்தான் இருக்கிறேன மோகன்! இனிமேல் என்னால் பொறுக்க முடியாது. என்னை ஏற்றுக் கொள்ள மாட்டாயா?

மோக: ஆ. காதலா? விபரீதம்!

லலி: மோகன்...!

மோக: உன்னை நான் என்றும் காதலித்ததே இல்லை என் தங்கையாகவே கருதி வருகிறேன் லலிதா!

லலி: தங்கை! உன் காதலி மோகன், காதலி!

மோக: என் காதல் உலகத்தில் உனக்கு இடமே யில்லை லலிதா!

லலி: என்னைப் பார்!.. என அழகைப் பார்...

மோக: (தடுமாற்றத்துடன்) லலிதா! கதறுதே லலிதா! நான் உன்னுடையவனல்ல. உன்னுடையவனாகவும் மாட்டேன்.

லலி: மோகன்! உன் இதழ்களில் பொறியும் கோபம், உன் சொல்லில் காணும் வேகம் எவ்வளவு அழகாக இருக்கிறது மோகன்! கொலை செய்தவளால் கொலையை மறைக்க முடிந்தாலும் காதலித்தவளால் காதலை மறைக்க முடியாது. காதலின் இருட்டுதான் வாழ்க்கையின் வெளிச்சம் மோகன்!

மோக: லலிதா! எனக்குள்ளது ஒரு ஹிருதயம். ஒரே நெஞ்சம்! ஒரு லக்ஷியம்! ஒரே காதல்! அது உனக்குரியதல்ல. என் லீலாவுக்கே உரியது.

மோகன் போய்விடுகிறான். லலிதா பிறகு லீலாவிடம் வந்து அவள் மனதைக் கலைக்க, தன் காதலன் தான் மோகன் என்று கூறுகிறாள். லீலா வருந்துகிறாள். கோபித்து லலிதாவை விரட்டுகிறாள். மோகன் நடந்ததறியாது குஷியுடன் வருகிறான்.

மோக: என் ஹிருதயத்தைத்தான் நீ திருடினாய். என் போட்டோவை யுமா திருடணும் லீலா?

லீலா: நான் ஏன் அதைத் திருடப் போறேன். உங்கள் காதலியிடம் போய்க் கேளுங்கள்!

மோக: ஆ, காதலியா? நீதானே லீலா!

லீலா: அது முன்பு!

மோக: இப்பொழுது?

லீலா: உங்கள் புதுக்காதலி மிஸ் லலிதா!

மோக: (ஆச்சரியத்துடன்) லலிதா! அவளோடு நான் காலேஜிலே படித்ததற்குப் பிறகு. நேற்றுத்தான் பார்க்கில் பார்த்தேன். நீ என்னை நம்பமாட்டாயா லீலா?

லீலா: உன்னை நம்புவதா? நீ தான் அவள் காதலன் என்று என் வீட்டிற்கே வந்து என்னிடமே கூறி விட்டுப் போனாள். உன் போட்டோவையும் அவள் கையில் நான் நேரில் பார்த்தேன். இனிமேலும் உன்னை நம்புவதா?

மோக: ஆம் லலிதா! அவள் என் பக்கத்தில் உட்கார்ந்தாள். காதல் வார்த்தைகளை என்மேல் சொரிந்தாள். அவைகளை நான் தூக்கி யெறிந்தேன். போட்டோவைத் திருடினவள் அவள்தானா?

லீலா: மோகன்! இப்படி யெல்லாம் நடிப்பதற்கு எப்பொழுது கற்றுக் கொண்டாய்? யாரிடம் கற்றுக் கொண்டாய்? உம்...லலிதா விடமா?

மோக: இல்லை. வீணாகச் சந்தேகப் படாதே! களங்கமில்லாதிருந்த உன் உள்ளத்தில் கடும் விஷத்தைக் கலந்து விட்டாள் லலிதா!

லீலா: (கோபமாகச் சிரித்து) விஷம்..! கடும் விஷம்!! அந்த விஷத்தை என் ஹிருதயத்தில் தெளித்து என் வாழ்க்கையைப் பாழாக்கினாள். அதே விஷத்தை அமிர்தமாக மாற்றி உனக்குப் புகட்டினாள்! நீ அதை அருந்தினாய்!

''ரிலீஸான படத்தைப் பார்க்கலாம்னு தியேட்டருக்குப் போறதுக்குள்ளே அந்தப்படம் ஓடிப்போயிடறதுங்க.''

மோக: லீலா! என்னென்னவோ சொல்கிறாயே! உன் ஹிருதயத்தில் எரிந்து கொண்டிருந்த என் விளக்கு அணைந்து விட்டதா?

லீலா: அணைந்து விட்டது! நீ தான் அணைத்து விட்டாய்!

மோக: உன் புத்தி தடுமாறியிருக்கிறது. வீணாக என்னை நிராகரிக்கிறாய்.

லீலா: ஆம், நிராகரிக்கிறேன். உன் காமத்திற்குப் பலியாவதை நிராகரிக்கிறேன். உனக்கு ஆசைநாயகியாக இருப்பதை நிராகரிக்கிறேன். உன்னை நம்பி மோசம்போன என்னை இருள் மூடட்டும். ஆத்திரம் அழிக்கட்டும். துயரம் உருக்கட்டும். நீ போ! உன் லலிதாவிடமே போய் விடு.

மோக: உனக்கு அர்ப்பணம் செய்த என் காதலை வெறுக்கிறாய். ஆதரித்த வாயால் அவமதிக்கிறாய். தழுவிய கரங்களால் தள்ளுகிறாய். சரி, நான் போகிறேன்.

வருத்தத்துடன் போய்விடுகிறான் மோகன். லீலாவுக்குத் துயரம்

தாங்க முடியவில்லை. நேரே லலிதாவின் வீட்டுக்குக் கலங்கிய கண்களுடன் செல்கிருள்.

லலி: ஓ. வா லீலா! என்னிடம் மன்னிப்பு கேட்கத்தானே வந்தாய்? உம், உன் மனச்சாட்சி உன்னைச் சும்மா விட்டிருக்குமா?

லீலா: ஆம், என் மனச்சாட்சி தான் என்னை இங்கு இழுத்து வந்தது, உன்னிடமிருந்து உண்மையைத் தெரிந்து கொள்ள.

லலி: உண்மை! உம், மோகனைப் பற்றித்தானே லீலா?

லீலா: ஆம்! உன் காதலன் மோகன் என்று கூறினையே, அது உண்மையில் நிஜந்தானு?

லலி: சந்தேகமில்லாமல் நிஜம் தான்!

லீலா: லலிதா! மோகன் எனக்குரியவர் என்பது உனக்குத் தெரிந்திருந்தும் அவரை என்னிடமிருந்து பிரிக்கப் பார்க்கிருய். இது நியாயமில்லை.

லலி: ஏன் லீலா! நீ நேற்று வந்தவள். எனக்கும்மோகனுக்கும் உள்ள உறவு பற்றி உனக்குத் தெரியாது. அவரை என்னிடமிருந்து பிரிக்கப் பார்க்கிருய்!

லீலா: அப்படியென்ருல் மோகன் உன் காதலை ஏற்றுக் கொண்டாரா?

லலி: ஏன் ஏற்றுக் கொள்ள மாட்டார்? ஆனல் அவருக்கும் எனக்கும் மத்தியில் நீ இருக்கும்வரை...

லீலா: லலிதா! மோகன் உன்னை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்றுக் கொள்ளவும் மாட்டார். இதெல்லாம் உன் சதித்திட்டம்.

லலி: என்ன வேண்டுமென்ருலும் சொல்லிக் கொள்! எங்கள் காதலின் ரகசியம் உனக்குப் புரியாது.

லீலா: லலிதா! ஒன்றும் புரியாதது இல்லை. மோகனிடம் நீ காதலை வேண்டிக் கெஞ்சியதும், அவர் உன்னை உதறித்தள்ளியதும், நீ அவர் போட்டோவைத் திருடிக்கொண்டு வந்து என்னை ஏமாற்றியதும் நன்ருகப் புரிந்துகொண்டுதான் இருக்கிறேன்.

லலி: இதனுல் அவரை உனக்கு அர்ப்பணம் செய்து விடுவேன் என்று கனவு காணுதே. அது ஒருநாளும் இல்லை. லலிதா முதல் யத்தனத்தில் தோற்ருள். ஆனுலும் வெகு சீக்கிரத்தில் அவள் ஜெயிப்பாள். மோகனை இழக்கப் போகிறவள் நீ! மணக்கப் போகிறவள் நான்!

லீலாவுக்கு ஆத்திரம் பிறிட, பளீரென்று லலிதாவின் கன்னத்தில் அறைந்து விட்டுவிடு திரும்புகிருள். மோகன் நிரபராதி என்று அறிந்து அவனிடம் ஓடுகிருள். மோகன் இதை எதிர்பார்த்தவன் போலப் பேசுகிருன்.

மோக: லீலா..!

லீலா: மோகன்..!

மோக: லீலா! நான் நிரபராதி என்பதை நீ உணர்வாய்; எப்படியும் இங்கே வந்து சேருவாய் என்றே எதிர்பார்த்தேன்.

லீலா: மோகன்! நீ என்னை மன்னிப்பாயா?

மோக: நீ மொழிந்த ஒவ்வொரு வார்த்தையும் என் மனதைக் கவர்ந்தது. காதல்மாரியாகப் பொழிந்தது என்னுள் நிறைந்து கொண்டிருக்கும் உன்னைப் பிரிந்து எப்படி நான் வாழ்வேன் என்ற கவலைதான் என்னை வாட்டியது லீலா!

லீலா: நான் தவறு செய்து விட்டேன். வீணுக உன்னை அவமதித்து விட்டேன்.

மோக: வருந்தாதே! மிருதுவான உன் ஸ்பரிசத்தால் உவகை பூத்து விட்டது. இருளாகியிருந்த உன் உலகத்தில் சூரிய ஒளி தோன்றிவிட்டது.

லீலா: மோகன்!

மோக: லீலா!

இருவரும் தழுவியபடி ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றனர்.

காட்சி 5

மோகனை எப்படியும் அடையத் தீர்மானித்த லலிதா, ஆணுடையில் பி. ஆர். எஸ். பாபு என்ற பெயரில் ஓர் இரவில் மோகனிடம் வருகிருள். அவளை யறிந்து கொள்ள முடியாத மோகன் வரவேற்று உபசரிக்கிருன். படுக்கையிலிருந்தபடியே பேச்சு ஆரம்பமாகிறது.

லலி: மனம் ஓரிடத்திலே இல்லே! சரியான தூக்கமும் வரல்லே!

மோக: நான் ஒவ்வொரு நாளும் லேட்டாத்தான் தூங்கறது வழக்கம்.

லலி: ஆ! அதற்குக் காரணம் எனக்குத் தெரியும்! நீங்கள் லலிதாவிடம் கொண்டிருக்கும் காதல் தானே?

மோக: லலிதான்னு...... எந்த லலிதா?

லலி: உங்களோடும் விட்டலோடும் காலேஜிலே படிக்கலே, அந்த லலிதா. அன்று விட்டலிடம் உங்க சமாச்சாரத்தை யெல்லாம் மூட்டை மூட்டையா அவிழ்த்தா...

மோக: என்ன சொன்ளுள்?

லலி: அவளுடைய உயிரையே உங்களிடம் ஒப்படைத்திருப்பதாகச் சொன்ளுள். நீங்களும் அப்படித் தானே?

மோக: இல்லே. எனக்கு அவளிடம் பழக்கம் உண்டு; ஆனல் காதல் இல்லே. இரக்கம் உண்டு; காமம் இல்லே.

லலி: அவள் இப்பொழுது இங் கிருந்தால்..?

மோக: அது எப்படி முடியும் மிஸ்டர் பாபு? இது என் வீடு. இது என் சொந்தப் படுக்கையறை. மணியோ ஒன்று. அது இருக்கட்டும். ஏதோ ஒரு பிஸினஸ் சம்பந்தமாய் நீங்கள் வர்றதாக விட்டல் எழுதி யிருந்தாரே.

லலி: ஆமாம். அது ஒரு முக்கிய மான பிஸினஸ்தான். ஏன், 'ஒப்பனு' சொல்லட்டுமா? விட்டலிடம் உங்க லலிதா போய் அழுதாள். அவர் அந்த விஷயமாகத்தான் என்னை உங்களிடம் அனுப்பிச்சார்.

மோக. ஏன், விட்டலுக்கே வர முடியாதாமா?

லலி: இது 'டெலிகேட் மேட்டர்' இல்லேயா? அதனுல்தான் நானே...

மோக: நான்ஸென்ஸ்...

லலிதா பாபு வேஷத்தைக் களைந்து உண்மை லலிதாவாக மோகன் எதிரே நிற்கிருள்.

லலி: மோகன்!

மோக: ஆ, லலிதா! நான் கனவா காண்கிறேன்?

நல்ல நினைவு

அனி பாக்ஸ்டர் குறுகுறுப் பான நடி; தமாஷ் பேர்வழி. ஒரு சமயம் அவர் தனது தாத்தா வைப் பற்றி விளையாட்டாக ஒரு விஷயத்தைச் சொன்னர். 'என் தாத்தா தன் திருமண தினத் தன்றிரவு ஒரு சிகப்பு போர்வை யைப் போர்த்திக்கொண்டிருந் தார். ஆஹா! அந்தப் போர்வை யுடன் அவரைப் பார்க்கும போது எவ்வளவு அழகாக இருந்தார் தெரியுமா?' —தாத் தாவின் கல்யாணத்தை பேத்தி பாக்ஸ்டர் பார்த்ததாகச் சொன்னதை, தாத்தாவிடம் ஒரு நண்பர் சொன்னர். அதற்கு அனியின் தாத்தா என்ன சொன் ஞர் தெரியுமா? "இருக்கலாம் இருக்கலாம்! ஆனல் எனக் குத்தான் சரியாக நினைவில்லே. அதாவது அனி என் பெண்ணு அலலது பேத்தியா?" என்று கூறினர். அனி அவரது பெண் ணாக இருந்தாலும்கூட அவரது திருமணத்தைப் பார்த்திருக்க முடியுமா? தாத்தா ஏமாந்து போய்விட்டார்! இதை அனி பாக்ஸ்டர் இன்றும் தன ஹாலி வுட் சகபாடிகளிடம சொல்லிச் சிரிக்கிருராம்!

மோக: நான் உன்மீது பரிதாபப் படுகிறேன் லலிதா.

லலி: அதுதான் காதலுக்கு முதல் படி மோகன்!

மோக: இல்லை, ஒரு நாளும் இல்லை. பகைவன் மீதும் பரிதாபப் படுவது இயற்கைதானே?

மோக: ஒரு பெண்ணுக்குரிய அணிகலத்தை இழந்துவிட்டு, ஆண் வேஷம் தரித்துக் கொண்டு, இந்த அர்த்த ராத்திரியில் ஒரு இளைஞனின் அறைக்குள் நுழைந்த உனனால் என்னை மயக்க முடியாது.

மோகன் அவளை உதறித் தள்ளுகிறான்.

மோக: லலிதா! நீ உளறுவது காதல் என்கிறாய். இல்லை. காமம் என்கிறாய். இல்லை. ஐக்கியம் என்கிறாய். இல்லை. அதுவும் இல்லை. உன் உருவத்தில் பாதகம் பொலிகிறது. பொறாமை மிளிருகிறது. வஞ்சகம் ..

லலி. மோகன்! உன் கோபத்தில் நான் காதலைக் காண்கிறேன். வா. சந்தர்ப்பத்தைக் கைவிடாதே. வா!

மோக: லலிதா! நீ என்னை உண்மையாகக் காதலிப்பவளென்றால் என்னை மறந்துவிடு. நீ ஒரு பெண். உன்னைப்போன்ற ஒரு பெண் லீலா! அவளுடைய ஹிருதய சாந்திக்காகவாவது என் மேல் கொண்ட மையலைத் துறந்துவிடு.

லலி: உனனிடம் நான் அளித்த காதல் தத்தளிக்க, தங்குமிடமில்லாமல் தயங்க அதனால் இந்தப் பெண்ணுள்ளம் ஏங்க, நீ என்னை நிராகரிப்பதா? இதுதான் உன் முடிவா?

மோக: ஆம்...

லலிதா ஏதோ ஒருவிதத் தீர்மானத்துடன் போய் விடுகிறாள்.

காட்சி 6

லீலாவின் வீட்டில் அவள் அறையில் மோகனைக் கேலி செய்கிறாள் அவள்.

லீலா: நீங்கள் என்னையே சுற்றிக் கொண்டிருப்பதற்கு நான் என்ன தேவகன்னிகையா?

பிரபல சினிமா நக்ஷத்திரங்களின்
வாழ்க்கைச் சித்திரங்கள்

அழகிய மூவர்ண அட்டையுடன்

1. ஜி. வரலக்ஷ்மி
2. பண்டரிபாய்
3. கிருஷ்ணகுமாரி

மற்றும் இதர நக்ஷத்திரங்களின் புத்தகங்கள்
தொடர்ந்து வெளிவரும்.

தனிப் பிரதி 3 அணா. வி. பி. பி. கிடையாது. முன் பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும். ஏஜெண்டுகளுக்கு 25% கமிஷன் உண்டு.

மோகன் அண்டு கோ.,

43, லிங்கிசெட்டி தெரு, சென்னை–1.

டைரக்டர்: இந்த மாதிரி கிருப்பு வெச்சவங்களுக்கு நான் சான்ஸே தர்ரதில்லேப்பா!

மோக: காரணத்துக்காக உன்னை நேசிப்பது காதலாகுமா லீலா? அர்த்தமில்லாமல் உன்னோடு கொஞ்சுவது, அர்த்தமில்லாமல் உன்னோடு குலாவுவது, அர்த்த மில்லாமல் உன்னை யணைப்பது இவைகள்தானே உண்மையான காதலுக்குச் சான்று கோல்?

லீலா: நீங்கள் காதல் மந்திரத்தில் நிபுணனா என்ன?

லீலாவுக்கு மூன்று மாதம் என்பது லேடி டாக்டர், மெடிகல் காலேஜ் பிரின்ஸிபால் முதலியோர் மூலம் தெரிந்ததும் பெற்றோர் வருந்தினாலும் தவறு தங்களுடையதே என்று திருந்தி விடுகின்றனர். லீலாவை விஷமிட்டுக் கொல்லத் தீர்மானித்து வந்த லலிதா மோகன் காரில் அறைபட்டுச் சாகிறாள். இந்த அதிர்ச்சியால் லீலாவின் கரு கலைந்து விடுகிறது.

காட்சி 7

லீலா டாக்டர் பரீட்சையில் தேறி விடுகிறாள். அவள் விருப்பப்படி பாகம் பிரித்துக் கொண்டு வந்து அவளுக்கு ஒரு டிஸ்பென்ஸரி வைத்துக் கொடுக்கிறான் மோகன். சமூக சேவையில் பெரு மகிழ்ச்சி லீலாவுக்கு. ஆனால் சங்கரின் வீட்டிலே சோகம் தாண்டவமாடுகிறது. பத்மா மரணப் படுக்கையிலிருக்கிறாள்.

பத்: என் வியாதி என்னைக் கொன்று விடும்போலிருக்கிறது.

சங்: அப்படியெல்லாம் சொல்லாதே பத்மா! நீயே இப்படிச் சொன்னால் எனக்கும் என் குழந்தைக்கும் கதி?

பத்: என் குழந்தைகளை நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள்! குற்றங்களைப் பொருட்படுத்தாமல் என் குழந்தைகளை, தெய்வம் காப்பாற்றுவது போல் காப்பாற்றுங்கள்.... குழந்தைகளே! 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

சங்: இந்த வீண் பேச்செல்லாம் இப்போது எதற்கு?...சந்தர்! அம்மாவுக்கு மருந்து கொண்டு வா!

ஆனால் பத்மாவின் உயிர் அதிக நேரம் தங்கவில்லை. பிரசவ வேதனை தாங்காது அவள் மாண்டு போகிறாள். லீலாவும் மோகனும் ஓடி வருகிறார்கள். குழந்தைகளின் பொறுப்பைத் தான் ஏற்பதாகக் கூறி சங்கரைத் தேற்றுகிறாள் லீலா. மோகன் அமெரிக்கா செல்கிறான். குழந்தை யுள்ளம் படைத்த லீலா களங்கமற்ற சந்தருடன் ரொம்பவும் சகஜமாகப் பழகுகிறாள். உலகம் இதற்குக் கற்பிக்கும் பெயரே வேறு! ஆனால் அதைக் கேட்பார் யார்?

காட்சி 8

தன் தந்தை மறுமணம் செய்து கொள்வதை சந்தர் வெறுக்கிறான். ஆனால் அந்த விஷயத்தில் சங்கர் பிடிவாதமாக இருக்கவே குடும்பத்தில் பிளவு ஏற்படுகிறது.

சங்: என்னடா, சிறகு வருமுன் பறக்கப் போகிறாயா? நான் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது

என்று நீ பிரசாரம் செய்கிருயாமே! உம். போனது போகட்டும். இனிமே இது சம்பந்தமா யாரிடமாவது பேசினே...

சங் : அப்பா! உங்களால் என் உணர்ச்சியை அடக்க முடியாது; என் தாய் உங்களை ஒரு தெய்வம் போல் பாவித்தார்கள். அவர்கள் இறந்து இன்னும் மூன்று மாதங்கள் ஆக வில்லை. இதற்கிடையிலா நீங்கள் கல்யாணம் செய்து கொள்ளத் திர் மானிப்பது?

சங் : வளர்த்த காய் எஜமானைக் கடிக்குமாடா?

சங் : உங்கள் குழந்தையைப் பெற முடியாமல்தானே அவர்கள் மாண்டார்கள்? இரக்கமில்லாத நெஞ்சமுடையவரா நீங்கள்? இதோ இந்தப் படத்தைப் பாருங்கள்... உங் கள் கண்கள் கலங்காததைப் பார்க்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

மனைவியின் படத்தை விட்டெறி கிருன் சங்கர்.

சங் : மூடுடா வாயை!

சங் : சிறு வயதிலிருந்தே என்னை அதட்டியும் அதிகமாகப் பயமுறுத்தி யும வந்தீர்கள். நான் இவ்வளவு பெரியவனுகியும என் மேல் என் தாய் படத்தை எறிந்து, என்னையும் அவர் களையும் அவமதித்தீர்கள். நானும் உங்களை அவ்வாறு நடத்த முடியும். ஆனுல் என் தாயாரும் நீங்களும் எனக்கு ஊட்டிய கல்விதான் என்னைத் தடுக்கிறது. நீங்கள் என் தாய்க்குப் பிறகு, என்னிலும் வயது குறைந்த ஒரு பெண்ணை மணக்கப் போவதால் நான் இன்றே உங்கள் வீட்டை விட்டு வெளியேறுகிறேன்.

சங் : போடா வெளியே!

சந்தர் வீட்டை விட்டு வெளி யேறி விடுகிருன்.

காட்சி 9

பிரேமாவின் பெற்ருேர் ஏழைகள். சங்கருக்கு அவளை மண முடிக்க பெற்ருேர் தீர்மானிக்கின்றனர். தன்னை வயோதிக சங்கருக்கு மண முடிக்கத் தீர்மானித்த தறிந்து துடிக்கிருள் அவள். தந்தையிடம் அது வேண்டாம் என்று மன்ருடு கிருள்.

பிரே : அப்பா! அந்த வரன் எனக்கு வேண்டாம். பணத்திற்கு அடிமையாக்கவா என்னைப் பெற்றீர் கள்? என்னைக் காப்பாற்றமாட்டீர் களா அப்பா?

தாய் : ஐயோ! என் மகள் வய துக்குத் தகுாத ஓர் ஏழையாவது இல் லையா? பெற்ற வயிறு பதறுகிறதே!

தந் : (மனைவியிடம்) நீ பேசாதே! ......பிரேமா!

பிரே : அப்பா! என் தேகத்தைத் தந்தது என் தீபத்தைத் தணிக்கத தானு? நான் பணத்தை விரும்ப வில்லை; மணத்தையே விரும்பினேன். இனத்தை விரும்பவில்லை; குணத் தையே விரும்பினேன்.

தந் : பிரேமா! பெட்டிப் பாம்பாக அடங்கியிருந்த நீ படமெடுத்துச் சிற ஆரம்பித்து விட்டாய்! தாய், தந்தை யர்களை எதிர்க்கவும் சமூகக் கட்டுப் பாட்டை மீறவும் துணிந்துவிட்டாய்! போ உள்ளே! உனக்குப் புருஷனு கப் போவது சங்கர்தான்.

பிரே : அப்பா! அப்படியென்ருல் என்னை வளர்த்த உங்கள் கையா லேயே என்னைக் கொன்று விடுங் கள். அவமே பிறந்த நான் சவமாகத் தான் வேண்டும். அப்பா! நான ஒரு யுவதி! என் வாழ்க்கைத் துணை வனுக ஒரு கிழவனைத் தீர்மானித் திருக்கும் நீங்கள் பெற்ருேர்களா? கருணையென்பது உங்களுக்கு இல் லையா? கண்ணில்லையா? இரக்க மில்லையா? என்னைப் பெற்றதும் வளர்த்ததும் அறிவு புகட்டியதும் என் வாழ்க்கையைப் பாழாக்கத்தானு?

தந் : சி. மூடு வாயை!

பிரே : அப்பா! என் வாழ்க்கை யில் அருந்தென்றல் வீசுமென்று எண் ணினேன். அதைப் பெருஞ் சூரு வளியாக மாற்றினீர்கள்! நறுஞ்சோலை வனத்தை நாடினேன்: வெறும் பாலை வனத்தை நல்கினீர்கள்! கோட்டை கள் கட்டினேன்: அவைகளை ஓட்டை யாக்கினீர்கள்! அஞ்சினேன்: மிஞ்சி

னீர்கள்! பிதற்றினேன்; அதட்டினீர்கள்! கதறினேன்; உதறித் தள்ளினீர்கள்! உங்களைப்போன்ற பெற்றோர்களின் அக்ரமத்தால் எத்தனையோ பெண்கள் சுகத்தையிழந்து சோக வாழ்க்கை நடத்துகிறார்கள். எத்தனையோ பெண்கள் மானத்தை இழந்து ஈன வாழ்க்கையில் ஈடுபடுகிறார்கள். இன்னும் எத்தனையோ பெண்கள் தங்கள் உடலையே வெறுத்துக் கடலில்........

தங் : சீ, அதிகப் பிரசங்கி!

ஓங்கி கன்னத்தில் அறைகிறார். பிரேமா துடி துடிக்கிறாள். வாழ்க்கையில் வெறுப்புற்ற அவள் வீட்டை விட்டு வெளியேறி கடலில் குதித்து விடுகிறாள். ஆனால் நல்ல வேளையாக சந்தர் அவளைக் காப்பாற்றி டாக்டரிடம் அழைத்து வருகிறான். இன்ஸ்பெக்டர் பிரேமாவைக் காதலிக்கிறார். ஆனால் சந்தரிடம் அவள் அன்பு கொள்ளவே அவனைத் தண்டிக்கத் திட்டமிடுகிறார். ஆனால் அவர்களோ?

சந் : இந்தா, நீ கேட்டாயே என் படம்!

பிரே : ஆ ஹா! கரைந்துபோன என் காதல் கருவாகிறது சந்தர்! உடைந்துபோன என் உள்ளம்...

சந் : உருவாகிறதா? அணைந்திருந்த என் ஊக்கம் பிரகாசிக்கிறது பிரேமா!

பிரே : அந்தப் பிரகாசத்தில் எனக்கு ஒரு பங்கு தருவாயா?

சந் : பங்கா? வேறு எதைப் பிரித்தாலும் அதைப்பிரிக்க முடியாதே!

பிரே : ஏன் பிரிக்க முடியாது?

சந் : அந்தப் பிரகாசம் நீதானே பிரேமா!

பிரே : சந்தர்!

சந் : பிரேமா!

பிரே : சந்தர்! உன் வார்த்தை, உறைந்திருக்கும் என் உணர்ச்சியை உருக்குகிறது சந்தர்! கடலுக்குக் கரையிருந்தாலும் காதலுக்குக் கரை ஏது? சண்டமாருதப் புயலினால் உப்புக்கடல் கொந்தளிக்கும். காதல் மாருதப் புயலினால் சாந்தம் நிலவும். நரகமும் சுவர்க்கமாக மாறிவிடும்.

சந் : நாம் இருவரும் கொஞ்சிக் குலாவும்போது சூரியன் ஒரு திசையிலிருந்து மறுதிசைக்கு மாறினாலும், அவன் வீசும் சுடர் மங்கி இருள் பொங்கினாலும், அந்த இருளைப் போக்குவிக்கச் சந்திரன் பிரகாசித்தாலும், அந்தச் சந்திரனைக் கவர கிரகணம் தோன்றினாலும், காதலில் சொக்கியிருக்கும் நமக்கு இவைகளைப் பற்றி என்ன தெரியும்?

காட்சி 10

அமெரிக்காவிலிருந்து திரும்பிய மோகன் சந்தர்-லீலா பற்றி விபரீதமாகக் கேள்விப் படுகிறான். ஒரு மொட்டைக் கடிதமும் அவர்கள் நடத்தையும் அவன் மனதிலிருந்த சந்தேகத்தை உறுதிப் படுத்துகின்

நல்ல விஷமம்!

மெர்லி ஒபிரான் என்ற ஹாலிவுட் நடிகை போர்முனையிலிருந்த அடிபட்டு வந்த கைதிகளைப் பார்ப்பதற்காக ஒரு ஆஸ்பத்திரிக்கு வந்தார். அங்குள்ள ஒவ்வொரு நோயாளியிடமாகச் சென்று போர் முனையில் அவனது செயல்களை விவரிக்கும்படி கேட்டார். ஒருவன் சொன்னான். "நான் என் கைகளால் மூன்று எதிரிகளைக் கொன்று வீழ்த்தினேன்!". ஒபிரானுக்கு பரம சந்தோஷமாகிவிட்டது. உடனே அவனது கைகளை வாரியணைத்து முத்தம் கொடுத்தார். ஒபிரானின் செய்கையை அந்த நோயாளிக்குப் பக்கத்தில படுத்திருந்த நோயாளியும் கவனித்து வந்தான், ஆகவே ஒபிரான் தன்னிடம் வந்து கேட்டபோது "அவனோ கைகளால் எதிரிகளைக் கொன்று உங்கள் அனைப் பெற்றான். நான் என் வாயினாலேயே எதிரிகளைக் கடித்துக் கொன்றேன்!" என்றான். அவனது விஷமத்தனம் எப்படிப்பட்டது பார்த்தீர்களா?

சைத்ரீகர்: (மனைவியிடம்) கொஞ்சம் இருன்னு, அவசரப்படறயே! பயலுக்குக் காண்டா மிருகம் படம் போட்டுத் தரவேணுமாம்!

றன. படுக்கையறையில் அவளைச் சுடு சொல்லால் துன்புறுத்துகிறான் மோகன்.

மோக: உன்னைக் காதலித்தேன்: என்னை வஞ்சித்தாய்! நம்பினேன்: துரோகம் செய்தாய்! பூஜித்தேன்: ஏமாற்றினாய்! நீ என்னைக் காப்பாற்றுவாய் என்று கருதியிருந்தேன். என் உயிருக்கே யமனாக மாறினாய், வஞ்சகி!

லீலா: ஆ. வஞ்சகி! உன்னை உண்மையாகக் காதலித்தது வஞ்சகமா? என் உயிரினுள் வைத்து உன்னைத் தியானித்தது வஞ்சகமா? மோகன்! ஏன் இவ்வளவு பயங்கரமாய்த் தென்படுகிறாய்? உன் கண்களில் கோபப்பொறி வீசுகிறதே!

மோக: பாதகி! பேசாதே! நீ உயிருடன் இருப்பது இந்த பரிசுத்தமான உலகத்துக்கு ஈனம். உன்னைத் தாங்கும் பூமிக்குச் சுமை! பெண்களின் பெருமைக்கே பங்கம்! உத்தமிகளின் கற்புக்கே களங்கம்! காதலைக் கொன்றாய்! கடமையைச் சிதைத்தாய்! சத்தியத்தை குலைத்தாய்! தர்மத்தையே அழித்தாய்! விபசாரி!

ஆத்திரத்துடன் தன்னைத்தாக்க முற்படுகிறவனைத் தள்ளுகிறாள் லீலா.

லீலா: நான் சாவதற்கு அஞ்சவில்லை. ஆனால் நான் ஏன் சாக வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள எனக்கு உரிமையில்லையா? என்னை விபசாரி என்கிறாய்! எப்படி நான் விபசாரியாவேன்? உன்னால் நிரூபிக்க முடியுமா, சொல்?

மோக: நான் ஊரிலில்லாதபோது சந்தருடன் நீ புரிந்து கொண்டிருந்த லீலா விநோதங்களை உலகமே கண்டிருக்கிறது! இல்லை என்கிறாயா? இதைப் பார்!

மொட்டை கடிதத்தைக் கொடுக்கிறான். லீலா படிக்கிறாள்.

லீலா: இரக்கமற்ற இந்தச் சமூகத்தின் அம்பு வீச்சுகளைத் தாங்கும் வல்லமை எனக்கு இருக்கிறது. உலகத்தின் அவதூறை நான் பொருட்படுத்தவில்லை. உலகத்திற்குப் பதில் சொல்லவும் நான் தயாரில்லை. உன் அண்ணன் மகனுடன் நான் வீட்டில் ஓடி விளையாடியது உண்மை! பந்தாடியது உண்மை! சீட்டாடியது உண்மை! படகில் ஏறிக் கொண்டு நதியில் சுற்றியதும் நீந்தியதும் உண்மைதான்! ஆனால் என் கற்பு கற்பாகவே இருந்தது.

மோக: சந்தர் உன் கண்ணீரைத் துடைத்ததைக் கண்டேனே! இல்லை என்கிறாயா? அவனை நீ தழுவியணைத்ததை • நான் நேரில் பார்த்தேனே. இதையும் இல்லை என்கிறாயே.

லீலா: தாயின் கண்ணீரைத் தனயன் துடைத்தது தவறா? வேடிக்கை விளையாட்டில் ஓடிப் பிடித்து வாரியணைத்தது தவறா? நேர்மையான இந்த என் நடத்தையிலா குற்றத்தைக் கண்டாய்? இதற்குத்தானா என்னைக் கொலை செய்ய முற்பட்டாய்? மோகன்! இனிமேல் என் கடமை தீர்ந்து விட்டது. எப்பொழுது நீ என்னைக் கொலை செய்ய முன்வந்தாயோ அதைச் செய்து முடித்துவிடு. (துப்பாக்கியை நீட்டி) சுடு! என் ஹிருதயத்தைக் குறி வைத்துச் சுடு! உன்னை நேசித்த இந்த

ஹிருதயம் உன்கையாலேயே மடியட்டும்!

துப்பாக்கியை நடுங்கும் கைகளுடன் வாங்கும் போது சந்தர் பிரவேசித்து அதை மோகனிடமிருந்து பிடுங்குகிறன்.

சந் : சிற்றப்பா! என் அன்னையைச் சுட வேண்டாம். என்னையே சுடுங்கள்! பரிசுத்தமான உங்கள் பத்தினியின் ரத்தத்தை இந்தப் பாழும் தரையில் சிந்த வேண்டாம். அதற்குப் பதிலாக என் ரத்தத்தையே உங்கள் ஆசை தீரப் பருகுங்கள். இரவு பகல் என்னேரமும் உங்களையே எண்ணிக் கொண்டிருக்கும் இந்த உத்தமியைப் பாருங்கள்? உங்களுக்கு இரக்கம் வரவில்லையா? உங்களுடைய கோரச் செய்கையை நினைத்து உங்கள் ஹிருதயம் வெடிக்கவில்லையா? உங்கள் கண்கள் கலங்கவில்லையா?

மோக : சந்தர்...!.. லீலா! நீ பதிவிரதை என்பதை இப்பொழுதுதான் உணர்ந்தேன். இந்தக் கடிதம் எழுதியவன் மனிதன் அல்ல, மிருகமாகவும் இருக்க முடியாது. மனிதன் திர ஆராய்வான். மிருகத்திற்குச் சந்தேகிக்கும் சக்தி கிடையாது. உனக்குப் புருஷனாக இருக்க நான் தகுதியற்றவன். என்னை மன்னித்துவிடு லீலா!

சந் : (அதே கடிதத்தைப் படித்து விட்டு) விதி என் தந்தையிடமிருந்து என்னைப் பிரித்தது. இப்பொழுது உங்களிடமிருந்தும் என்னைப் பிரிக்கிறது இந்த விதியுடன் நான் போராடவே போகிறேன். நீங்கள் ஒற்றுமையாக வாழுங்கள்.

போய் விடுகிறன்.

காட்சி 11

பிரேமா மீது கொண்ட காதல் பலிக்காமற் போகவே இன்ஸ்பெக்டர், தற்கொலை முயற்சியில் அவளைத் தூண்டி விட்டதாக சந்தர் மேல் குற்றம் சாட்டி சிறைப் படுத்துகிறன். அவள் மீதும் தற்கொலை வழக்கு பதிவு செய்கிறன். அவள் நீதி மன்றத்தில் மன்னிக்கப் பட்டு விடுதலையாகிறள். லீலா சங்கரிடம் ஓடி சந்தரைக் காப்பாற்றும்படி வேண்டுகிறள். அவன் மறுக்கிறன், சந்தரின் மேல் வழக்கு தொடரப்படுகிறது ஆனல் ஏற்கெனவே இன்ஸ்பெக்டர் பிரேமா மீது கொண்ட காதலும் அதற்காகச் செய்த சதியும் 'டேப்ரிகார்ட்' மூலம் பதிவாக்கப்பட்டிருந்தன. இன்ஸ்பெக்டர் ஜெனரல் முன்பு விசாரணை நடக்கிறது.

வக் : (இன்ஸ்பெக்டரிடம்) பிரேமா தானே தற்கொலை செய்ய முயன்றதாகக் கோர்ட்டில் ஒப்புக் கொண்டாள், அவ்வளவுதானே?

இன்ஸ் : பிரேமாவின் ஸ்டேட்மென்ட் பொய் என்பது எனது அபிப்பிராயம்.

வக் : உமது அபிப்பிராயத்தைத் தான் கோர்ட்டார் ஆமோதிக்கவில்லையே! இன்ஸ்பெக்டர்! அது சரி. பிரேமா கடலிலே குதிப்பதற்கு முன் அவளும் சந்தரும் சந்தித்ததே யில்லை என்பது உமது விசாரணையின்போது புலனுகவில்லையோ?

இன் : பிரேமாவுக்குத் தைரியம் கொடுத்தது சந்தர் என்றுதான் நான் கருதினேன்.

வக் : உமது கருத்துக்கும் நிகழ்ச்சிக்கும் வெகுதூரம் இன்ஸ்பெக்டர்! நீர் சந்தரைக் கைது செய்தது, பிரேமாவை விட்டு அவனைப் பிரிக்கத் தானே?

இன் : ஸார்! இந்தக் கேள்வியை நான் ஆக்ஷேபிக்கிறேன்.

இ. ஜெ : இது குறுக்கு விசாரணை! நான் அந்தக் கேள்வியை அனுமதிக்கிறேன்.

வக் : அப்படித்தானே?

இன் : இல்லை!

வக் : நீர் இன்னும் இதைத் தற்கொலை உடன்படிக்கை என்று கருதுகிறீர்?

இன் : ஆம்!

வக் : அப்படியென்றல் உமது அபாண்டமான இந்தக் குற்றச்சாட்டு பிரேமாவுக்கும் சந்தருக்கும்தானே இருக்கவேண்டும்? சந்தரை மட்டும் குற்றஞ் சாட்டக் காரணம் என்ன?

இன் . பிரேமாவை மன்னித்து அவள் சாட்சியத்தை எதிர் பார்த்தேன்.

வக் : அப்படி மன்னிப்பதற்கு மேலதிகாரிகளிடமிருந்து உத்திரவு பெற்றீரா? பெறவில்லைதானே?...... ஸார்! கேஸ் 'ப்ருவ்' ஆகி விட்டது. தற்கொலை உடனபடிக்கை நடந்திருக்கக் காரணமில்லை. ஏனென்ருல் பிரேமா தன்னைத்தானே கொன்று கொள்ள முற்பட்டதாகக் கோர்ட்டில் ஒப்புக் கொண்டாள். பிரேமாவைக் கடலிலிருந்து காப்பாற்றித் தன் உடலிலிருந்தே ரத்தத்தையும் கொடுத்த சந்தர் பிரேமாவின் தற்கொலைக்கு ஏதுவாக இருக்கக் காரணமில்லை. இவர் சந்தரைச் சதி செய்வதற்காக வேண்டியே இம் மாதிரி திட்டம் போட்டுக் கொண்டு, அன்று அவனைக் கைது செய்து, ரத்த காயம் உண்டுபண்ணி மான பங்கப் படுத்தினர் என்பது உறுதியாகி விட்டது.

இ. ஜெ. : இன்ஸ்பெக்டர்! இதற்கு நீர் என்ன சொல்கிறீர்?

இன் : இதெல்லாம் சந்தரின் சூழ்ச்சி ஸார்!

இ. ஜெ. : அப்படியா? 406 எங்கே?

'டேப் ரிகார்ட்' மூலம் உண்மை வெளியாகிறது.

இ. ஜெ : நீர் குற்றவாளி என்பது இந்த விசாரணையில் புலனுகிறது. உம்மைப் பற்றிய குற்றச் சாட்டுகள் அடிக்கடி வருவதால் நானே 'டேப் ரிகார்'டை 406 இடம் கொடுத்திருந்தேன்.

இன் . ஸார்! நான் இப்பொழுதே என் உத்தியோகத்தை ராஜினமா செய்கிறேன்.

இ. ஜெ : இந்தச் சந்தர்ப்பத்தில் அதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். பொதுமக்களைத் துஷ்டர்களின் பலாத்காரத்திலிருந்து காப்பாற்றுவதற்குப் போலீஸ் அவசியம். ஒவ்வொரு போலீஸ் உத்தியோகஸ்தரும் குடிமக்களின் மித்திரர்தான்' சத்துருவல்ல. உம்மைப் போன்ற ஒரு சிலரால்தான் இலாக்காவுக்கே அவமானம் நேருகிறது. உம்மை 'டிஸ்மிஸ்' செய்யும்படி அரசாங்கத்துக்கு அறிவிக்கிறேன். அதுவரை தற்காலிகமாக உம்மை வேலையிலிருந்து தள்ளியிருக்கிறேன். ... மிஸ்டர் சந்தர்! இந்தத் தவறு நேர்ந்ததற்கு நான் வருந்துகிறேன்.

சந் : தாங்க்யூ!

விடுதலையாகி வெளியே வருகிருன் சந்தர்.

காட்சி 12

சங்கரின் வேலையாள் ரத்னம் அவரிடம் சந்தர் பற்றிக் கூறி வருந்துகிருன்.

ரத் : கல்யாணம் பண்ணிக்கணும்னு இருந்திங்க. குழந்தைகளுக்காகப் பண்ணுதிருக்கிட்டீங்க! எஜமான்! அன்னிக்கு அம்மா படத்தைப் பார்த்து நீங்க கண்ணீர் வடித்ததை நான் பார்த்தேன் எஜமான். பார்த்தேன். அந்தம்மா பெத்த பிள்ளை தானே இதவும்? அதை நெனைச்சாலே எஜமான்... உங்க காலைப் பிடிக்கிறேன் எஜமான்!

சங் : என்னடா இது? அடாடாடா! உன் தொந்தரவு தலையை வலிக்குதுடா, தலையை வலிக்குது. போதும் அழுகையை நிறுத்து!

ரத் : எஜமான்! நீங்க உங்க மகனை மன்னிக்காட்டி நான் உண்ணுவிரதம் இருக்கப் போறேன் எஜமான்!

சங் : ஆ! அதைச் செய்யடா முதல்லே!

ஸ்வர்ணு : அப்பா! என் அண்ணன் உங்கள் மகன். அவனுக்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமையைச் செய்தீர்களா? இல்லை. அம்மாவின் மீது இருந்த அன்பினுல் உங்கள் மறுமணத்தை அவன் எதிர்த்தான். இது குற்றமா? இனிமேலாவது உங்கள் குற்றத்தை உணருங்கள் அப்பா! உங்கள் உடல்தானே அண்ணுவின் உடலும்?

மகள் ஸ்வர்ணுவின் சொற்கள் சங்கரின் உள்ளத்திலே மறைந்திருந்த புத்திரபாசத்தைத் தலை

தூக்கச் செய்து விட்டன. தவறை உணர்ந்து லீலாவிடம் ஓடுகிறுன்.

சங் : லீலா! சந்தர் ஒரு குற்றமும் புரியவில்லை. அவனை நான்தான் வீணுக விரோதித்து விட்டேன். இனி மேல் அவனைப் பார்க்காமல் எனக்கு உயிர் வாழ முடியாது!

லீலா : அத்தான்! நீங்கள் சந்தரைத் தேடிக் கொண்டு ஒருநாள் இங்கு வருவீர்கள் என்று எனக்குத் தெரியும்.

சங் : லீலா! என் சந்தரை சமீபத்தில் நீ பார்த்தாயா?

லீலா : என் கண்ணுக்குத் தென்படாமல் இருக்கிறுன். அவனை நானும் பூஜித்துக் கொண்டுதான் இருக்கிறேன்.

சங் : அவனை எப்படியாவது கண்டு பிடித்து என்னிடம் சேர்த்து விடு லீலா!

மோக : அண்ணு! உங்களிடமிருந்து இந்த வார்த்தையைத்தான் நானும் லீலாவும் எதிர்பார்த்தோம்.

லீலா : இன்னென்றும்கூட. நீங்கள் மறு கல்யாணத்தை நிறுத்திவிடும் சேதி.

சங் : இனியும் உனக்குச் சந்தேகமா? என் குழந்தைகளைப் பாதுகாத்துக் கொண்டு இறந்துபோன என் பத்மாவின் ஞாபகமாக உயிர் வாழ்வதுதான என் திட்டம் லீலா!

போகிறுன். சிறிது நேரத்தில் மாணிக்கம் என்பவன் மூலம் சந்தர் இருப்பிடமறிந்து காரில் லீலாவும் மோகனும் போய் பீச்ரோடில் அவனைச் சந்திக்கிறுர்கள்.

லீலா : சந்தர்! வீடு வாசல் இருந்தும் நீ இப்படி வீதியில் வீணுக அலைவதை என் கண்கொண்டு பார்க்கச் சகிக்கவில்லையே!

மோ : லீலா! இனி மேலும் விசனப்படுவதில் அர்த்தமில்லை. சந்தரின் கட்சிதான் ஜெயித்து விட்டதே! அண்ணு மறு கல்யாணத்தை நிறுத்தி விட்டார்.

சங் : உண்மையாகவா? என் தந்தையின் மனம் மாறிவிட்டதா?

லீலா : ஆம். மாறிவிட்டது. இப்பொழுது உன்னை அடையவேண்டுமென்ற கவலைதான் அவரை வருத்துகிறது.

சங் : அப்படியா?

லீலா : நீ உடனே போய் அவரைப் பார்க்காமல் இருப்பது கூடப் பாபம்தான் அப்பா!

சங் : இதோ போகிறேன்.

ஓடுகிறுன்.

லீலா : என்ன இருந்தாலும் பாசம் இருக்காதா?

மோக : அதனுல்தான் விழுந்தடித்துக் கொண்டு ஓடுகிறுன்.

சந்தர் நேரே தன் வீட்டிற்கு ஓடுகிறுன்.

சங் : அப்பா! அப்பா!!

சங் : உன் லக்ஷியமே நிறைவேறியது. இதோ உன் தாய்! உன் தாயின் மீது உனக்குள்ள பாசம் என மனத்தை மாற்றிவிட்டது. அவளை நானும் பூஜித்துக் கொண்டுதான இருக்கிறேன.

சங் : இந்தப்பாவி செய்த குற்றங்களை மன்னிக்க வேண்டும் அப்பா!

முட்டுக்கட்டை!

ராக் ஹட்ஸன் ஆறடி நாலு அங்குலம் உயரம் உள்ளவர். டைபர் லாரி என்ற நடி ஐந்தடி மூன்றங்குலம் உயரம உள்ளவர். அவரைவிட உயரத்தில் பதின்மூன்று அங்குலம் குறைந்தவர். அவர்கள் இருவரும் ஒரு படத்தில காதலர்களாக நடித்தனர். ஹாலிவுட் படங்களில் காதல் காட்சிகள் என்றுல் முத்தமாரி பொழிவதுதானே? ராக் ஹட்ஸனைவிட டைபர்லாரி குள்ளமாக இருந்ததால் நின்று கொண்டு காதல் காட்சிகளைச் செய்ய முடியவில்லையாம். ஆகவே இருவரும் உட்கார்ந்தவாறே படத்தின் காதல் காட்சிகளைச் சிருஷ்டித்தனராம்!

"என் புஷ்கோட் துணியிலே நீ ரவிக்கை தெச்சுக்கோன்னு, இப்படியா வெட்கப்படவேணும்?"

சங் : நீ செய்த எதையுமே நான் குற்றமாகக் கருதவில்லையே. உன்னை நான் மனப்பூர்வமாக மன்னித்து விட்டேன்.

ஸ்வ : அண்ணா!

89676

சங் : ஸ்வர்ணா!

காட்சி 13

பிரேமா சந்தரின் புகைப் படத்துடன் படுத்திருக்கிருள். அவள் தந்தை வந்து அழைக்கிருர்.

தந் : பிரேமா!

பிரே : அப்பா! உங்கள் அன்பின் பெருக்கால்தான் நான் வாழ்ந்தேன். அன்று நான் அந்த அன்பை இழந்துவிட்டேனே என்று பயந்தேன்; தடுமாறினேன்; ஓடினேன்; கடலில் குதித்தேன். உங்கள்மேல் கொண்ட வெறுப்பால் அல்ல. நீங்கள் தான் என்னை மன்னிக்க வேண்டும்.

போட்டோ கீழே விழுந்து விடுகிறது. அதைப் பார்க்கிருர்.

தந் : இவர் யாரம்மா?

பிரே : இவர்தானப்பா என் உயிரைக் காப்பாற்றினுர்.

தந் : இவர் எங்கிருக்காரு?

பிரே : எனக்குத் தெரியாதுப்பா!

சங்கர் தன் மகனுடன் பிரேமாவின் வீட்டுக்கு வருகிருன். பிரேமாவின் தந்தை வரவேற்கிருர்.

தந் : வாங்க, வாங்க!

சங் : நான் இப்போது உங்கள் சம்பந்தியாக வந்திருக்கிறேன். இதோ என் மகன்.

தந் : இளமையில் வறுமை கொடிது என்பார்கள். ஆனல் நான் கிளியைப்போல் வளர்த்த என் அருமை மகள் அதிருஷ்டசாலிதான். இதோ வரேன்.

உள்ளே போகிருர்.

சந் : அப்பா! என்ன காரியம் செய்யப்போகிறீர்கள்? கடலில் ப்பாய்ந்து தன் உயிரை இழக்கத் துணிந்த ஒரு பெண்ணை காதலித்தேன்...

பிரேமா அங்கு வந்து சந்தரைக் கண்டு பரமானந்தமடைகிருள்.

பிரே : சந்தர்!

சந : பிரேமா!

சங் : அவசரப்படாதிர்கள்!

எங்கோ வாழ்வின் கோடியிலே சாவின் முகட்டிலே சந்தித்தவர்கள் காதலர்களாகி வாழத் துணிந்தார்கள். உலகம் இரண்டுக்கும் இடமளித்தது. தகப்பனுர் மணக்க விருந்த பிரேமாவை சந்தர் மணக்கும்படியாகிறது. மெய்க்காதல் சந்தரையும் பிரேமாவையும் திருமணம் வரை கொண்டு விட்டதில் வியப்பில்லை. இருவரும் மணந்து பெரியோர்களின் ஆசி பெற்றுப் புது வாழ்வைத் தொடங்குகிருர்கள். உலகம் துன்பத்தில் அவர்களைச் சந்திக்கச் செய்து இன்பத்தில் கொண்டு விட்டது. நல்ல உலகம்! அதன் சுழற்சியில் அகப்பட்டு உழலாதவர்தான் யார்?

வருகிறது!
விநோதாவின்
தேவதாஸ்
தமிழ்
லலிதா · சாவித்திரி · நாகேஸ்வர ராவ் · ரங்கராவ்
ஸி. எஸ். ஆர். · எம். என். நம்பியார்
டைரக்ஷன்: வேதாந்தம் ராகவய்யா
சங்கீதம்: ஸி. ஆர். சுப்பராமன் · வசனம்: உதயகுமார் · பாடல்கள்: கே. டி. சந்தானம்
காமிரா: பி. எஸ். ராங்கா · ஆர்ட்: கொட்காங்கர் & வாலி · ஸ்டூடியோஸ்: ரேவதி & நரஸூ
பூரண விநியோக உரிமை:
தல்லம் பிக்சர்ஸ் சர்க்யூட், சென்னை 4 :: பெங்களூர் 2
PSR

REGD. NO. M. 4523 PESUM PADAM